
www.padippakam.com

தசரா அறக்கட்டளை

# கணையாழி

விலை.ரூ.10 ஏப்ரல்,2000 மாத இதழ்



படிப்பகம்

www.padippakam.com

# கணையாழி திரட்டுகள்




'தசரா' அறக்கட்டளை செப்டம்பர் — 95 முதல் இன்று வரை உள்ள இதழ்களை திரட்டுகளாக வெளியிட்டுள்ளது. இத் திரட்டுகள் 6 இதழ்களாக கட்டமைக்கப்பட்டுள்ளன.

வாசகர்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு ஆராய்ச்சி கருத்துக்கள் நிறைந்துள்ள இத்திரட்டுகள் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

| | விபரம் | | ரூபாய் |
|---|---|---|---|
| Vol.– I | 1995 செப்டம்பர் | — 1995 டிசம்பர் | 50.00 |
| Vol.– II | 1996 ஜனவரி | — 1996 ஜூன் | 75.00 |
| Vol.– III | 1996 ஜூலை | — 1996 டிசம்பர் | 75.00 |
| Vol.– IV | 1997 ஜனவரி | — 1997 ஜூன் | 75.00 |
| Vol.– V | 1997 ஜூலை | — 1997 டிசம்பர் | 75.00 |
| Vol.– VI | 1998 ஜனவரி | — 1998 ஜூன் | 75.00 |




பதிவு தபாலில் பெற திரட்டு ஒன்றுக்கு ரூ. 20.00 சேர்த்து அனுப்பவும்.

'கணையாழி' பெயரில் M.O. அல்லது D.D. அனுப்பவும்.
காசோலை பெறப்படமாட்டாது.




**'கணையாழி'**

18, பி.பி.சி. ஹோம், 18, செவாலியர் சிவாஜி சாலை
தி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 432 0013

படிப்பகம்

www.padippakam.com



# பயத்தால் அல்ல... பண்பாடு என்பதால்

அமெரிக்க அதிபர் இந்தியா வந்தார்
வந்தவரை வரவேற்றோம்
பயத்தால் அல்ல... பண்பாடு என்பதால்

இந்திய சுதந்திரத்திற்குத் தேர்தல் அறிக்கையிலேயே
ஹட்லி ஆதரவளித்தார்
சர்ச்சில் எதிர்த்தார்

ஆனால், 1945 லேயே ஐ.நா. சபையில்
இந்தியாவிற்குத் தனிப்பட்ட உறுப்பினர் தகுதி கிடைக்கவும்
இந்திய விடுதலைக்கு ஆதரவளிக்கவும்
அமெரிக்கா முன்வந்தது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா
மிகப்பெரிய ஜனநாயக வல்லரசு அமெரிக்கா.
இந்திய – அமெரிக்க உறவு தொடர்ந்திருக்க வேண்டும்

ஆனால்...
1948, 65, 71, 99 ஆம் ஆண்டுகளில்
பாகிஸ்தான் முரண்டு பிடித்தபோதும்
சீனா படையெடுத்த போதும்
அமெரிக்க ஆதரவு இந்தியாவிற்கு இல்லாமல் போனது.

காஷ்மீர் பிரச்சினை – ஐ.நா. தீர்மானம்
பாகிஸ்தான் – அமெரிக்க இராணுவ ஒப்பந்தம்
அணிசேரா நாடுகள்
இஸ்ரேல் எதிர்ப்பு
இந்திய – ரஷ்ய ஒப்பந்தம்
பொக்ரான் சோதனைகள் என்று
உறவில் விரிசல்கள் தொடர்ந்தன.

இந்தியாவும் அமெரிக்காவும் ஜனநாயக நாடுகள்
எனினும் இந்தியா ரஷ்யாவுடனும்
அமெரிக்கா சீனா, பாகிஸ்தானுடனும்
உறவின் தொடர்ச்சி வரலாற்று அதிசயங்கள்.

கோபத்தின் உச்சம்
PL 480 கோதுமையை இந்திரா நிராகரித்ததும்
அமெரிக்கா கடலில் கொட்டியதும்.

இருபது வருடங்களாக எட்டிப் பார்க்காத
அமெரிக்கா, இப்போது திரும்பிப் பார்க்கிறது.

எதையும் விட்டுக் கொடுக்காமல் இரு நாடுகளின் கைகுலுக்கல்.

கணினி உலகில் அமெரிக்கா தலையெடுக்க
சிலிகான் பள்ளத்தாக்குகளில் இந்தியர்களின் அணிவகுப்பு

கிளிண்டன் சொல்லியிருக்கிறார் : இந்தியா ஏழை நாடல்ல...
இப்போது மட்டுமல்ல எப்போதுமே இந்தியா ஏழை நாடல்ல.

இந்தியாவில் 10% மக்கள் பணக்காரர்கள்
இவர்கள் அமெரிக்க மக்கள் தொகையினும் அதிகமானவர்கள்
ஆனாலும் இந்தியர்க்குப் பல விஷயங்கள் போதாது

மல்கோத்ரா இண்டஸ்ட்ரீஸ் பாரத், பனாமா
பிளேடுகள் விற்ற கடைகளில் எல்லாம்
ஜில்லட் பிளேடுகள்

சரன்ஜித்சிங் கேம்பா கோலா குடித்த
மக்கள் கைகளில் எல்லாம் பெப்சி பானம்

குடிநீர் கிடைக்காத குக்கிராமங்களிலும்
கோகோ கோலா
எப்படி நடந்தது இந்த இரசவாத வித்தை?

வெளிநாட்டு கம்பெனியை விலைக்கு வாங்கி
உற்பத்தியைக் குறைத்து முடக்கிப் போடுவது
பங்குச் சந்தையை விலையேற்றி
கம்பெனியையே காணாமல் அடிப்பது
உலகமயமாக்கல் பொருளாதாரம் என்று
53ஆவது மாநிலமாக ஆக்கிக் கொள்ளத் துடிப்பது
கொத்தடிமையாக மறுக்கும் நாடுகளை
மனித உரிமை பேரில் மிரட்டி வைப்பது
சகோதர நாடுகளுக்குள் சண்டை மூட்டி
சமாதானப் பேச்சில் ஆயுதம் விற்பது

தங்களைத் தவிர அணுகுண்டு சோதிக்கும்
தகுதி யாருக்கும் இல்லையென்று
ஐ.நா. வைக் கொண்டு அதட்டி வைப்பது
என்று ஏகப்பட்ட விஷயங்கள் இந்தியாவிற்குப் போதாது.

ஆனாலும்
அமெரிக்காவிற்குச் சேவகம் செய்ய
ஏற்றுமதியாகும் இந்தியர்க்கு
ஏராளமான பொருட் செலவில்
கல்வியளிப்பது இந்தியா தான்.

எனினும்
அமெரிக்கா செல்ல விசா வேண்டி
நாள்தோறும் கால்கடுக்க நிற்கும் நம்மவர்களை
மனிதப் பிறவியாகக்கூட மதிக்க மறுக்கும்
அமெரிக்கத் தூதரகம்.

ஆனாலும் கூட, கிளிண்டனை வரவேற்க
நாடாளுமன்றம் கூட ரசிகர்மன்றமாகி
இமயம் முதல் குமரி வரை எழுந்து நின்றது இந்தியா

பண்பாடு ஒன்றால் மட்டுமே
இந்தியா பெருமைப்பட இனிமேல் முடியாது.

நம் காலில் நின்று நெஞ்சுயர்த்தி
சாதனை புரியும் சாமர்த்தியம் வேண்டும்.

அப்போதுதான் உலக நாடுகள் உற்றுப் பார்க்கும்
இப்போது அமெரிக்காவின் கடைக்கண் பார்வை
கிளிண்டன் வருகையில்.

கென்னடிக்குப் பிறகு
இந்திய மக்களின் நெஞ்சம் நிறைந்த
இன்னொரு அமெரிக்கர்.

ராஜஸ்தான் கிராமப் பெண்களோடு ஆடிய நடனம்
சாலை ஓர மக்களுக்கும் ஆட்டோ கிராப்
ஹோட்டல் பணியாளர்களுடனும் கைகுலுக்கல்
என்ற மனித
நேயத்தை– பண்பாட்டை– எளிமையை–
சமமாகப் பாவிக்கும் சிநேகத்தைக்
கிளிண்டனிடம்
இந்தியா கற்றுக்கொள்ளவேண்டும்

இதுவும் கூட
பயத்தால் அல்ல பண்பாடு என்பதால் •

படிப்பகம்

www.padippakam.com


# கணையாழி

9, முதல் தெரு,
விஜயராகவா சாலை,
தியாகராய நகர், சென்னை–17.
தொலைபேசி : 828 3298 / 826 3635
தொலைநகல் : (91) 44-825 0875
டெலக்ஸ் : (81) 44-8856 JAIN IN

கௌரவ ஆசிரியர்
கி. கஸ்தூரி ரங்கன்
நிர்வாக ஆசிரியர்
அருள்மொழிநங்கை சுவாமிநாதன்
ஆசிரியர்
மய்திலி ராஜேந்திரன்
உதவி ஆசிரியர்
யுகபாரதி
ஆலோசகர்கள்
இந்திரா பார்த்தசாரதி
சுஜாதா
டிராட்ஸ்கி மருது
க. கணேசன்
கா. அலாவுதீன்
ரெ. பாலகிருஷ்ணன்
வெ. இறையன்பு
சு. போசு
பாரதிபாலன்

பதிப்பாளர்
தமன்பிரகாஷ்

சந்தா, ஏஜென்சி தொடர்புகள், மற்றும் கதை, கவிதை, கட்டுரை, கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி:
கணையாழி
18, பி.பி.சி. ஹோம்.
18, செவாலியர் சிவாஜி சாலை,
தி.நகர், சென்னை–600 017.
தொலைபேசி : 432 0013

வடிவமைப்பு : ஜி.சி. சேகர்
ஒளிஅச்சு
அழகு சிஸ்டம்ஸ்
சென்னை–600 017. ✆ 4356548
அச்சிட்டோர் :
பகவதி பிரஸ்
சென்னை. ✆ 8545938

இன்டர்நெட் முகவரி:
http://www:pesadv.com/kanaiyazhi


## இந்த இதழில்...

## ஏப்ரல் 2000



**கட்டுரை**
*மயிலை சீனிவேங்கடசாமி*
*மரன்*
*சு. ஸ்ரீபால்*
*வெங்கட்சாமிநாதன்*
*டி.ஜி.ஆர். வசந்தகுமார்*

**கவிதை**
*கவிச்சிற்பஸ*
*கோ. ராஜேந்தி*
*க.சீ. சிவக்கும*
*யவனிகா ஸ்ரீரா*
*ஆர். வெண்ண*

**குறுநாவல்**
*காஞ்சனா தாமோதரன்*

**சிறுகதை**
*ரெ. கார்த்திகேசு*
*அ. முத்துலிங்கம்*
*இந்திரா பார்த்தசாரதி*

**ஓவியம்**
*ராமன்*
*சேகர்*
*தமிழ்*

படிப்பகம்

www.padippakam.com

மார்ச், 2000— கணையாழியில் இடம்பெற்ற அனேக கவிதைகளும் சரி, சிறுகதைகளும் சரி வலியையும், வலுவையுமே பறைசாற்றுவதாகவே இருந்தன.

காலக்கதியின் சில கணங்களை நிரந்தரமாக்கிவிடும்... நிழற்படங்கள் மாதிரி "ஆளில்லாச் சந்துகளில் மரணக் குரலின் நடமாட்டம்" கதை ஒவ்வொரு நிகழ்வுகளையும் கண்முன் கொண்டு வந்து (தமயந்தி) இதயப் பரப்பின் எல்லாப் பக்கங்களையும் கொஞ்சம் அதிர வைத்து விடுகிறார். ஒரு செடியில் பூ மலர்ந்து உதிர்வது மாதிரி இயல்பானதுதான் எல்லா மரணங்களும் என்று நிஜம் தெரிந்தாலும்... கொஞ்சம் பட படக்காமல் இருக்க முடியவில்லை.

அதே போல... சம்பா நரேந்தர் பரிசுபெற்ற குறு நாவலான 'மஹி'யின் 'கரு'வும் சரி— மிக மிக அற்புதம்.

சொற்களில் எல்லாம் நிலா வெளிச்சத்தை நிரப்பி சிந்தனைகளுக்கு பூ முடித்து பொட்டிட்டுச் சிங்காரித்து காதலித்து கண்ணாம் பூச்சி ஆடிய காலம் எல்லாம் மலையேறி விட்டது போலும்...

லதா என்ற பெண்ணின் நிகழ்கால ஆசையில் உதித்த "கதை எழுத வேண்டும்" தொடக்கத்திலிருந்து இறுதிவரை எல்லா நிகழ்வுகளுமே அதன் அடர்த்தியில் கிஞ்சிற்றும் தன்னை குறைத்துக் கொள்ளாமல் நகர்ந்தவிதம்... மிகவும் அருமை. 9 பக்கங்களிலும் இடம் பெற்றுள்ள எந்த வரிகளுமே மிகையில்லை.

"அடிக்கடி நேர்ந்து வழக்கமாகி விடும்போது அநுபவங்கள் அற்புதத் தன்மையை இழந்து விடுகின்றன" என்ற வரிகள் வாசிக்கும் போதே நீட்சியான அதிர்வைத் தந்தன.

மகரந்தம் சேர்ந்தும் கர்ப்பம் தரிக்காத ஒரு பூவின் 'வலி'கள் மனதை நோகச் செய்தன.

"என் வயிறு சும்மாயில்லை. சரியான ஜனன உற்பத்தி சாலையென்று காட்டியாக வேண்டும். அதைத் தவிர வேறு எது செய்யினும் சும்மா' என்ற குமுறலும்.

"கையுறையணிந்த விரல்கள் தன்னுள் நெருடும் வலியை அவள் அறிந்திருக்க மாட்டாள்" என அதன் நாயகி துடித்திடும்போதும் ... முற்றும் என்ற வரிகள் வரை... இமை சாத்திய கண்களுக்குள் கண்ணீரை அழுத்திப் புதைக்க அதிகப்படியாய் சிரமப்பட வேண்டியிருந்தது. இக்கதை 'கரு' பரிசுக்கான சரியான தேர்வு.

ராஜமுக்தி, கழுத்தும் நுகத்தடியும், கனவுகள் போன்ற கவிதைகள் மிக இயல்பானவைகளாக மட்டுமே இருந்தன.

"தவிர்ப்பவர்தாம்/ மறக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள் ஒரு விதத்தில்" என்ற விக்கிரமாதித்யன் நம்பியின்தவிப்பும்...

எஸ்.ஏ. விஜயராஜின் 'பிரிவின் போது' கவிதையும் படு எதார்த்தமாய் மிளிர்ந்தன.

*மரங்கள் வாழ்வது ஞானங்களில்*
*மனிதன் வாழ்வது தெருக்களில்*

என்று மனிதம் மீறி மரங்களின் இதயமும் தொட முயற்சித்திருக்கிறார் பா. சத்தியமோகன்.

மீள் பார்வை... கவிதையில் கொத்தி நின்ற நினைவுகள்... ஆச்சரியப்படுத்தின.

அனுபவத்தின் கர்ப்ப காலங்களில் தன்னிடம் கருவாக... அடுக்கடுக்காய் பிரசவமாகி... அடுத்தடுத்து ஆச்சர்யமாய் விருட்சமடைந்த வி.ஜ. சுப்ரமணியம் அவர்களின் வரலாறு நெஞ்சம் நெகிழ்த்தது.

நூல் அறிமுகம், நூல் மதிப்புரை, படித்துப் பாருங்கள் என்று வித விதமாய் தலைப்புகள் வைத்துக் கொண்டாலும் கூட...




# எதிரொலி



படிப்பகம்

www.padippakam.com

மிக பொறுப்பாய்... பல நல்ல புத்தகங்களை அறிமுகப்படுத்தி வைக்கும் கணையாழியின் பணி... மிக மிக போற்றத்தக்கது.

தற்போது... வர வர கணையாழிக்கு ஓவியங்களின் மீதான பற்றுக் குறைந்து வருகிறதோ என்று ஐயுறுகிறோம். உண்மையாகவா?

பெரு. இளங்கம்பன்
சர்க்கார் கொல்லப்பட்டி

'கணையாழி' மார்ச் 2000 இதழில் வெளியான எஸ். வையாபுரிப் பிள்ளை பற்றிய கட்டுரை என்னை வெகுவாகக் கவர்ந்தது. அதைப் படிக்கையில் காவிய ரசனை என்னுள் கிளர்ந்தது. ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், கல்கி, வ.உ.சி. உ.வே.சா., டி.கே.சி., கவிமணி ஆகிய தமிழ் மேதைகளின் நிழற்படங்களைக் கண்டு மிகவும் நெகிழ்ச்சியடைந்தேன். இலக்கிய ஏடுகள் தமிழின் 'இந்தப் பக்கத்தை' அறவே மறந்துள்ள நிலையில் இந்தக் கட்டுரை சுவையும் பயனும் வழங்குவதோடு புதுமையானதாகவும் வழிகாட்டுவதாகவும் அமைந்திருக்கிறது. எஸ்.வி.பி.யின் பன்முக ஆற்றல்களைக் கட்டுரையில் நயம்படச் சித்திரித்துள்ளார் வி.ஐ. சுப்ரமணியம். போற்றுதலுக்கு உகந்த இலக்கியப் பணி. ஆசிரியருக்கு என் உளங்கனிந்த பாராட்டுதல்கள்! மேலும் இத்தகு கட்டுரைகளை 'கணையாழி' வெளியிடுமாக.

தமயந்தியின் 'ஆளில்லாச் சந்துகளில் மரணக் குரலின் நடமாட்டம்' என்கிற சிறுகதை மிகச் சிறப்பாக வந்திருக்கிறது. மரணத்தின் ஓலம் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆனால் அது பற்றிய அச்சம் அகன்றுவிட்டிருக்கிறது! மனத்தில் நெடுநாள் ஊறப் போட்டபின் வெளிவந்த படைப்பாகத் தோன்றுகிறது... மிகச் சிறந்த படைப்பு. மஹியின் குறுநாவலும் படிக்கச் சுவையாக உள்ளது. தரமான ஆக்கம். இவ்விதழின் மற்ற அம்சங்களும் இலக்கிய மேம்பாடுகளுடன் திகழ்கின்றன.

பா. அமிழ்தன்
சென்னை—28

செயப்பிரகாசம் அவர்களின் "வனத்தின் குரல்" கட்டுரையில் (பிப்ரவரி) சத்தியமான ஒரே விஷயம் அந்த முதல் பாராதான். அவர் பத்து நாளில் எங்கள் (மலேசியத் தமிழர்) நிலை பற்றித் தீர்ப்பு எழுத முடியாது. பதம் பார்ப்பதற்கு நாங்கள் சிராக வேகும் அரிசிப் பருக்கைகள் அல்ல. இது உயிரும் உணர்வும் உள்ள மனிதங்களின் கூட்டு.

செயப்பிரகாசம் தம் கட்டுரையில் மலேசியா தனது தமிழர் வழி வந்த குடிமக்களை நடத்துவது பற்றிய பாதகமான, ஒருதலைச் சார்புடைய கருத்துக்களை எழுதியிருக்கிறார் இதற்கு முக்கிய காரணம் முதலீட்டுவத்தின் மீது பலருக்குள்ள புராதனமான, இரத்தத்தில் ஊறி விட்ட வெறுப்பு அவருக்கும் இருப்பது. இந்த வழியில் மலேசியா பெரும் வெற்றி அடைந்திருப்பது அவருக்கு எரிச்சல் ஊட்டியிருக்கிறது. மலேசியாவில் இருந்த பத்து நாட்களில் அவர் தன்னை உபசரித்தவர்களிடம் மட்டும் பேசி தன் முன்னைய ஓர வஞ்சனைகளைப் பலப்படுத்திக் கொண்டுவிட்டார் என்றே தோன்றுகிறது.

மலேசியாவில் தோட்டப்புறத் தமிழர்கள் வாழ்வு மோசமான நிலையில் இருக்கிறது என்பதை நான் சற்றும் மறுக்கவில்லை. ஆனால் வளர்ச்சி அடைந்து வரும் எந்த நாட்டில் தான் விவசாயத் தொழிலாளர் நிலை மேம்பட்டு இருக்கிறது? இந்தியாவில்; இலங்கையில்; இந்தோனேசியாவில்; அர்ஜென்டினாவில்; தென்னாப்பிரிக்காவில்? சொல்லுங்கள் பார்க்கலாம். எந்த நாட்டில் இத்தொழிலாளர்களுக்கு மலேசியாவை விட அதிக ஊதியமும் வசதிகளும் தருகிறார்கள்? ஏன் மலேசியாவை தனிப்படுத்திப் பார்க்க வேண்டும்?

மலேசியா தீவிரமான பொருளாதார வளர்ச்சி அடைந்து வருகிறது. அதற்கேற்ப அதன் பொருளாதார நிலைப்பாடும் மாறி வருகிறது. அது ஒரு விவசாய நாடாக இன்னமும் இருக்க விரும்பவில்லை. கொஞ்ச நஞ்ச விவசாய நிலத்தை இலாபம் உள்ள பொருட்களைப் பயிரிடப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறது. தேவை குறைந்துபோன ரப்பரிலிருந்து தேவை அதிகரித்து வரும் செம்பனைக்கு அது மாறுகிறது. சில நிலங்கள் வீட்டுமனைகளாகவும் கோல்ஃப் திடல்களாகவும் மாறுகின்றன. இந்த மாற்றம் ஏற்பட்டுப் பல ஆண்டுகள் ஆகின்றன.

மலேசியத் தொழிலாளர்களின் குழந்தைககளுக்கு ஒரு தலைமுறைக்கு முன்னிருந்தே இலவச ஆரம்ப, இடைநிலைக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமானோர் தோட்டத் தொழில் விலங்குகளை உடைத்தெறிந்து முன்னேறியுள்ளார்கள். ஒரே தலைமுறைக்குள் ஒரு தோட்டப்புறக் குழந்தை பட்டதாரியாக ஆகி மேல் மத்திய வர்க்கத்திற்குப் போகும் அற்புதம் எங்கள் கண்முன் நிகழ்ந்து வருகிறது. இது பெருவாரியான மாற்றம். அங்கொன்றும் இங்கொன்றுமாக நடப்பதென நினைக்க வேண்டாம்.

இதற்கு இந்த நாட்டில் எந்தத் தடையும் இல்லை. முதலாளிகள் தடுப்பதில்லை. ஜாதியோ சமுதாயமோ தடுப்பதில்லை. அரசாங்கம் தடுப்பதில்லை. இது திறந்த சமுதாயம். முன் செல்ல உள்ளம் உள்ளவர்களுக்கு எல்லா ஆதரவும் கிடைக்கும். இதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறியவர்களில் இன்றுள்ள மலேசிய இந்தியத் தலைமைத்துவம் அனைத்தும் அடங்கும். சாமிவேலு, சுப்ரமணியம், பத்மநாதன் அனைவரும் பாட்டாளிகளின் குழந்தை



படிப்பகம்

www.padippakam.com

களே. அத்தனை பேரும் காலனித்துவத்தின் போது வறுமையின் தீயை அனுபவித்த குடும்பங்களில் பிறந்து சுதந்திர மலேசியா நீட்டிய உதவும் கரத்தைப் பிடித்துக் கொண்டு முன்னேறியவர்கள். இப்போது சீரோடும் செல்வாக்கோடும் இருக்கிறார்கள்.

தோட்டங்களில் வந்து கொண்டிருந்த வருமானம் நகரங்களில் கிடைக்கும் வருமானத்தை விட மிகக் குறைந்து போனதைக் கண்டு தமிழ்த் தொழிலாளர்கள் நகர்களுக்குக் குடி பெயர்ந்தார்கள். இப்படிக் குடி பெயர்ந்தவர்களின் ஆரம்ப கால வாழ்க்கை மிகச் சிரமமானதாக இருந்தாலும் ஒரு தலைமுறைக்குப் பிறகு அவர்கள் வாழ்க்கைச் சீர்பட்டு வருகிறது. எங்கள் நாட்டில் வறுமை விழுக்காட்டைத் தீவிரமாகக் குறைப்பதில் வெற்றி கண்டுள்ளோம்.

தமிழ்த் தொழிலாளர்கள் இப்படி வெளியேறியதனால் ஏற்பட்ட தோட்ட வேலைகளுக்கான ஆள் பற்றாக் குறையினால் தான் மலேசியா, இந்தோனேசியாவிலிருந்தும் பங்களாதேசத்திலிருந்தும் ஆட்களை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று.

இந்தச் சூழ்நிலையில் ஒரு சிறு கூட்டத்தினர் இந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்களாக தோட்டங்களிலேயே தங்கிவிட்டார்கள். பழகிய வாழ்க்கை பாழ்பட்டதாக இருந்தாலும் சுகமாகிப் போயிற்று. வாய்ப்புக்கள் கண்முன்னே இருந்தும் அவற்றைப் பற்றிக் கொள்ள வேண்டிய முயற்சி இல்லாதவர்களாக இப்போதும் இருக்கிறார்கள்.

இதே போன்று நகரங்களிலும் உடலுழைப்பு வேலைகளில் கீழ் மட்டத்தில் (வீதி கூட்டுதல், குப்பை அள்ளுதல்) பல தமிழர்கள் இருப்பது வெளிச்சமாகத் தெரிகிறது. கோலாலம்பூர் சிப்பாங் அனைத்துலக விமான நிலையத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக இவர்களே இருக்கிறார்கள். தமிழர்களுக்குக் கண்ணைக் குத்துகிற காட்சி இது.

ஏன் இது நிகழ்கிறது? சமுதாய பொருளாதார உந்துதல்களை இவர்கள் ஏன் புறக்கணிக்கிறார்கள்? ஏன் இவர்களிடையே Mobility இல்லாமல் போய்விட்டது? இதற்குக் காரணம் அரசாங்கமா? முதலீட்டுத்துவமா?

இந்த நிலைமையை விளக்குவதற்கு அரசியல் பொருளாதாரச் சித்தாந்தங்களை விட உளவியலே உதவும் என்பது எனது எண்ணம்.

"தோட்டங்களில் எதிர்காலம் இல்லை. வெளியேறி வேறு துறைகளில் வெற்றி காணுங்கள்" என அரசாங்கமே ஊக்குவித்து வரும்போது, செயப்பிரகாசம் போன்றவர்கள் 'நலன் விரும்பிகள்' வேஷம் போட்டு அவர்கள் கூலிகளாக இருப்பதை ஆதரிப்பது போல எழுதுவது வேடிக்கை தான்.

சில முக்கிய விஷயங்களில் செயப்பிரகாசம் அவர்களின் கருத்து பிழையானது:

1) "70 களின் இனக்கலவரத்தில் தமிழர்களை அல்லோல கல்லோலப் படுத்திவிட்டார்கள்"

69—இல் நடந்த இனக்கலவரம் தமிழர்களைக் குறியாகக் கொண்டதல்ல. அது சீனர்களுக்கும் மலாய்க்காரர்களுக்கும் இடையில் நடந்தது. தமிழர்கள் இடையில் சிக்கினார்கள். ஆனால் இந்த இனக்கலவரத்தின் பின் விளைவுகளால் ஒரு நீதி மிக்க சமுதாயம் இங்கு உருவானது. இனக் கசப்புகள் பெரிதும் களையப்பட்டுவிட்டன. இன்று இன இணக்கத்திற்கு மலேசியா ஓர் எடுத்துக்காட்டான நாடு— பத்து நாட்கள் இருந்து ஊருக்குத் திரும்பும் சமுதாய விமர்சகர்களாக இருந்தாலும் இது கண்ணில் படாமல் போகாது.

2) "ஏற்றுமதியே குறிக்கோள். வேறெந்த மதியும் இல்லை." மிக



## பூங்கா

கவிச் சிற்பன்

வெயிலேறிய சொரணையற்று
விளிம்பு தாண்டி
தலை தொங்க
தூங்குவான் கிழவனொருவன்

அழுக்கு சேலை சுற்று
ஈ விரட்டுவாள்
பிச்சைக்காரி.

உதடுகளில பொருத்திய
சிகரெட்டோடு
தீப்பெட்டி தேடியலைவான்
எவனேனும்.

"என்ன சொல்லிவிட்டான்
இப்படிச் சிரிக்கிறாள்"
எனத் திரும்பிட நேரும்
முக்கத்துக் காதலில்

எழுதப்படாத
வார்த்தைகளுக்காய்
காத்திருக்கக்கூடும்
கவிஞனொருவனும்
இறையும் காலம்
நின்று கரையும்
காக்கைகள்
பகல் நேரம், பூங்காக்களில்



படிப்பகம்

www.padippakam.com

விஷமமான வார்த்தைகள். ஏற்று மதியும் வாணிகமும்தான் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளை மேற்கத்திய பொருளாதார ஆக்கிர மிப்பிலிருந்து கொஞ்சமாவது காப்பாற்ற முடியும். அது இல் லாமல் காலங்காலமாக விவசா நாடாக இருந்து தமிழர்களைக் கூலிப் படைகளாக அங்கு வைத் துக் கொண்டிருக்க வேண்டும் என்கிறாரா?

3) செப்பாங் விமான நிலை யம் எங்கள் நாட்டின் தலை நிமிர்வுக்கு ஓர் அடையாளம். அது ஒரு மக்களாட்சி நாட்டின் பொருளாதாரத்தைச் செழிக்க வைக்க எழுந்தது. அது மக்களின் உழைப்பின் வெற்றிச் சின்னம். அது இந்தியர்கள் எழுப்பியுள்ள கல்லறையான தாஜ்மஹாலுக்குச் சமமானது என செயப்பிரகாசம் கருதுவது வக்கிர புத்தி. ரத்தம், கண்ணீர் என்பனவற்றால் அது கட்டப்படவில்லை. உழைப்பு, புத்திசாலித்தனம், பொருளாதாரத் தூரப்பார்வை என்று விவேகமான கலவைகளால் அது கட்டப் பட்டது.

செப்பாங் விமான நிலை யம் எழுப்ப ஏதோ பொதுமக்கள் பணம் பறிக்கப்பட்டது போல எழுதியிருக்கிறார். ஊழியர் சேம நிதி நிறுவனம் இதில் முதலீடு செய்தது. இதனால் பெரும் லாபம் பெற இருக்கிறது. எல்லோ ரும் பயன்பெறப் போகிறார்கள். யாரும் பணம் இழக்கவில்லை. ஊழியர் சேம நிதி அவரவர் ஓய்வு பெறும்போது பத்திரமாக உத்தர வாதம் கொடுக்கப்பட்டது போல் கொடுக்கப்படும்.

4) "இன்றைக்குத் தோட்டத் துக்குச் சொந்தக்காரர்களாக தமிழர்கள் இல்லை"

சுதந்திரத்திற்கு (1957) முன் இருந்திருக்கிறார்கள். சுதந்திரத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் விற்று விட்டு ஓடினார்கள். 1969 இனக் கலவரம் ஏற்பட்டபோது சிலர் விற்று ஓடினார்கள். இது தமிழர் களுக்கு இந்த நாட்டின் மீது நம்பிக்கை இன்மையால் விளைந் தது. 80—களில் ஒரு தமிழ் நிலக் கிழார் வருமான வரித் துறை யினரோடு வீண் சண்டை பிடித்து நிலத்தை இழந்தார். இவற்றையும் பொருளாதாரச் சித்தாந்தங்களால் விளக்க முடியாது. தமிழர்களின் உளவியல் முறையில்தான் விளக்க வேண்டும்.

ஆனால் இதற்காக எல்லாம் இருண்டு விடவில்லை. தமிழர்க்கே சொந்தமான தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிகள் இதே இதழில் வேறொரு பக்கத்தில் வந்திருக்கின்றன.

5) "இனங்களின் சதவிகிதத் திற்கேற்ப கல்வி வாய்ப்பு" - ஒரு கெட்ட வார்த்தை போல் சொல் லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இப்படி அமுல்படுத்தினால் அழு வீர்களா? கொண்டாட மாட் டீர்கள்? சமுதாய நீதியைப் பின் னர் எப்படித்தான் ஏற்படுத்து வீர்கள்.

மலேசியா முதலீட்டுவத்தை முக்கிய பொருளாதாரச் சித்தாந்த மாகக் கொண்ட நாடுதான். அந்த சித்தாந்தத்தில் இருக்கும் இயல் பான சுரண்டல்கள் அனைத்தும் இங்கும் உண்டு. ஆனால் உலகில் இன்று இயங்கும் எல்லாவிதமான பொருளாதார சித்தாந்தங்களும் தியவையே. பல அதன் தீமைகளில் தாமே கருகிச் செத்துப் போய் விட்டன. பிழைத்தது முதலீட்டுத் துவம் ஒன்றுதான். அதுதான் உலகின் லௌகீக வாழ்க்கையைச் செழிக்க வைக்கக் கூடியது. ஆனால் அதற்கு ஒரு கருணை முகம் வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் உள்ள சமுதாய நலக் கொள்கைகளை உள்ளடக்கிய முதலீட்டுத்துவமாக அது இருந் தால் அடிமட்ட மக்களை அர வணைத்துச் செல்லலாம்.

இஸ்லாமியக் கொள்கை களை அடித்தளமாகக் கொண்ட மலேசியாவில் கருணை உணர்வு இருக்கிறது. ஆனால் பொருளா தாரக் கொள்கைகளில் அது இன்னும் முழுமையாகக் கனிய வில்லை.

இன்னும் கொஞ்சம் காலம் கொடுங்கள். அவசரத் தீர்ப்பு எழுத வேண்டாம்.

– ரெ. கார்த்திகேசு
பினாங், மலேசியா


தரமான படைப்புகள்
நேர்த்தியான வடிவமைப்பு
கூடுதல் பக்கங்கள்

விரைவில்
ஆஸ்திரேலியச் சிறப்பிதழ்

புலம் பெயர்ந்தோர் எழுத்துக்களின் பொக்கிஷமாக தயாராகிறது

ஆக்கங்கள்
அபிப்ராயங்கள்
அனைத்து
தகவல்களுக்கும்
கணையாழி
முகவரிக்கு
தொடர்பு கொள்க.




படிப்பகம்

www.padippakam.com

அம்மா வேகமாக நடக்கிறாள். அவள் கால் பூமியில் பட்டு அதிர்வது ஆறுமுகத்தின் காதுகளில் 'ணங்ணங்' என்று கேட்கிறது. அவன் அவளுடைய தோளில் தலைசாய்த்துப் படுத்திருக்கிறான். அரைக்கால் சிலுவாரிலிருந்து அவன் இரண்டு கால்களும் சூம்பித் தொங்கி இரண்டு முருங்கைக் காய்கள் போல ஆடிக் கொண்டிருக்கின்றன.

வெயில் அப்படியாகக் காய்ந்து கொண்டிருந்தது. ஆறுமுகத்துக்கு ஏறிட்டுப் பார்க்க

எப்போதும் ரெஸ்டாரண்டில் சமையல் வேலையை முடித்துவிட்டு எட்டு, ஒன்பது மணிக்குத்தான் திரும்பிதாயம்மா வீட்டிலிருந்து தன்னைத் தூக்கி வருவாள். இன்றைக்கு ஐந்து மணிக்கெல்லாம் இன்னும் வெயில் கொளுத்திக் கொண்டிருந்த நேரத்தில் திரும்பிவிட்டாள். தாயம்மா கூட அதிசயித்துப் போனாள்.

"என்ன பார்வதி இத்தன வெள்ளன வந்திட்ட..."

"கடையில் கேட்டுட்டு வந்திட்டடங்க்கா"

போய் ஏதாச்சும் சமச்சி வைக்கணுங்க்கா!" என்றாள்.

"ஆமாம் உன் சமயலத் திங்கத்தான் வர்றான் போ! ஒன்னத் திங்கவே அவனுக்கு நேரம் பத்தாது."

"வர்ரேங்க்கா!" ஆறுமுகத்தை வாரித் தூக்கினாள்.

"அப்ப இத இங்கயே உட்டுட்டுப் போயேன் பார்வதி. நான் பாத்துக்கிறேனே! புருஷன் ஒரு வாரம் களிச்சி வர்றான். அந்த வூட்டுல இருக்கிறது ஒரே ரூம்பு. புள்ளய எங்க கொண்டி வச்சிக்கிவ?"

# வெள்ளைப் பூனையும் கருப்புக் குட்டிகளும்

ரெ. கார்த்திகேசு

முடியவில்லை. பளீரென்று அடித்தது. உச்சந்தலையில் வெயில் பட்டு சுள்ளென எரிந்தது.

அம்மாவின் கழுத்திலும் மார்பிலும் வேர்த்துக் கொட்டியது. ரவிக்கையை நனைத்திருந்தது. அவள் அக்குளிலிருந்தும் கழுத்திலிருந்தும் வந்த வேர்வை நாற்றம் ஆறுமுகத்தின் நாசியைத் தாக்காமல் இல்லை. அந்த நாற்றத்திலும் அம்மாவின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதுபோல சுகமாக இருந்தது. இது பழகிய நாற்றம். இதில் அசிங்கம் இல்லை. இது அம்மாவின் வாசனை. சுகம்.

இன்றைக்கு அம்மா வெள்ளனேத் திரும்பி வந்துவிட்டாள்.

"ஏன்? உடம்பு சரியில்லியா?"

"அவரு ஏளு மணி போல வர்ரேன்னு போன் பண்ணாருக்காரு!" கொஞ்சம் வெட்கப்பட்டாள்.

"ஓ...!" என்று இழுத்தாள் தாயம்மாள். "அப்படியா கதை! போனவாரம் லோரியோட் போனவன் காஞ்சி போய் வர்ரான்னு இப்படி வேகாத வெயில்ல!" என்றாள்.

"இன்னிக்கி ராத்திரியே இன்னொரு டிரிப் இருக்காம். பத்துப் பதினோரு மணிக்கெல்லாம் திரும்பக் கௌம்பிடுவாரு!"

"ஐயோ வேணாங்க்கா! புள்ள எங்கன்னு தேடும் பாவம்!"


"ஆமா தேடும் தேடும்! உன்ன மேஞ்சி முடிஞ்ச நேரத்தில நோஞ்சான் புள்ளத் தலையில செல்லமா ஒரு கொட்டு கொட்டிட்டுப் போவும்! அத்தன பாசம்!" என்றாள் தாயம்மா ஏளனமாக!

"வரேங்க்கா!" என்று சரேலெனப் புறப்பட்டு விட்டாள் அம்மா.

அந்த பினாங்கின் ஜாலுத் தோங் மெயின் ரோட்டில் கார்கள் மோட்டார் சைக்கிள்கள் என்ற எமன்களை ஒருவாறு சமாளித்து அவர்கள் குடிசைப் பகுதிக்குள் திரும்புகின்ற லோரோங்கில்

படிப்பகம்

www.padippakam.com



அம்மா நுழைந்தாள். வழியெல்லாம் அம்மாவின் தாளம் தவறாத நடையில் அவள் முதுகுக்குப் பின்னால் ஸ்லோமோஷனில் நகர்கிற காட்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தான் ஆறுமுகம்.

அம்மா இந்த வெயிலில் எட்டு வயதான தன்னை இப்படித் தூக்கிக் கொண்டு போவது பாவமாகத்தான் இருந்தது. ஆனால் போலியோ நோயில் சூம்பிப் போன கால்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது? அவன் கைகளில் நல்ல பலம் இருந்தது. ஆனால் இடுப்புக்குக் கீழே ஒன்றும் அசைக்க முடியாது.

ரோட்டில் அம்மா கையைப் பிடித்துக் கொண்டு மற்ற பிள்ளைகள் போல நடக்க முடியாது.

அம்மா அதிகம் பேசவில்லை. முன்னால் நடந்த உரையாடலில் கேட்ட தகவலை வைத்து உறுதிப் படுத்திக் கொள்வதற்காக அவனாகக் கேட்டான். "இன்னக்கி அப்பா வர்ராராமா?"

"ஊம்" என்றாள். வேறு ஏதும் சொல்லவில்லை.

"அவனுக்குக் கொஞ்சம் பயமாகவும் கொஞ்சம் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

"எனக்கு எதினாச்சும் வாங்கிட்டு வருவாரா?"

"பாப்போம், பேசாம இரு!".

அந்த லோரோங்கில் நுழைந்தவுடன் அடைந்து கிடந்த அள்ளூரில் இருந்து கிளம்பிய நாற்றம் அம்மாவின் அக்குள் வியர்வையைத் தோற்கடித்தது.

"சீ நாறுது!" என்றான் ஆறுமுகம்.

"ஆமா, இன்னக்குத்தான் புதுசா நாறுதாங்காட்டியும் ஒனக்கு!" என்றாள்.

வீட்டை அடைந்ததும் அவனைக் கதவுக்கு முன்னால் உட்காரவைத்துவிட்டு சாவி எடுத்துப் பூட்டைத் திறந்தாள். கதவுக்கு அப்பால் சாத்தி வைக்கப் பட்டிருந்த பலகைகளுக்குப் பின்னாலிருந்து அவனுடைய வெள்ளைப் பூனை "மியாவ்" என்று பலவீனமாகக் குரல் எழுப்பியது.

"மியாவ், இங்க வா!" என்று ஆறுமுகம் கூப்பிட்டான். அந்தப் பூனைக்குப் பேரில்லை. எங்கிருந்தோ வந்து அவர்களோடு ஒட்டிக்கொண்ட பூனை. ஆறுமுகத்துக்குத் துணையாக இருக்கட்டுமென பார்வதி அவ்வப்போது அதற்குச் சோறு போட்டு வளர்த்தாள். பெட்டைப் பூனை. இப்போ கொஞ்ச நாளாக வயிற்றைத் துருத்திக் கொண்டு திரிகிறது. அது கெட்ட கேட்டுக்கு பிள்ளைத் தாய்ச்சி.

"பாவம்மா! இருக்கட்டும்மா!" என்று ஆறுமுகம் கெஞ்சியிரா விட்டால் பார்வதி அதைக் கொண்டு போய் அந்த சுங்கைப் பினாங் ஆற்றில் எறிந்திருப்பாள். அது நீந்திப் போய் காய்கறியும் மீனும் விற்கும் திறந்த வெளி மார்க்கெட்டில் உதைபட்டு மிதிபட்டு எப்படியாவது பிழைத்துக் கொள்ளும். ஆனால் ஆறுமுகம் அதனோடு ஒட்டிக் கொண்டான். தன்னை விட்டால் அது ஒன்றுதான் அவன் சூம்பிய கால்களைப் பொருட்படுத்தாமல் அவனோடு பாசமாயிருந்தது.

கூப்பிட்ட குரலுக்குப் பூனை வரவில்லை. பலகைக்குப் பின்னால் கையைவிட்டு அந்தப் பூனை வழக்கமாகப் படுக்கும் சாக்கைத் துழாவினான் ஆறுமுகம். கையில் பிசுபிசுவென்று ஏதோ ஒட்டியது. குனிந்து கூர்ந்து பார்த்தான். செத்த எலி போல ஏதோ கிடந்தது. ஆனால் அசைந்தது. தடவிப் பார்த்தான். "அம்மா! பூன குட்டி போட்டிருக்கு!" என்று உரத்த குரலில் கத்தினான்.

பார்வதி பலகையை விலக்கிப் பார்த்தாள். "அட ஆமா! நாலு குட்டி போட்டிருக்கு!" என்றாள். மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. புது உயிரின் வரவு என்றும் மகிழ்ச்சி

[தொடர்ச்சி 34-ம் பக்கம்]

www.padippakam.com

வாசகர்களுக்கு

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்




- கணையாழியின் வளர்ச்சி இலக்கிய வாசகர்களைச் சார்ந்தே இருக்கிறது. எல்லாத் தரப்பினருக்கும் ஏதுவான கருத்துக்கள் தொடர்ந்து வெளிவருவதை தாங்கள் அறிவீர்கள்

- மேலும், கணையாழியின் வளர்ச்சியை கருத்திற்கொண்டு புதிய சந்தாதாரர்களுக்கு விசேஷ சலுகை




- தங்களால் அறிமுகப்படுத்தப்படும் இரண்டு புதிய சந்தாதாரர்களுக்கு ஓராண்டு சந்தா ரூபாய் 220 இல் ரூபாய் 200 மட்டும் செலுத்தினால் போதும்.

- ஒரேயொரு நிபந்தனை : குறைந்த பட்சம் இரண்டு சந்தாதாரர் அவசியம்




- தாங்கள் கொடுக்க விரும்பும் எல்லாவற்றையும் விட '**கணையாழி**'யைப் பரிசளிப்பதே சிறந்ததாக கருதப்படும்.

- வாழ்க்கையை மேம்படுத்த வாசிப்பை அதிகப்படுத்த 'கணையாழியை பரிசளிப்போம்.'

படிப்பகம்

www.padippakam.com

# சமணசமயம் சிறப்படைந்த வரலாறு

மயிலை சீனி வேங்கடசாமி

பண்டைக் காலத்திலே சமணசமயம் தமிழ் நாடு முழுவதும் பரவி நிலைபெற்றிருந்தது. பரவியிருந்தது மட்டுமல்லாமல் செல்வாக்குப் பெற்றும் இருந்தது. இந்தச் சமயம் தமிழ்நாட்டிலே வேரூன்றித் தழைத்துத் தளிர்த்து இருந்ததை தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய பிற்காலத்து நூல்களும், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய சங்க காலத்து நூல்களும் தெரிவிக்கின்றன. இலக்கியச் சான்று மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே ஆங்காங்குக் காணப்படுகிற கல்வெட்டுச் சாசனங்களும் அழிந்தும் அழியாமலும் காணப்படுகிற சமணக்கோயில்களும் காடுமேடுகளில் ஆங்காங்கே காணப்படுகிற சமண சமயத் தீர்த்தங்கரர்களின் திருவுருவங்களும் சான்று கூறுகின்றன. சமணசமயம் தமிழ்நாட்டிலே ஏன் செல்வாக்கடைந்தது? ஏன் செழித்து வளர்ந்தது?

பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை பண்டைக்காலத்தில் சமணசமயத்தில் இல்லை. எக்குலத்தவனாயினும், தமது சமயக் கொள்கையைப் பின் பற்றுவானாயின் அவனைச் சமணர் போற்றிவந்தனர். அருங்கலச் செப்பு என்னும் நூலிலே,

> "பறையன் மகனெனினும் காட்சி யுடையான்
> இறைவன் எனஉணரற் பாற்று"

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, பண்டைக் காலத்திலே சாதிபேதம் பாராட்டாத தமிழ் நாட்டிலே, சாதி பேதம் பாராட்டாத சமண சமயம் பரவியதில் வியப்பில்லை. மேலும், உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி என்னும் நான்கு தானங்களைச் செய்வதைச் சமணர் தமது பேரறமாகக் கொண்டிருந்தார்கள். இந்த நான்கினையும் அன்னதானம், அபயதானம், ஔடததானம், சாத்திரதானம் என்று கூறுவர். உணவு இல்லாத ஏழை மக்களுக்கு உண்டி கொடுத்துப் பசிநோயைப் போக்குவது தலைசிறந்த அறம் அன்றோ? ஆகவே, அன்னதானத்தை முதல் தானமாகச் செய்து வந்தனர்.

இரண்டாவதாகிய அடைக்கல தானத்தையும் சமணர் பொன்போல் போற்றிவந்தனர். அச்சங் கொண்டு அடைக்கலம் என்று புகல் அடைந்தவருக்கு அபயமளித்துக் காப்பது அபயதானம் என்பது. இதற்கென்று குறிப்பிட்ட சில இடங்கள் இருந்தன. இந்த இடங்கள் பெரும்பாலும் சமணக் கோயில்களை அடுத்திருந்தன. இந்த இடங்களுக்கு அஞ்சினான் புகலிடம் என்பது பெயர். இந்த இடங்களில் புகல் அடைந்தவரைச் சமணர் காத்துப் போற்றினார்கள். சாசனங்களிலும் இந்தச் செய்தி கூறப்படுகிறது. தென் ஆர்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்காவில் பள்ளிச்சந்தல் கிராமத்திற்கு அருகில் உள்ள ஜம்பை என்னும் கிராமத்து வயலில் இச் செய்தியைக் கூறுகிற சாசனம் ஒன்று காணப்படுகிறது. ஜம்பை என்னும் கிராமத்துக்கு வீரராசேந்திரபுரம் என்று பெயர் இருந்ததென்றும், இங்குக் கண்டராதித்தப் பெரும்பள்ளி என்னும் சமணக் கோயில் இருந்ததென்றும், அங்குச் சோழதுங்கன் ஆளவந்தான் அஞ்சினான் புகலிடம் என்று பெயர் உள்ள ஒரு புகலிடம் இருந்ததென்றும் அப்புகலிடத்திற்கு வந்து அடைக்கலம் புகுந்தவரைக் காப்பாற்ற வேண்டும் என்பது கண்டராதித்தப் பெரும் பள்ளியில் எழுந்தருளியிருந்த நேமிநாதசுவாமி ஆணை என்றும் இந்தச் சாசனம் கூறுகிறது. வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி தாலுகாதெள்ளாறு என்னும் ஊரிலே திருமூலீஸ்வரர் கோயில் முன் மண்டபத்தில் தரையில் ஒரு சாசனம் காணப்படுகிறது. மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி விக்கிரம பாண்டிய தேவரின் 5 ஆவது ஆண்டில் எழுதப்பட்ட இந்தச் சாசனம் அஞ்சினான் புகலிடம் ஒன்றைக் குறிப்பிடுகிறது.

வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை தாலுகா கீழ்மின்னல் என்னும் ஊரில் உள்ள ஒரு சாசனம் சகல லோக சக்கரவர்த்தி வென்று மண் கொண்டார் என்னும் சாம்புவராயர் அரசருடைய 16ஆவது ஆண்டில் எழுதப்பட்டது. அக்காலத்தில் இந்த ஊர் அஞ்சினான் புகலிடமாக இருந்த செய்தியை இச்சாசனம் கூறுகிறது.

வடஆர்க்காடு மாவட்டம் போளூர் தாலுகா வட மகாதேவிமங்கலம் என்னும் ஊரில் உள்ள சாசனம், சாம்புவராயர் சகலலோக சக்கரவர்த்தி ராஜநாராயணனுடைய 19 ஆவது ஆண்டில் எழுதப்பட்டது. இது, மகாதேவிமங்கலத்தைச் சேர்ந்த தனிநின்று வென்றான் நல்லூர் என்னும் இடம் அஞ்சினான் புகலிடமாக இருந்தது என்று கூறுகிறது இதனால் அபய தானத்தைப் பண்டைக் காலத்தில் சமணர் நடைமுறையில் செய்துவந்தனர் என்பது ஐயமற விளங்குகிறது.

மூன்றாவதாகிய ஔடத தானத்தையும் சமணர் செய்து வந்தனர். பௌத்தர்களைப் போலவே, சமணப்



படிப்பகம்

www.padippakam.com

பெரியார்களும் மருத்துவம் பயின்று நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து நோயைத் தீர்த்து வந்தனர். சமணர்தம் மடங்களில் இலவசமாக மருந்து கொடுத்து மக்களின் நோயைத் தீர்த்தது அம்மதத்தின் ஆக்கத்திற்கு உதவியாக இருந்தது. சமணர்கள் மருத்துவம் பயின்று மருந்து கொடுத்து நோய் நீக்கிய செய்தி அவர்கள் இயற்றிய நூல்கள் சில வற்றிற்குத் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம என்று மருந்துகளின் பெயரிட்டிருப்பதனாலும் அறியப்படும். உடல் நோயைத் தீர்க்க மருந்து கொடுத்தும் உள் நோயைத் தீர்க்க நூல்களை இயற்றிக் கொடுத்தும் சமணர் மக்களுக்குத் தொண்டாற்றி வந்தனர்.

நான்காவதாகிய சாத்திர தானத்தையும் சமணர் பொன்னேபோல் போற்றிவந்தனர். சமணப் பெரியோர், (பௌத்தர்களும்கூட) தம் பள்ளிகளிலே ஊர்ச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். இதனாலேயே பாட சாலைகளுக்குப் பள்ளிக்கூடம் என்னும் பெயர் உண்டாயிற்று; (பள்ளி என்றால் சமணப் பள்ளி அல்லது பௌத்தப்பள்ளி என்பது பொருள்) சமணர்களின் சாத்திரதானம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. செல்வம் படைத்த சமணர்கள், தம் இல்லங்களில் நடைபெறும் திருமண நாட்களிலும், இறந்தோருக்குச் செய்யும் இறுதிக் கடன் நாட்களிலும், தம் சமய நூல்களைப் பல பிரதிகள் எழுதுவித்து அவற்றைத் தக்கவர்க்குத் தானம் செய்தார்கள். அச்சுப் புத்தகம் இல்லாத அந்தக் காலத்திலே பனை ஏடுகளில் நூல்களை எழுதி வந்தார்கள். ஒரு சுவடி எழுதுவதற்குப் பல நாட்கள் செல்லும். பொருட் செலவு (எழுத்துக் கூலி) அதிகம். ஆகவே, பொருள் உடையவர் மட்டும் புத்தகம் எழுதி வைத்துக் கொள்ள முடிந்தது. பொருள் அற்றவர் புத்தகம் பெறுவது முடியாது. ஆகவே, செல்வம் படைத்த சமணர் தமது சமய நூலைப் பல பிரதிகள் எழுதுவித்து அவற்றைத் தானம் செய்தார்கள். கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலே கன்னட நாட்டில் இருந்த, சமண சமயத்தைச் சார்ந்த அத்திமுப்பெ என்னும் அம்மையார் தமது சொந்தச் செலவிலே, சாந்திபுராணம் என்னும் சமணசமய நூலை ஆயிரம் பிரதிகள் எழுதுவித்துத் தானம் செய்தார் என்பர்.

சமணசமயம் செழித்து வளர்வதற்கு மற்றொரு காரணமாயிருந்தது யாதெனின் அவர்கள் மேற்கொண்டிருந்த தாய்மொழிப் பிரசாரம் ஆகும். சமண சமயத்தார், பௌத்த சமயத்தாரைப் போலவே, தாங்கள் எந்தெந்த நாட்டிற்குப் போகிறார்களோ அந்தந்த நாடுகளில்வழங்குகிற தாய்மொழியிலே தங்கள் மத நூல்களை எழுதினார்கள். இதனால் அந்தந்த நாட்டு மக்கள் எளிதிலே இந்த மதக் கொள்கைகளை அறிந்து கொண்டு அவற்றைக் கைக்கொள்ள முடிந்தது. பிராமணர், தம் வைதிக மத நூல்களை மக்களுக்கு விளங்காத மொழியில் எழுதிக் கொண்டதோடு அந்நூல்களை மற்றவர் "படிக்கக் கூடாது. ஓதுவதைக் கேட்கவும் கூடாது, அப்படிச்



செய்தவர் நாக்கையறுக்க வேண்டும், காதில் ஈயத்தைக் காய்ச்சி உருக்கி ஊற்ற வேண்டும்" என்று தடைகளையும் தண்டனைகளையும் ஏற்படுத்திக் கொண்டதுபோல் அல்லாமல், பரந்து விரிந்த மனப்பான்மையும் பெருந்தன்மையும் உள்ள சமணர்கள் தமது மத நூல்களை அந்தந்த நாட்டுத் தாய்மொழிகளிலே எழுதினார்கள். அதன்படி தமிழிலேயும் பல நூல்களை இயற்றினார்கள். இதனால் தமிழ் நாட்டில் சமண சமயம் செழித்தோங்கத் தொடங்கிற்று.

மக்கள் அறியாதபடி வேறு மொழியில் மதக் கொள்கைகளை மறைத்து வைப்பது மன்னிக்க முடியாத பெருங்குற்றம் என்றும் பெரும் பாவம் என்றும் சமணர் கருதினார்கள். ஆகவே, அவர்கள் தம் மத நூல்களை மக்கள் பேசுகிற தாய் மொழியிலே எழுதினார்கள். இதனைச் சமண சமய வரலாறு ஒன்று நன்கு விளக்குகிறது.

உச்சைனி தேசத்து அரசனது அவைக் களத்திலே, வடமொழியைக் கற்றுத் தேர்ந்து பெரும் புகழ் பெற்று விளங்கிய சித்த சேன திவாகரர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். அதே காலத்தில், இவரைப் போலவே கல்விக் கடலைக் கரைகண்டவர் என்னும் புகழுடன் வாழ்ந்து வந்த விருத்தவாதி முனிவர் என்னும் சமணத் துறவி ஒருவர் இருந்தார். இவர்கள் இருவரும் ஒருவரை



படிப்பகம்

www.padippakam.com



யொருவர் நேரில் கண்டு வாதம் செய்து, தம்மில் யார் அதிகமாகக் கற்றவர் என்று அறியப் பேரவாக் கொண்டிருந்தனர். நெடுநாள் சென்ற பிறகு, இவர் ஒருவரையொருவர் காணும்படி நேரிட்டது. இருவரும் வாதம் செய்யத் துணிந்து, வாதத்தில் தோற்றவர் வென்றவருக்குச் சீடர் ஆகவேண்டும் என்று முடிவு செய்து கொண்டு வாது செய்யத் தொடங்கினர். அவ்வூர்ப் பொது மக்கள் அவர்கள் வெற்றி தோல்வியைச் சொல்ல நடுநிலையாள ராக இருந்தார்கள். சித்தசேன திவாகரர் தமது வடமொழி வல்லமையைப் புலப்படுத்த எண்ணி வட மொழியில் வாது செய்தார். விருத்தவாதி முனிவர், வட மொழியில் நன்கு தேர்ந்தவராக இருந்தும், அந்த மொழியில் வாது செய்யாமல் நாட்டு மக்கள் பேசும் தாய்மொழியிலே வாதம் நிகழ்த்தினார். இந்த வாதப் போரில் வெற்றி பெற்றவர் விருத்தவாதி முனிவரே என்று நடு நின்றவர் முடிவு கூறினர். ஆகவே, உடன் படிக்கையின்படி விருத்தவாதி முனிவருக்குச் சித்த சேன திவாகரர் சீடர் ஆனார்.

இதன் பிறகு சித்தசேன திவாகரர், வடநாட்டு மக்கள் பேசிப் பயின்று வந்த அர்த்தமாகதி மொழி யில் எழுதப்பட்டிருந்த சமண சமய நூல்களை வட மொழியில் மொழி பெயர்த்தெழுதக் கருதித் தமது கருத்தைத் தம் குருவாகிய விருத்தவாதி முனிவரிடம் சொன்னார். விருத்தவாதி முனிவர் அவ்வாறு செய்யக் கூடாது என்று தடுத்தார். மக்கள் பேசிப் பயின்றுவரும் அர்த்தமாகதி மொழியில் உள்ள நூல்களை வடமொழியில் எழுதிவைத்துப் பொது மக்கள் தெரிந்து கொள்ளாதபடி செய்வது பெரும் பாவம் என்பதை நன்கு விளக்கிச் சொன்னார். தம் ஆசிரியர் சொன்ன உண்மையினை உணர்ந்த பின்னர், சித்தசேன திவாகரர் தாம் செய்ய நினைத்த குற்றத்திற்குக் கழுவாயாகப் பன்னிரண்டு ஆண்டு வரை வாய் பேசாமல் ஊமைபோல் வாழ்ந்திருந்தார்.

இந்த வரலாற்றினால், சமணரும் பௌத்தரைப் போலவே, தாய்மொழியின் வாயிலாகப் பொது மக்களுக்குத் தங்கள் மதக் கொள்கைகளைப் போதிக்க வேண்டும் என்னும் கருத்துள்ளவர் என் பதும், மக்கள் அறியாத வேறு மொழியில் நூல்களை எழுதிவைத்துப் பயன்படாதபடி செய்வது பெரும் பாவம் எனக் கருதி வந்தனர் என்பதும் விளங்குகிறது.

இவ்வாறு விரிந்த மனப்பான்மையுள்ள சமணர்கள் தமிழ் நாட்டிலே தமிழ்மொழியில் தம் மதக் கொள்கைகளை எழுதினார்கள். வேறு பல நீதி நூல்களையும் நிகண்டு நூல்களையும் காவிய நூல்களையும் ஒழுக்க நூல்களையும் எழுதினார்கள். இவையும் சமண சமயம் தமிழ் நாட்டில் பரவு வதற்குக் காரணமாயிருந்தன.

தமிழ் நாட்டிலே சமண சமயம் பரவுவதற்கு இன்னொரு காரணமாயிருந்தவர் அந்த மதத்துத் துறவிகள் ஆவர். இவர்கள் ஊர் ஊராகச் சென்று தம் சமயக் கொள்கைகளைப் போதிப்பதைத் தமது கடமையாகக் கொண்டிருந்தனர். சமய முனிவரின் கூட்டத்திற்குச் சங்கம் என்பது பெயர். (சங்கம் =கூட்டம்) ஆதிகாலத்தில் சமண சங்கம் ஒரே கூட்ட மாக இருந்தது. இதற்கு மூல சங்கம் என்று பெயர். பிறகு சங்கம் பெரிதாக வளர்ந்து விட்டது. ஆகவே, அது நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டது, நந்திகணம், சேனகணம், சிம்மகணம், தேவகணம் என்று பெயர் இடப்பட்டது. ஒவ்வொரு கணத்திலும் கச்சை அன்வயம் என்னும் உட்பிரிவுகள் இருந்தன.

"கனக நந்தியும் புட்ப நந்தியும் பவண நந்தியும்
குமணமா
சுனக நந்தியும் குணக நந்தியும் திவண நந்தியும்
மொழிகொள அனக நந்தியர்"

என்று திருஞான சம்பந்தர் தமது திருவாலவாய்ப் பதிகத்தில் கூறுகிறார். நமண நந்தி என்பவரைச் சுந்தரமூர்த்திகள் குறிப்பிடுகிறார். இவர்கள் நந்தி கணத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டுச் சாசனங்களிலும் நந்தி கணத்தைச் சேர்ந்த சமண முனிவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவை: புட்பநந்தி, ஸ்ரீநந்தி கனகநந்தி படாரர் உத்த நந்தி குருவடிகள், பெருநந்தி படாரர், குணநந்தி பெரி யார், அஜ்ஜநந்தி, பவணந்தி படாரர், சந்திரநந்தி முதலியன. நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவரும் இந்த நந்தி கணத்தைச் சேர்ந்தவரே.

சேனகணத்தைச் சேர்ந்த சமண முனிவர்கள் பெயரையும் திருஞான சம்பந்தர் தமது திருவால வாய்ப் பதிகத்தில் கூறுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

"சந்துசேனனும் இந்து சேனனும் தருமசேனனும் கருமைசேர்
கந்து சேனனும் கனகசேனனும் முதலாகிய பெயர்கொளா"

என்று அவர்கூறியதுகாண்க. சுந்தரமூர்த்திகளும் தரும சேனன் என்னும் முனிவரைக் கூறுகிறார். திருநாவுக்கரசு சுவாமிகள் சமணராக இருந்தபோது இந்தச் சேன கணத்தைச் சார்ந்திருந்தார் என்பதை அவர் பெற்றிருந்த தருமசேனர் என்னும் பெயரினால் அறியலாம். சந்திரசேன அடிகள் , தேவசேன படாரர் முதலிய பெயர்கள் சாசனங்களிலும் காணப்படு கின்றன.

சிம்ம கணத்தைச் சேர்ந்தவர்கள் வீரர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டனர் போலும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில் கருமவீரன் என்பவரைக் குறிப்பிடுகிறார். கனகவீர அடிகள், குணவீர படாரர் என்னும் பெயர்கள் சாசனங்களில் காணப்படுகின்றன.

சீவகசிந்தாமணியை இயற்றிய திருத்தக்க தேவரும், சூளாமணியை இயற்றிய தோலாமொழித் தேவரும் தேவகணத்தைச் சார்ந்தவர்கள் போலும்.

பிற்காலத்திலே, நந்தி சங்கத்திலிருந்து (நந்தி கணத்திலிருந்து) திரமிள சங்கம் அல்லது திராவிட சங்கம் என்னும் ஒரு பிரிவு ஏற்பட்டதைச் சாசனங் களினால் அறியலாம். மைசூர் நாட்டுச் சாசனம் ஒன்று இவ்வாறு கூறுகிறது:

"ஸ்ரீமத் திரமிள ஸங்கேஸ்மிம் நந்தி ஸங்கேஸ்தி அருங்களா அன்வயோ பாதி நிஸ்ஸேஷ ஸாஸ்த்ர வாராஸி பாரகைஹி"

"நந்தி சங்கத்தோடு கூடிய திரமிள சங்கத்து அருங்கலான்வயப் பிரிவு," என்பது இதன் பொருள். வச்சிரநந்தி என்பவர் விக்கிரம ஆண்டு 526 இல் (கி.பி. 470 இல்) திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார் என்று தர்சனசாரம் என்னும் நூலில் தேவசேனர் என்பவர் எழுதியிருக்கிறார் என்று கூறுவர்.

எனவே, வச்சிரநந்தி மதுரையில் திராவிட சங்கம் (தமிழ்ச் சங்கம்) ஏற்படுத்தினார் என்பதைச் சிலர் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிச் சங்கம் ஏற்படுத் தினார் என்று கருதுகிறார்கள். இது தவறு. வச்சிரநந்தி ஏற்படுத்தியது சமண முனிவர்களின் சங்கமாகும். இந்தச் சங்கத்தைச் சார்ந்த முனிவர்கள் தமிழ் நூல் களையும் இயற்றியிருக்கக் கூடும். ஆனால், இந்தச் சங்கம் பாண்டியர் நிறுவித் தமிழை ஆராய்ந்த தமிழ்ச் சங்கம் போன்றது அல்லது என்று தோன்றுகிறது. மைசூர் நாட்டுச் சாசனங்கள் திராவிட சங்கத்தைச் சேர்ந்த சில சமண முனிவர்களின் பெயர்களைக் கூறுகின்றன:—1, திரிகாலமுனி பட்டாரகர். திராவிட சங்கத்து புஷ்டகச்சையைச் சேர்ந்தவர், கி.பி. 900 இல் காலமானார். 2. அஜிதசேன பட்டாரகர் என்னும் வாதி கரட்டர்; திராவிட சங்கத்து அருங்கலான் வயத் தைச் சேர்ந்தவர். 3. மௌனி பட்டராகர், திராவிட சங்கத்துக் கொண்ட குண்டான்வயம் புஷ்டக கச்சையைச் சேர்ந்தவர். 4. சாந்திமுனி திராவிட சங்கம், அருங்கலான்வயம் நந்தி கணத்தைச் சேர்ந் தவர். 5. ஸ்ரீ பாலதிரை வித்யர், இவர் மாணாக்கர் வசுபூச்ய சித்தாந்த தேவர். இவர்கள் இருவரும் திரமிள சங்கத்து அருங்கலான்வயத்தைச் சேர்ந் தவர்கள். 6. குணசேன பண்டிதர், திராவிட சங்கம், தவுள கணம், இருங்கலான்வயத்தைச் சேர்ந்தவர்.

சமண சமயத்துப் பெண்பால் துறவிகளைச் சமணர் இயக்கியர் (யட்சி) என்றும், ஆர்யாங்கனை என்றும், கந்தியார் என்றும் கூறுவர். கந்தியார் என்பது கவுந்தி என்றும் வழங்கப்படும். கண்ணகியும் கோவலனும் மதுரைக்குச் சென்றபோது அவர் களுடன் சென்ற கவுந்தியடிகள் சமணசமயத் துறவி யாகிய கந்தியார் ஆவார். சமண சமயத்துப் பெண் பால் துறவிகளுக்குக் குரத்தியர் என்று வேறு பெய ரும் உண்டு. குருத்தி என்பது குரவர் (=குரு) என்பதன் பெண்பாற் பெயராகும். பெரிய புராணமும் திரு விளையாடற் புராணமும் சமணசமயப் பெண்பால் துறவிகளைக் குரத்திகள் என்று கூறுகின்றன. தமிழ் நாட்டுச் சாசனங்களிலும் குரத்தியர் என்னும் பெயர் கள் காணப்படுகின்றன. அவற்றில் சில வருவாறு:

ஸ்ரீமிழலூர்க் குரத்திகள், சிறிவிசயக் குரத்தியார், திருச்சாணத்துக் குரத்திகள், நால்கூர்க் குரத்திகள், இளநேச்சுரத்துக் குரத்திகள், ஸ்ரீமம்மை குரத்திகள், மாணாக்கியார் அரிட்டநேமிக் குரத்திகள்,

**கண்ணகியும் கோவலனும் மதுரைக்குச் சென்றபோது அவர்களுடன் சென்ற கவுந்தியடிகள் சமணசமயத் துறவியாகிய கந்தியார் ஆவார் சமண சமயத்துப் பெண்பால் துறவிகளுக்குக் குரத்தியர் என்று வேறு பெயரும் உண்டு**



படிப்பகம்

www.padippakam.com



ஸ்ரீபட்டினிப்படாரர் மாணாக்கிகள், திருப்பருத்திக் குரத்திகள், பேரூர்க் குரத்திகள், மாணாக்கியார் மிழலூர்க் குரத்திகள், கூடற் குரத்தியார், வேம்பு நாட்டுக் குரத்தி, கனக வீரக் குரத்தியார், பிருதி விடங்கக் குரத்தி.

சமணசமயத்தைச் சேர்ந்த துறவிகள் சமண சமயம் பரவுவதற்காகப் பெரிதும் உழைத்து வந்தார்கள்.

தமிழ் நாட்டிலே சமண சமயம் பரவுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. மீன் பிடித்தல், வேட்டையாடுதல் போன்ற உயிர்க்கொலை செய்யும் தொழில்களைத் தவிர ஏனைய தொழில்களை எல்லாம் இந்தச் சமயம் சிறப்பித்துப் போற்றி வந்தது. மிகச் சிறந்த தொழிலாகிய பயிர்த்தொழிலை, பிராமண மதம் எனப்படும் வைதீக மதம் இழிவான தொழில் என்று தாழ்வு படுத்தியது போலல்லாமல், சமண சமயம் பயிர்த் தொழிலை மிகச் சிறந்த தொழில் என்று போற்றியது. பயிர்த் தொழில் செய்யும் வேளாளரும், வாணிபம் செய்யும் வணிகரும் ஏனைய தொழிலாளரும் இந்த மதத்தை மேற்கொண்டிருந்தனர். எந்நாட்டில் எக்காலத்திலும் பொருளாதாரத் துறையில் செழிப்புற்றுச் சிறப்பும் செல்வாக்கும் பெற்றிருப்பவர் வாணிகரும், விவசாயிகளும் ஆவர். இவர்கள் சமண சமயத்தைச் சேர்ந்திருந்தபடியால் ஏனைய மக்களும் இச்சமயத்தைத் தழுவுவரராயினர். சேர சோழ பாண்டிய, பல்லவ அரசர்களில் பலர் சமண சமயத்தைச் சேர்ந்திருந்தனர். இவர்களால் சமண சமயத்துக்கு ஆதரவும் செல்வாக்கும் ஏற்பட்டன. இந்த மதத்தின் செல்வாக்கைக் கண்டு, சமண சமயத்தவரல்லாத அரசரும் கூட, சமணப் பள்ளிகளுக்கும் மடங்களுக்கும் நில புலங்களையும் பொன்னையும் பொருளையும் "பள்ளிச் சந்தமாக"க் கொடுத்து உதவினார்கள்.

இத்தகைய காரணங்களினாலே, சமணசமயம் தமிழ் நாட்டிலே வேருன்றித் தழைத்துச் செழித்துப் பரவியது. முற்காலத்தில், சமண சமயம் (பௌத்த சமயம்கூட) தமிழ்நாட்டிலே செழித்துப் பரவியிருந்ததையும் வைதீக மதம் முதலிய ஏனைய மதங்கள் அடங்கிக் கிடந்ததையும் பெரிய புராணம் முதலிய நூல்கள் நன்கு விளக்குகின்றன.

"மேதினிமேல் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே

ஆதிஅரு மறைவழக்கம் அருகி, அரன் அடியார்பால்

பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்டு ஏதமில்சீர்ச் சிவபாத விருதயர்தாம் இடருழந்தார்."

என்று, திருஞான சம்பந்தரின் தந்தையார் சமண சமயமும் பௌத்த மதமும் தமிழ் நாட்டில் செழித்திருந்ததைக் கண்டு வருந்தியதாகப் பெரிய புராணம் கூறுகிறது. மேலும்.

"அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட....."

ஞானசம்பந்தர் பிறந்தார் என்று மேற்படி புராணம் கூறுகிறது. இன்னும்.

'பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்சீர்ப் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழிருட் குழுக்கள் போலத் தொடைமயிற் பீலி யோடு
மூழிநீர் கையிற் பற்றி அமணரே ஆகி மொய்ப்ப"
"பறிமயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுத்தும் மேனிச்
செறியுமுக் குடையும் ஆகித் திரிபவர் எங்கும் ஆகி
அறியும்அச் சமய நூலின் அளவினில் அடங்கிச் சைவ
நெறியினில் சித்தம் செல்லா நிலைமையில் நிகழுங் காலை"

என்று பாண்டிய நாட்டிலும் சமணம் செழித்திருந்ததை அப்புராணம் கூறுகிறது. இச்செய்தியையே பிற்காலத்துத் திருவிளையாடற் புராணங்களும் கூறுகின்றன. பண்டைக் காலத்திலே தமிழ்நாடு முழுவதும் சமண சமயம் பரவியிருந்த செய்தியை, இலக்கியங்களும், ஆங்காங்கே காணப்படுகிற சமண உருவச் சிலைகளும், சமணக் கோயில்களும், கல்வெட்டுச் சாசனங்களும் சான்று பகர்கின்றன என்று மேலே கூறினோம். இந்தச் சான்றுகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்து ஆராய்ந்து நோக்குவோமானால், தமிழ் நாட்டில் முற்காலத்தில் சமண சமயம் எவ்வளவு செழித்துச் சிறப்புற்றிருந்ததென்பது நன்கு விளங்கும்.

("சமணமும் தமிழும்"— முதற் பகுதி— நூலிலிருந்து)



படிப்பகம்

www.padippakam.com



# நியாயங்கள்

## இந்திரா பார்த்தசாரதி

**ஆர். ராஜகோபால்**

ஓர் இந்தியப் பேராசிரியர் போலந்தில் எதிர்கொள்ளும் அனுபவங்கள் சார்ந்த கதை. மூன்று வித்தியாசமான தேசிய இனப் பண்பாட்டுக் கூறுகள் ஒன்றை ஒன்று பாதித்துக் கொள்வதும் அதனின்று வெளிப்படும் புதியதான நிகழ்வுகளும் கதையின் மையமாகச் செயல்படுகிறது.

லேசான மகிழ்ச்சியில் ஆரம்பிக்கும் கதை (போலிஷ் மக்களின் கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் இந்தியர்களைப் போலவே - அவர்கள் நீண்ட நாட்கள் தொடர்ந்து அடிமைகளாக இருக்கக் காரணம் என ஆசிரியர் இக்கதை குறித்துப் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறார்.) கொஞ்சம் கொஞ்சமாக விரிந்த உலகளாவிய நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் ஒரு பொதுத் தன்மைக்குள் கொண்டுவருகிறது.

சென்ற நூற்றாண்டின் முக்கிய நெகிழ்வான ஹிட்லரின் மரண முகாமின் அதிர்ச்சியூட்டும் நேரடியான விஷயங்கள். இச்சமூகக் கொடுமைகளின் பாதிப்புகளை தனிமனிதனாக நேருக்கு நேர் சந்தித்து மனித அழிவுகளின் துன்பத்தையும் நோவையும் தன்னுள் ஏற்று, அந்தக் காரணத்தினாலேயே துருத்திக் கொள்ளாமல் இயன்ற அளவு மனப்பிறழ்வு அடைந்தவரின் மறுவாழ்விற்கான சீரமைப்புச் சிகிச்சையில் ஈடுபடும் ஒருவரைச் சுற்றிப் பின்னப்படும் நிகழ்வுகள். இதில் நேரிடும் இயல்பான நெருக்கடிகள் - எதிர்பாராத திருப்பங்கள்.

பண்பாட்டு நிலைகளின் வேறுபாடுகள் மெல்லிய ஆனால் அழுத்தமான நகைச்சுவையாகவும் அதே சமயம் வலிமையான முரணாகவும் வெளிப்படுகின்றன. கதை சொல்பவர் நேரிடையாக இயக்கத்தில் பங்கு கொள்வதில்லை. ஆனால் கதையின் நிகழ்வுகளின் தொடர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார். எல்லா நிலைகளிலும் சுதந்திரமாகக் கருத்துக் கூறும் தன்மையை இதனால் எடுத்தாள முடிகிறது. கதையின் மொழி வித்தியாசமாக நேரடித் தொனியுடன் உள்ளது. அதனால் மிகப்பயங்கரமான அதிர்ச்சியூட்டும் செய்திகளும் உணர்ச்சி பூர்வமாக இல்லாமல் அறிவுரீதியான பார்வையைக் கொடுப்பதாய் தோற்றம் கொள்கிறது. மிகவும் வலிமையா க, மதிப்பீடுகளையே மாற்றச் செய்யும் அனுபவங்கள் வாசகனைத் தாக்குகின்றன. ஆச்விச்சின் மரண முகாம்கள் இன்னும் தொடருகின்றன, வேறு வேறு வடிவங்களில் என்பதே போல்.

அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் ஆராய வலியுறுத்தும் பன்முகவாசிப்புக்கு உட்படும் கதை. கதை முடியும் போது காலமும் தூரமும் கடந்து வந்திருந்தாலும் நேரிடையாக நம்மை கைகொள்கிறது. வாசிக்கும் தன்மை அதிகம் கொண்டு மீண்டும் மீண்டும் வாசிக்க புதிய பரிமாணங்களும் எடுத்துச் செல்லும் இக்கதையை தமிழ்ச் சிறுகதையின் முக்கிய வரவுகளில் ஒன்றாகக் கருதவேண்டும் எனப்படுகிறது. ●

**யா**னுஷ் வால்டனை நான் சந்தித்தது ஒரு கல்யாணத்தில். என் மாணவி ஒருத்தியினுடைய சகோதரனுக்கு வர்ஷாவா பக்கத்தில் ஒரு கிராமத்தில் நடந்த திருமணம் அது. வர்ஷாவாவில்தான் சர்ச்சில் சடங்குகள் நடந்தன. விருந்து கிராமத்தில்.

விருந்து என்றால், மதியச் சாப்பாடு என்றோ, இரவுச் சாப்பாடு என்றோ வரையறை கிடையாது. பிற்பகல் 3 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட மேஜைகளில் வைக்கப்படும் உணவோ வோட்காவோ அடுத்த நாள் காலை வரை அள்ள அள்ளவோ, குடிக்கக் குடிக்கவோ குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். பக்கத்து ஹாலில் பாட்டும் நடனமும் தொடர்ந்து நிகழும். குடிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் இடைவேளை நடனமாடுவது தான்.

நான் மாலை ஆறு மணிக்கு என் மாணவியிடம் "போய் வருகிறேன்" என்று சொன்ன போது, அவள் என்னிடம் கூறினாள்: "நீங்கள் இப்பொழுது போனால் விருந்துக்குச் செய்யும் அவமரியாதையாக நினைப்பார்கள்."

"அப்படியானால் எத்தனை மணிக்குப் போவது நல்லது?"



படிப்பகம்

www.padippakam.com

"நாளைக் காலை."

என்தலை சுற்றியது. "அது வரை நான் என்ன செய்வது?"

"மற்றவர்கள் செய்வதைச் செய்ய வேண்டும்."

"ஸ்லாவ் மக்களுக்கு இருக்கக்கூடிய உடல் தெம்பு எனக்குக் கிடையாது."

அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: "வாருங்கள். ஒரு சுவாரஸ்யமான மனிதருக்கு உங்களை அறிமுகப்படுத்துகிறேன்."

அப்பொழுதுதான் யானுஷ் வால்டனைச் சந்தித்தேன்.

அறுபது வயதிருக்கலாம் என்ற என் முதல் யூகம் தப்பாய்ப் போயிற்று. எழுபத்தைந்து வயது என்று பிறகுதான் தெரியவந்தது. தலையில் மயிர் இருந்தது என்பதற்கு அடையாளமே கிடையாது. ஆரோக்கியம், சிரிப்பிலும், தேகக் கட்டிலும் தெரிந்தது. அவர் கை குலுக்கிய போது என் கை வலித்தது.

[redacted]



என் மாணவி என்னை அறிமுகப்படுத்தியதோடு மட்டுமில்லாமல், நான் ஸ்லாவ் மக்களைப் பற்றிக் கூறியதையும் அவரிடம் சொன்னாள்.

அவர் பெரிதாகச் சிரித்துக் கொண்டே சொன்னார்: "தெம்பு என்பது உடம்பைப் பொறுத்த விஷயமல்ல; மனதைப் பொறுத்தது. அதோ பாருங்கள், அந்தப் பெண்ணை... உல்லாசமாக நடனமாடிக் கொண்டிருக்கிறாளே... அவள் ஒரு வருஷத்துக்கு முன்னால், இதே சமயத்தில் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தாள்."

"உரிய வேளையில் வீட்டுக்குப்போக விரும்புவதும், தற்கொலை செய்து கொள்ள முயல்வதும் ஒன்று என எனக்குத் தெரியாது..."

அவர் புன்னகை செய்தார். பிறகு என் தோள்த் தட்டிக் கொண்டே சொன்னார்: "மனத் தெம்பில்லாதவர்கள்தான் சுலபமாகச் சலிப்படைந்து விடுவார்கள். நீங்கள் இப்பொழுது வீட்டுக்குப் போக விரும்புவதற்குக் காரணம் என்ன? உங்களுக்கு 'போரடிக்கிறது,' அவ்வளவுதானே? என்னுடன் வாருங்கள். உங்களுக்கு 'போர்' அடிக்காமல் பார்த்துக் கொள்கிறேன்."

"அந்தப் பெண் ஏன் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தாள்?"

"அந்தப் பெண் ஏன் இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறாள்? மகிழ்ச்சி ஏற்படும் போது, நாம் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்வதில்லை. மகிழ்ச்சியாக இருக்கத் தெரிந்திருக்கிறது. சோகம் ஏற்படும் போது நமக்கு நாமே இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொள்ளும் விளைவாகத்தான் ஏதேதோ செய்யத் தோன்றுகிறது. எல்லாருக்கும் மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுத் தருவதுதான் என் வேலை..."

பிறகுதான் அவரைப் பற்றித் தெரிந்து கொண்டேன். மனநோய்க்குச் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தவர்களுக்கென்று ஒரு புனரமைப்புக் கூடம் நடத்தி வருகிறாரென்று. பாட்டு, நடனம், நாடகம் ஆகியவை எல்லாம் அங்கு உண்டு. ஃபுட்பால், டென்னிஸ், டேபிள் டென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் வேறு. இதற்கு அவர் 'புனரமைப்புக் கூடம்' என்று பெயரிடவில்லை. 'படைப்புக் கூடம்' என்றுதான் இதை அவர் குறிப்பிடுவது வழக்கம்.

யானுஷ், ஒரு மிகச்சிறந்த பாடகர். மரபு இசை, ஜாஸ் போன்றவைகளில் நல்ல பயிற்சி. தனிப்பட்ட முறையில் அவருக்கு 'பாப் இசை' பிடிக்கா விட்டாலும் அவர் நடத்தி வந்த கூடத்தில் அதில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு மிகுந்த ஆதரவு அளித்து வந்தார். அவர் இரண்டாம் உலகப் போருக்கு முன்பு வியன்னாவில் இசை கற்றுப் பட்டம் வாங்கியவர். வியன்னாவி



படிப்பகம்

www.padippakam.com

லிருந்தபோது, ஃப்ராய்டின் சிஷ்யப் பரம்பரையைச் சேர்ந்த சில மனோதத்துவ அறிஞர் களோடு நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்கள் அனைவரும் ஆஷ்விச்சில், ஹிட்லரின் 'மரண முகா'மில் இறந்து போனதைப் பற்றி அவர் என்னிடம் சொல்லி யிருக்கிறார். உலகப் போருக்குப் பிறகு ஃபிரான்ஸிலும், அமெரிக் காவிலும் சில ஆண்டுகள் அவர் இருந்திருக்கிறார். இருந்தாலும் போலந்தைத் தவிர, வேறு எந்த நாட்டிலும் அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அவர் ஆஷ்விச்சில் இருந் தும், உயிரோடு தப்பியது ஒரு ஏதேச்சையான சம்பவம். அவர் மனைவி அங்கு இறந்து போனாள். அவருடைய மூன்று வயது மகளுக்கு என்ன ஆயிற்று என்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அவரிடம் சொல்லவேயில்லை. அவளையும் அவர்கள் கொன்றி ருப்பார்கள் என்பது அவருடைய யூகம். ஆஷ்விச் அனுபவங்களைப் பற்றி புத்தகம் எழுதித் தரும்படி பலர் அவரைக் கேட்டிருக் கிறார்கள். அவர் மறுத்துவிட்டார்.

"ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சரித்திரத்தின் சதியினாலோ அல்லது முன்கூட்டியே வரை யறுக்கப்பட்ட விதியின் தத்து வத்தாலோ ஒரு நாடு முழுவதுமே ஒரு தனி மனிதனின் கவர்ச்சிக்கு அடிமையாகப் பைத்தியம் பிடித்து அலைந்ததென்றால் இதற்கு யாரைக் குற்றம் சொல்வது? ஹிரோஷிமா, நாகசாகி, ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியா, வியட்நாம், எல்சால் வடோர் ஆகியவை இன்னும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதானே இருக் கின்றன.

"சரித்திரம் நமக்கு வாத்தி யார் என்பதெல்லாம் வெறும் கதை. நான் ஒரு புத்தகம் எழுதி ஒரு கூட்டத்துக்குப் பாடம் கற்றுத் தருவதைக் காட்டிலும் தனி மனிதனுக்கு உதவி செய்ய முடி யுமா என்பதுதான் என் முதல் அக்கறை... என்று அவர் தாம் புத்தகம் எழுத மறுத்து விட்ட தற்கான காரணத்தையும் என்னி டம் ஒரு சமயம் சொன்னார்.

முதல் தடவையாக அவரு டன் அவருடைய 'படைப்புக் கூட'த்துக்குச் சென்ற அனுபவம் இன்னும் பசுமையாக நினைவில் இருக்கிறது.

சிலர் 'செஸ்' விளையாடிக் கொண்டிருந்தனர்: சிலர் புத்த கத்தில் ஆழ்ந்திருந்தனர். 'கிட்டார்' வாசித்துக் கொண்டிருந்த சில இளைஞர்களைச் சுற்றி ஒரு சிறு கூட்டம். யானுஷ் என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சிறிது நேரம் 'டேபிள் - டென்னிஸ்' விளை யாடிய பிறகு நான் அங்கிருந்த பத்திரிகைகளைப் புரட்டியவாறு ஜன்னல் அருகே இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன்.

ஒரு வயதானவர் என்ன ருகே வந்து உட்கார்ந்து என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார். நானும் பதிலுக்குப் புன்னகை செய்தேன்.

"நீங்க இந்தியரா?"

"ஆமா..."

"இந்தியா முழுவதும் காடுகள் என்கிறார்களே?"

இந்தியப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படித்து விட்டு அவர் அவ்வாறு கூறு கிறாரா அல்லது இதுதான் அவருடைய பூகோள அறிவா என்று எனக்கு விளங்கவில்லை.

"இந்தியா முழுவதும் இல்லை. பல பகுதிகளில் காடுகள் இருக்கின்றன."

"நீங்கள் எங்கே வசிக் கிறீர்கள்? காட்டுப் பகுதியிலா அல்லது..."

"டெல்லி... அது காட்டுப் பகுதியா, நகரம் என்று நிச்சயம் சொல்வதற்கில்லை."

"எனக்குக் காடுகள் என்றால் மிகவும் பிடிக்கும். நான் போலந்தின் வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்தவன். மசூரே... அங்கு காடுகள் அதிகம். நீங்கள் போயிருக்கிறீர்களா?"

"இல்லை..."

'என்ன பரிதாபத்துக்குரிய மனிதன்' என்பது போல் அவர் என்னைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்.

இன்னும் கொஞ்ச நேரத்துக் குப் பிறகு ஒரு நடு வயதுக்காரர் வந்தார். சிகரெட் பாக்கெட்டை என்னிடம் நீட்டினார்.

"நான் சிகரெட் குடிப்பதில்லை"

"நீங்கள் ஏன் பசுவைச் சாப்பிட மறுக்கிறீர்கள்?"

"நானா?"

"நீங்களில்லை. பொதுவாக இந்தியர்கள்."

"நானும் சாப்பிடுவதில்லை. பொதுவாக நான் மாமிசமே சாப்பிடுவதில்லை. இந்தியர்களில் ஹிந்துக்கள் பசு சாப்பிடுவ தில்லை."

"ஏன்?"

"பசு நம்மைச் சாப்பிடு கின்றதா? நாம் மட்டும் பசுவை ஏன் சாப்பிட வேண்டும்?"

அவர் யோசனை செய்து கொண்டு சிகரெட்டைப் பற்ற வைத்தார். சிறிது நேரம் கழித்துச் சொன்னார்: "இதில் சாப்பிட வேண்டும் என்றால், சிங்கம், புலி, கரடி ஆகியவற்றைத்தான் நாம் சாப்பிட இயலும், இது சாத்தியமா?..

"கொஞ்சம் கஷ்டம்தான்..."

"முள்ளம் பன்றி... முடியவே முடியாது."

"முட்களை எடுத்து விட்டால் பன்றி மிஞ்சுமா என்பது சந்தேகம்தான்."

அவர் கண்களை மூடிக் கொண்டு இந்தப் பிரச் னையைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

போது நான் எழுந்து யானுஷ் இருந்த அறைக்குச் சென்று விட்டேன்.

யானுஷ் ஏதோ ஒரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் புன்னகை செய்தார்.

"எப்படி இருக்கிறது இந்த இடம்?"

"எல்லாரும் குணமானவர்களா?"

"எது குணம் என்று நாம் நிர்ணயிப்பதைப் பொறுத்த விஷயம். அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். தேவையான அளவுக்கு உலகத்தோடு அவர்களால் அனுசரித்துப் போக முடிகிறது."

"தேவையான அளவுக்கு அனுசரித்துக் கொண்டுபோனால் போதும் என்ற மன உறுதி இருந்தால் போதும். வாழ்க்கையின் வெற்றி எதுவென்று தெரியாமல், எத்தனை விஷயங்களைத் துரத்திக் கொண்டு நம்மை நாமே சமரஸப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது?"

"நீங்கள் சொல்வது நான் சொல்வதற்கு விமர்சனம்" என்று கூறிவிட்டு அவருக்கென்றே அமைந்த முறையில் லேசாகக் கண்ணடித்தார் யானுஷ் வால்டன்.

எனக்கும் வால்டனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பு, என் இந்திய நண்பர்களுக்கு விவாதத்துக்கு உரிய விஷயமாக இருந்தது.

"அவரே சிகிச்சை பெற்றுக் குணமடைந்தவராக இருக்க வேண்டும்" என்றார் ஒருவர்.

"குணமடைந்தாரா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம்'' என்றார் இன்னொருவர்.

"நீங்கள் இருவரும் நண்பர்கள் என்பதைப் பற்றி நான் ஆச்சரியப்படவில்லை'' என்றார்கள் இருவரும் சேர்ந்து.

வால்டனைப் பற்றி இந்த மாதிரி அபிப்பிராயம் உண்டாவதற்குக் காரணமும் இருந்தது. அதைப் பற்றியும் நான் சொல்ல வேண்டும்.

**எனக்கும் வால்டனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பு, என் இந்திய நண்பர்களுக்கு விவாதத்துக்கு உரிய விஷயமாக இருந்தது.**

ஒரு சமயம் என் இந்திய நண்பர்களை என் வீட்டுக்கே அழைத்திருந்தேன். வால்டன், இந்தியர்களைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பம் தெரிவித்திருந்ததால் அவரையும் கூப்பிட்டிருந்தேன்.

அறிமுகங்கள் ஆன பிறகு யானுஷ் கேட்டார்: ''எங்கள் நாட்டில் ராணுவ ஆட்சி நடக்கும் படியான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"ஒரு பிரச்னையும் இல்லை. நாங்கள் தூதுவரகத்தில் பணியாற்றுவதால், எங்களுக்கு எல்லாம் கிடைக்கின்றன... அரிசி, கோதுமை, இறைச்சி, குடிவகைகள்... வேறென்ன வேண்டும் எங்களுக்கு?"

''வேறு எதுவுமே வேண்டாமா?"

''அஃப்கோர்ஸ், பருப்பு வகைகள், காரப் பொருள்... மசாலாப் பொடி... இவை எப்பொழுதுமே வார்ஸாவில் கிடைப்பதில்லை. பெர்லினுக்குப் போனால் தாராளமாய்க் கிடைக்கும். பெர்லினுக்குப் போவது பற்றி எங்களுக்கு ஒரு பிரச்னையும் இல்லை."

யானுஷ், அதற்குப் பிறகு அவர்களிடம் பேசவேயில்லை. அவர்கள் எது கேட்டாலும் ''தெரியாது'' என்று பதில் சொன்னார்.

"எங்களோடு ஏன் பேச மறுக்கிறீர்கள்!"

"என்ன பேசுவதற்கு இருக்கிறது? உங்களோடு உரையாடல் சாத்தியமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை."

அவர்கள் போன பிறகு யானுஷ் கேட்டார்: "இவர்கள் உங்கள் நண்பர்களா?"

"ஆமாம், இவர்களிடம் ஒரு தப்பும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இவர்கள் இந்தியர்கள் என்பதைக் காட்டிலும் சராசரி மனிதர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்... போலந்திலும் நிறையச் சராசரி மனிதர்கள் உண்டு."

"உங்கள் நாட்டுப்பற்றைப் பாராட்டுகிறேன்..."

"இது நாட்டுப்பற்றல்ல... யதார்த்தப் பார்வை."

யானுஷ் வால்டனிடம், என் இந்திய நண்பர்கள் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைச் சொன்னபோது அவர் சிரித்துக் கொண்டே கூறினார்: "படைப்புக் கூடத்தைச் சேர்ந்த பெண் ஒரு சமயம் கேட்டாள்: 'படைப்புக் கூடத்தைச் சேராத மற்றவர்கள் ஏன் நார்மலாக இல்லை?' இதுதான் என் நினைவுக்கு வருகிறது."

"என்னைப் பற்றிக் கூடவா இந்தக் கருத்து?"

"நீங்கள் நார்மலாக ஆவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்பது அவர்களுடைய அபிப்பிராயம்."



படிப்பகம்

www.padippakam.com

வால்டனைப் பற்றி நான் இதுவரை இவ்வளவு கூறியதால் உங்களுக்கு அவரைப் பற்றி ஒரு மனச்சித்திரம் உருவாகியிருக்கும். 'தன்னம்பிக்கை உள்ளவர்; நகைச் சுவை மிகுந்தவர்; வாழ்க்கைச் சவால்களைப் புன்னகையுடன் சந்திக்கக் கூடிய திறன் மிக்கவர்' அப்படித்தானே?

மனித சுபாவத்தை வரையறுத்து ஃப்ரேம் போட்டு மாட்டி விட முடியாது. இதே வால்டன் என்ன செய்தார் தெரியுமா? என்ன செய்வார் என்பதைவிட அவருக்கு என்ன நடந்தது என்று சொல்ல வேண்டும்.

சொல்லுகிறேன்: எனக்கு ஒரு நாள் விடியற்காலை ஐந்து மணிக்கு ஃபோன் வந்தது. வால்டன் வீட்டிலிருந்து ஒரு பெண் பேசினாள். "உடனே புறப்பட்டு வாருங்கள்."

"ஏன்?"

"யானுஷ் வால்டன் உங்களைப் பார்க்க விரும்புகிறார்."

"அவருக்கு என்ன ஆயிற்று? ஏன் பேசவில்லை?"

"புறப்பட்டு வாருங்கள், தெரியும்."

போனேன்.

யானுஷ் கட்டிலில் படுத்திருந்தார். திடீரென்று பத்து வயது கூடிவிட்டாற் போலிருந்தது. என்னைப் பார்த்ததும் புன்னகை செய்தார். விரக்திப் புன்னகை... இவருக்கு என்ன உடம்புக்கு?

அவரருகில் ஒரு பெண் மணி உட்கார்ந்திருந்தாள். நாற்பதோ அல்லது இன்னும் கூடவோ இருக்கலாம். அவளை நான் அதுவரை பார்த்ததே இல்லை. படைப்புக் கூடத்தைச் சேர்ந்த பெண் என்றும் தோன்றவில்லை. அவள் என்னுடன் பேசும்போது உடைந்த ஆங்கிலத்தில்தான் பேசினாள். நான் பதிலுக்கு போலிஷில் பேச முற்பட்ட போது அவள் போலிஷ் பேசவில்லை. வேற்று நாட்டைச் சேர்ந்தவள் என்று எனக்குப் பட்டது.

> **அவளை நான் அதுவரை பார்த்ததே இல்லை படைப்புக் கூடத்தைச் சேர்ந்த பெண் என்றும் தோன்றவில்லை அவள் என்னுடன் பேசும்போது உடைந்த ஆங்கிலத்தில்தான் பேசினாள்**

"என்ன உடம்புக்கு உங்களுக்கு?"

வால்டன் சிறிது நேரம் பேசாமலிருந்தார்.

"எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. என்ன நடந்தது தெரியுமா?"

"சொல்லுங்கள்."

"நான் தற்கொலை செய்து கொள்ள முயன்றேன்."

நான் திடுக்கிட்டேன்... "நீங்களா?"

"ஆமாம்... நான்தான்... இந்தப் பெண்மணி இல்லாவிட்டால் என் கதை முடிந்திருக்கும்... நான் தற்கொலை செய்து கொள்ள முயன்றதற்கும் இந்தப் பெண்தான் காரணம்..."

"புரியவில்லை."

அவர் கண்களை மூடியவாறு சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

அந்தப் பெண் தேநீர் கொண்டு வந்தாள். போலிஷ் முறையில் தயாரித்த தேநீர். தம்ளரில் தேயிலைத் துகள்களைப் போட்டுவிட்டு அதில் சுடச்சுட வெந்நீர் ஊற்றி விட வேண்டும்..

அவ்வளவுதான்.

அவர் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். "நேற்றிரவு எனக்கு ஒரு கனவு.. இது கனவா, நிஜமா என்று எனக்குப் புரியவில்லை. நிஜமில்லை என்று அடியோடு ஒதுக்கிவிடவும் முடியாது. வரம்புக்கு உட்பட்ட நம் பகுத்தறிவைக் கொண்டு, 'இது நிஜம், இது கற்பனை' என்று அளவிட முயல்வதும் வீண் வேலை.

ஆஷ்விச் அனுபவங்கள் தொடர்ந்து நிகழ்கின்றன. என் கண்ணெதிரே குழந்தைகளை 'காஸ்' சேம்பருக்கு அழைத்துச் செல்கிறார்கள். 'மரணச் சுவர்' எதிரே இளைஞர்களைச் சுடுகிறார்கள். அடுக்கடுக்காக இருக்கும் குறுகிய இடங்களில் தூங்குகின்றவர்களைக் காலால் உதைத்து வேலைக்கு எழுப்புகிறார்கள். வேதனை பொறுக்க முடியாமல் தலை தெறிக்க ஓடும் ஒருவன் மின்சார வேலியைத் தொட்டு இறக்கிறான். அவன் மரணத்தை உறுதிப்படுத்துவது போல் அவன் உடலை மறுபடியும் சுடுகிறார்கள்.


இதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இது உண்மையாகவே அன்று நடந்தது. அப்பொழுது நடந்ததை மறுபடியும் காண்கிறேன். ஒரு யூதப் பாதிரியை அவருடைய வேதப் புத்தகத்தை எதிரே வைத்து அதன் மீது அவர் காறித் துப்பும்படி பணிக்கிறார்கள். ஓர் இளம் நாஜிப் போர்வீரன் ஒரு கவிதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டே இதை மேற்பார்வை இடுகிறான். அவர் காறித் துப்புவதை நிறுத்தியதும் அவன் உறுமுகிறான்.

"ஏன் நிறுத்தி விட்டாய்?"



படிப்பகம்

www.padippakam.com




''தொண்டை வறண்டு விட்டது."

"இந்தா..." அவன் அவர் வாயில் காறி உமிழ்கிறான்.

இப்படி நடந்திருக்க முடியுமா என்று நீங்கள் ஆச்சரியப் படலாம். நடந்தது... நேற்றிரவும் நான் அதைப் பார்த்தேன். இலக்கியம், இசை, நுண் கலைகள் ஆகியவை மனிதப் பண்பை வளர்க்கும் என்கிறார்களே... இது பொய் என்பது ஆஷ்விச்சில் நிருபணமாகி விட்டது. 'காஸ் சேம்ப'ருக்கு அணி வகுத்துச் செல்லும்போது வாக்னர் இசை. 'மரணச் சுவ'ருக்குப் போகும் போது பாஹ். நாஜிகளுக்குக் கலை ரசனை இல்லை என்று யார் சொன்னார்கள்?

நேற்றிரவு எனக்கேற்பட்டது கனவு என்று நான் நம்பத் தயாராக இல்லை. நிஜ அனுபவம் என்றுதான் உறுதியாக நினைக்கிறேன்... அதற்குக் காரணம் உண்டு."

"என்ன காரணம்?"

''நான் ஆஷ்விச்சிலிருந்த போது, தேவைப்படும் என்று தூக்க மாத்திரைகள் இரகஸ்யமாக வைத்திருந்தேன். நேற்றிரவு அவற்றை - அப்பொழுது சாப்பிடாமல் வைத்திருந்த மாத்திரைகளை சாப்பிட்டேன். அதன் விளைவாகத்தான்..."

"அந்த மாத்திரைகள்தான் என்று எப்படி உங்களால் நிச்சயமாகச் சொல்ல முடியும்?"

"நான் இப்பொழுது தூக்க மாத்திரைகளே வைத்துக் கொள்வதில்லை."

''தூக்க மாத்திரைகள் சாப்பிட்டீர்கள் என்று எப்படித் தெரியும்?"

"பயங்கர வாந்தி: பொறுக்க முடியாத தலைவலி... வயிற்றை என்னவோ செய்தது..."

''பிறகு எப்படிச் சரியாயிற்று? மாற்று மருந்துகள் வைத்திருக்கிறீர்களா?"

"இல்லை... எப்படிச் சரியாயிற்று என்பதுதான் இன்னொரு விந்தை. இந்தப் பெண் என் வயிற்றைத் தடவிக் கொடுத்தாள். அவ்வளவுதான்."

அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவள் புன்னகை செய்தாள்.

''இந்தப் பெண் யார் தெரியுமா?"

"நீங்க இன்னும் அறிமுகப் படுத்தவில்லை."

"என் மகள்."

"மகளா?"

"ஆமாம். நான் நாஜிகள் கொன்றுவிட்டார்கள் என்று நினைத்தேன். அது தவறு. தப்பியோடிய ஒரு யூதர் இவளையும் எடுத்துச் சென்றிருக்கிறார். ரஷ்யாவுக்குச் சென்று, அங்கிருந்து இஸ்ரேலுக்குப் போயிருக்கிறார். இந்தப் பெண் வளர்ந்தது இஸ்ரேலில். இறக்கும் போதுதான் அவர் உண்மைத் தகவலை இந்தப் பெண்ணிடம் சொல்லியிருக்கிறார். அதாவது பத்து வருஷங்களுக்கு முன்னால். அன்று முதல் கொண்டு என்னைத் தேடிக் கண்டு பிடிப்பதில் முனைந்து, இந்தப் பெண் நேற்று இங்கு வந்து சேர்ந்திருக்கிறாள்."

"மகள் வந்தது உங்களுக்குச் சந்தோஷத்தை அல்லவா தர வேண்டும்? இப்படியா நடக்க வேண்டும்?"

"அதற்குக் காரணம் இவள் சொன்ன தகவல்கள். நாஜிகள், யூதர்களுக்குச் செய்ததை யூதர்கள் இன்று 'வெஸ்ட் பாங்'கில் செய்து வருகிறார்களாம். பெய்ரூட்டில் அவர்கள் செய்த அக்கிரமம் உங்களுக்குத் தெரிந்ததுதான். என் மனம் கொதித்தது."

"உங்கள் மனம் என்ன? எல்லோருடைய மனமும் தான்_"

"குறிப்பாக என் மனம்_ ஏன் தெரியுமா? நான் ஒரு யூதன்_ அது தெரியாதா உங்களுக்கு?"

"ஒரே நாளில் பல அதிர்ச்சிகளை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை."

''நேற்றிரவு ஏற்பட்டது கனவு இல்லை என்று உறுதியாக நம்புகிறீர்களா? கடைசி முறையாகக் கேட்கிறேன்'' என்றேன் நான்.

"நான் ஒரு யூதன். அற்புதங்களில் எனக்கு நம்பிக்கை உண்டு_ அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்..."

●



படிப்பகம்

www.padippakam.com

# அமராவதியின் கண்ணீர் கதை

டாக்குமென்ட்ரிப் படங்களைத் தமிழில் விவரணப் படம் என்று அழைக்கிறார்கள். தியேட்டரில் சென்று படம் பார்க்கிறவர்கள் செய்திப் படம் காட்டும் போது சலித்துக் கொள்கிற மனோபாவமே ஜாஸ்தி. காரணம், அதை படமாக்கியிருக்கிற விதம் படு மோசமாக இருப்பதே ஆகும்.

கோடி கோடியாய் செலவழித்து, சோடா பாட்டிலும் இரத்த வீச்சமுமாக காட்டப்படுகிற ஆக்‌ஷன் படங்களை போலல்ல விவரணப் படங்கள். அமைதியாக, ஆர்ப்பாட்டமில்லாது சொல்ல வந்த கருத்தை மட்டுமே சொல்லிப் போகும் விவரணப் படம் வேறெந்த மொழிகளைக் காட்டிலும் தமிழில் குறைச்சல் என்கிறார்கள்.

உரிய ரசிகர்களோ, தெளிவான இயக்குநர்களோ, சிரத்தையெடுக்கும் தயாரிப்பாளர்களோ இல்லை என்ற பெருங்குறை இருந்த போதிலும், இதுவரை தமிழில் எடுக்கப்பட்டிருக்கும் பெரும்பாலானவற்றை தொன் போஸ்கோ சமூகத் தொடர்புக் கல்வி மையத்தில் மூன்று நாட்கள் திரையிட்டார்கள்.

சமூகப் பார்வை சாராத படைப்புகள் ஒன்றிரண்டு இருந்த போதிலும் மேலவளவு 'நதியின் மரணம், மக்களாட்சியில் படு கொலை, ஒரு கண் ஒரு பார்வை, தீவிரவாதிகள், அகதி, தங்கம்





படிப்பகம்

www.padippakam.com

போன்ற குறிப்பிடும் படியான படங்கள் அநேகம். மொத்தம் நாற்பதுக்கு மேல். முதல் முறை என்ற போதும் நிகழ்ச்சி ஏற்பாடுகள் செம்மையாகவே இருந்தன.

விவரணப் படங்களின் நோக்கம் என்ன? தமிழில் ஏன் விவரணப் படங்கள் வளர்த்தெடுக்கப் படவில்லை? செயற்கைக் கோள் தொலைக்காட்சிகள் நாளும் பெருகிக் கொண்டிருந்தும், சினிமாவையே நம்பி இருக்கும் அவலம் ஏன்? குழந்தை தொழிலாளி — பெண்ணியம் — ஆட்சியாளர்களின் கோரத் தாண்டவங்கள் — தனிமனிதப் பதிவுகள்— எழுத்தாளர்களின் தனிப் பதிவுகள் இயற்கையின் சாகஸங்கள் என எல்லாவற்றையும் மூன்று நாட்களில் யோசிக்க முடிந்தது.

லேசான தாடி—ஜீன்ஸ் பேண்ட் — கையில் குறிப்புப் புத்தகம் அல்லது சிகரெட் பாக்கெட். இரண்டு பேராய் எழுந்து போவது, தீவிரமாய் எதையாவது விவாதிப்பது.

மறுபடி இருக்கை — மறுபடி பேச்சு தொடர் செயல்களாக வந்திருந்தவர்கள் மேற்கொண்டவை. இவர்களது கனவுகள் நல்ல படங்கள்— நல்ல வாய்ப்புகள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள். நல்லதைத் தேடும் நம்பிக்கையுடையவர்கள். வெண்திரை லட்சியத்திற்கு வெள்ளோட்டமாக சிலர். புண்ணாகும் தேசத்தை புரிந்துகொள்ள முயன்றவர்கள் சிலர்.

குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய படங்களில் சொர்ண வேல் இயக்கிய தங்கம், சலம் பெனுராகர் இயக்கிய குட்டி ஜப்பானின் குழந்தைகள் போன்றவை தீர்க்கமாய் சொல்ல வந்ததை தெளிவாக உணர்த்தின. சுமைகளே வாழ்க்கையாகிப் போன குழந்தைகளை இவை சித்திரித்தன. கல்வி மறுக்கப்பட்ட கண்ணீர் கதைகள் இவை.

கல்வியே சுமையாக மாறிய அபாயத்தை ஆர்.வி. ரமணி



இயக்கிய "ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு" மற்றும் பத்மா இயக்கிய "இந்த பாரம் தேவையா" ஆகியவை அப்பட்டமாக்கின.

இன்னது, குழந்தைகளுக்குத் தேவை என்பதை உணராமல் கண்டதைத் திணிக்கும் கயமையைச் சாடின.

இவை போலவே, சுற்றுப்புறச் சூழல் குறித்த பார்வைகளை தமிழ் திரைப்படக் கல்லூரி மாணவர்கள் இயக்கியிருந்த படங்கள் முன் வைத்தன.

"அமராவதியின் கண்ணீர் கதை" என்ற தலைப்புள்ள படம் சாயப் பட்டறைகளால், இறால்





படிப்பகம்

www.padippakam.com



பண்ணைகளால் கெட்டுவரும் விளை நிலங்களைப் பற்றிய சூழலை தெரிவித்தது.

வன் கொடுமைக்கும், சாதிய ஒடுக்குமுறைக்கும் சம்மட்டி அடி கொடுக்கிற படங்களாக 'நதியின் மரணம்' 'மேல வளவு' 'ஒரு கண் ஒரு பார்வை' மற்றும் 'தீவிரவாதிகள்' அமைந்திருந்தன.

ஆண் - பெண் - சமூகம் என்றிருக்கும் தளத்தைத் தாண்டி அரவாணிகள் பற்றிய படத்தையும் காண முடிந்தது. சமூகத்தோடு சார்ந்திருந்தும், சமூகம் அவர்களை அவமதிக்கும் நிலையே இன்றும்.

சிறு வயது முதலே, பெண்மையின் குணாம்சத்தை பெற்றிருக்கும் சரவணன் காலப் போக்கில் சாரதாவாகிற கதையே 'இரண்டாம் பிறவி' — அருண்மொழி திரைக்கதையில் 'இலாறியா' என்ற இத்தாலிய இயக்குநர் இயக்கியிருந்தார். அதேப் போல பம்பாயில் வாழும் அரவாணிகளைப் பற்றிய படமே காயிதப்பூ — இயக்கியிருந்தார் ராஜீவ் கிருஷ்ணா.

ஒரு விவரணப் படம் ஏற்படுத்தும் விளைவு என்ன? சென்னை கடற்கரை பற்றி படம் எடுத்திருந்த பசுமைக்குமார் சொன்னது : "எடுத்த படத்தை மேயருக்கு அனுப்பினோம். கெட்டுக் கொண்டிருந்த-கடற்கரை தற்போது சீர்படுத்தப்பட்டிருக்கிறது" என்கிறார்.

அரசின் சகல துறைகளிலும் கண்ணுக்குத் தெரியாமல் நிகழும் தவறுகளை இதன் மூலம் கவனத்துக்குக் கொண்டு வரலாம். சக்தி மிக்க திரைமூலம் சகலத்தையும் பதிவு செய்யலாம என்றாலும் நம் பார்வை எதை நோக்கி அமைந்திருக்கிறது என்பதை தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

இழப்புகளோடு இரண்டறக் கலந்த சமூகப் பொறுப்புணர்வும் அவசியம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் — அகதியைப் பற்றி ஒரு படம் திரையிடப் பட்டது. அதே சமயம், இராணுவத்தின் மேன்மைகளைப் பற்றிய இன்னொரு திரைப் படமும் காட்டப்பட்டது. இரண்டும் வெவ்வேறு தொனியில் நேர் எதிர் முனைகளில் இருந்து சித்திரிக்கப் பட்டுள்ளது.

எடுத்தவர்களின் நோக்கம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் எது சரி? எது தவறு? விழா நடத்தும் குழுவினர் தீர்மானிக்க வேண்டும். வெறுமனே விவரணப் படங்களை ஊக்குவிப்பது விழலுக்கு இறைக்கும் நீர். சரியான தெரிவை அடுத்த நிகழ்வில் ஆவலோடு எதிர் பார்த்து மூன்றாம் நாள் முடிவுற்றது.

எதிர்பார்க்க வைப்பதே ஒரு முயற்சியின் வெற்றிதான். அந்த விதத்தில் முதன் முயற்சியே சிறப்பாக அமைந்திருந்தது பாராட்டுக்குரியது.

— டி.ஜி.ஆர். வசந்தகுமார் பாரதி



படிப்பகம்

www.padippakam.com

# மகாவீரரின்

சு. ஸ்ரீபால்

மகாவீரர் தோன்றிய ஆறாம் நூற்றாண்டு உலகில் பல்வேறு நாடுகளில் கருத்து மோதல் களையும், சிந்தனை மறுமலர்ச்சியையும் கண்ட நூற்றாண்டு. கிரேக்கர்களின் கருத்தைக் கவர்ந்த சாக்ரடிசும், சீனர்களின் சிந்தனைக்கு விருந்தளித்த லாசோவும், கன்புசியசும், பெர்சிய மக்களின் எண்ணத்தை ஈர்த்த ஸ்சோரோஸ்டரும், இந்தியாவிலே மகாவீரரும், புத்தரும், மக்கள் நினைவிலே உலவிய நூற்றாண்டு. இந்தியாவிலும் சமயவாழ்வு சாதிக் கட்டுக்கோப்புக்குள் அடக்கப்பட்டிருந்த காலம். மாற்றத்தை விரும்பிய, எதிர்பார்த்த காலம். மேலைநாட்டு ஆசிரியர் ஒருவர், "சமய வாழ்வில் சாதிக் கட்டுக்கோப்புகளால் முழுவதும் ஈடுபட முடியாமல் மனம் புழுங்கிய க்ஷத்திரியர்கள் இனத்திலிருந்து தோன்றியவையே சமண சமயமும், புத்த சமயமும்" என்பார்.

சமண சமயம் இந்தியாவில் 13—ஆம் நூற்றாண்டுவரை நன்கு பரவி இருந்தது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பத்திரபாகு என்கிற முனிவர் சமணத் தத்துவத்தைத் தெற்குக்கு கொணர்ந்தார் என்பது வரலாறு. மகாவீரர் கி.மு. 599 ஆம் ஆண்டு குண்டலபுர மன்னன் சித்தார்த்தனுக்கு மகனாகத் தோன்றினார். அவருடைய அன்னையார் திருநாமம் திரிசலா தேவி என்பதாகும். இளம் வயதிலே மகாவீரர் அரிய வீரராகவும், கூரிய மதி படைத்தவராகவும், சீரிய பண்பாளராகவும் திகழ்ந்தார். மகாவீரர் தோன்றுவதற்கு முன்பு உலகிற்கு உய்விக்கும் பல உண்மையான நெறிகளைப் போதிக்கும் உத்தமர் உதிக்கிறார் என்பதை முன் உணர்த்தும் முகத்தான் அவருடைய அன்னையார் பதினாறு கனவுகளைக் கண்டதாகச் சமண நூல்கள் விரித்துரைக்கின்றன.

பால் நிலவு, பாற்கடல் வெண்ணிறக்களிறு, பொற்குடம், பொற்றாமரைக் குளம் போன்ற கனவுகள் கண்டார்.

தன்னுடைய இளமையிலேயே உலக வாழ்வில் இருக்கும் சாவகன் நோற்கவேண்டிய நோன்புகளை மேற்கொண்டதாகவும், தன்னுடைய முப்பதாவது வயதில் முற்றுந் துறந்த துறவை மேற் கொண்டதாகவும் அறிகிறோம்.

பதிமூன்று ஆண்டுகள் கடுந்தவமியற்றிப் பார்சநாத் மலைக்கு அருகில் ஜிரும்பிக்கிராமம் என்கிற இடத்தில் சமகன் என்ற ஒருவருடைய வயற்காட்டில் ஆழ்ந்த தியானத்தில் இருந்த பொழுது அவருக்குக் "கேவல ஞானம்" அதாவது எல்லாவற்றையும் உணர்கிற அறிவு கிட்டியது. மகாவீரர் இந்தச் சிறப்பைப் பெற்ற பிறகுதான் உலகுக்கு மிகப் பெரிய அறிவுரைகளை வழங்கத் தொடங்கினார் என்று ஸ்டீவன்ஸன் எழுதுகிறார்.

"The Jaina declare that Mahavira's great message to mankind was that birth is nothing and caste nothing but karma every thing, and on the destruction of karma future happiness depends."

மகாவீரரின் சொற்பொழிவை விளக்கிய முதல் முனிவர் கௌதம இந்திரபூதி என்பவர். மழைக் காலங்களில் அதாவது நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் தங்கியும், மற்ற காலங்களில் பல இடங்களுக்குச் சென்றும் அறிவுரை வழங்கினார். இறுதியாகப் பாட்னாவின் அருகிலுள்ள பாவாபுரி என்கிற கிராமத்தில் கி.மு. 527 ஆம் ஆண்டு மகாவீரர் வீடு பேறு பெற்றதாக உரைப்பர்.

கி.மு. 527ல் மகாவீரர் மறைந்த நாளே இன்று சமணர்களால் தீபாவளி நாளாகக் கொண்டாடப்படுகிறது: அந்தக் காலத்தில் இருந்த பதினெட்டு மன்னர்கள் ஒன்றாகக்கூடி "அறிவொளி மறைந்தது — அதனால் புறவொளியை இந்நாளில் ஒளிரச் செய்வோம்." என்று செய்த முடிவே இன்றைய தீபாவளி என்று சமணர் செப்புவர்.

மகாவீரரின் அமைப்பில் சாதாரண மனிதனும் சேருவதற்கு வாய்ப்பு இருந்தது. இந்த வாய்ப்பே அவருடைய அமைப்பின் சிறப்பு என்று 'டெய்லர்' என்ற அறிஞர் கூறுவார். மகாவீரரின் அமைப்புக்குள்



படிப்பகம்

www.padippakam.com

# தத்துவங்கள்

சேர விரும்பிய சாதாரண மனிதனுக்கென்று பதினாறு நியதிகள் இருந்தன.

(1) வீணான ஐயப்பாடுகளைத் தோற்றாமை;
(2) இன்னோர் அமைப்புக்குச் செல்லலாமா வேண்டாமா என்கிற கலக்கம் இன்மை;
(3) வினைப்பயனை நம்புதல்;
(4) தீயோரைப் புகழாமை:
(5) தீயோருடன் உறவு இன்மை;
(6) கொல்லாமை;
(7) பொய்யாமை;
(8) களவாடாமை;
(9) கற்புடைமை;
(10) அளவிலா உடைமைகளை விரும்பாமை;
(11) வேண்டிய அளவே பயணங்களில் ஈடுபடுதல்;
(12) பிறருக்குத் தீங்கு நினையாமை:
(13) நாள்தோறும் சிறிது நேரம் 'தியானத்தில் ஈடுபடுதல்';
(14) திங்களில் ஒருநாள் துறவியைப் போல் வாழ்தல்;
(15) ஒரு நாளாவது உண்ணா நோன்பு நோற்றல்;
(16) அன்றாட வாழ்வில் குறைந்த அளவு பொருள் களைப் பயன்படுத்துதல்.

இதுபோன்று முற்றும் துறந்த முனிவருக்கும் பற்பலக் கட்டுப்பாடுகள் இருந்தன.

ஒவ்வொரு பிறப்பிற்கும் ஆன்மா ஒன்று உண்டு. இந்த 'ஆன்மா' இயல்பான தூய்மையை உடையது. இல்லறத்திலேயே ஈடுபட்டு வாழ்கின்றபோது நெறி தவறிச் செயல்படும் நிலைமைகள் பல தோன்றும். அதனால், தூய்மையான ஆன்மா மாசற்று, உற்ற மாசின் அளவைப் பொறுத்துத் தன்னுடைய அடுத்த பிறவிக்கு வழி கோலுகிறது. எண்ணற்ற பிறவி களுக்குக் காரணம் தீவினையே ஆகும். பிறவிப் பெருங்கடலை நீந்தும் ஆற்றலைப் பெறுவது நல் வினையாகும். இந்த நல்வினையைத் தேடிக்கொள்வது உலகில் வாழும் ஒவ்வொருவரின் பொறுப்புமாகும். நல்வினையைத் தேடிக் கொள்ள நமக்குக் கிடைக்கும் நாட்கள் சில. இந்தக் கருத்தை வலியுறுத்தும் பல பாக்கள் திருக்குறள், நாலடியார், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்களில் காணலாம்.

தீவினை மிகுதியாக ஆன்மாவோடு சேருவதற்கு அதிகம் காரணமாக இருப்பது உள்ளத்தில் எழும் அகந் தையும், பற்றும் ஆகும். "அற்றது பற்றெனின். உற்றது வீடு" என்ற ஒரு பழமொழி உண்டு. பற்று அறுத்தல் என்பதைச் சமண சமயம் பெரிதும் வலியுறுத்துகிறது. தீவினைகள் காதி, அகாதி வினைகள் என்று எட்டு வினைகளாகவும், இந்த எட்டு வினைகளையும் களைகின்றவர், எட்டுக் குணங்களையும் பெறுகிறார் என்றும் சமண சாத்திரங்கள் சொல்லுகின்றன.

இல்லறத்தில் இருக்கிறவர்கள் நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகிய அணிகலன்களைப் பூண்டவர்களாக இருக்க வேண்டும்.

இதைச் சமண சாத்திரங்கள் மும்மணிகள் என்று புகழும். சமண நெறிகளில் நன்னம்பிக்கை வைத்து, நல்லறிவைப் பெற்று அதன்படி ஒழுகுவதே இல்லறத்தாரின் கடமை என்று கூறலாம்.

மகாவீரர், உலகிலுள்ள பொருட்களை ஜீவன், அஜீவன் என்று பிரித்தார். ஜீவன் என்பது ஆன்மா ஆகும். இயல்பில் இது தூய்மையானது. எல்லா வற்றையும் உணரும் அறிவைப் பெற்றது. வினை அணுக்கள் இதன் மீது படரப்படர இது பல பிறப்புகளில் பிறக்க நேரிடுகிறது. அஜீவன் என்பது உயிரில்லாப் பொருட்களைக் குறிக்கும்.

இந்த இரண்டு தத்துவங்களோடு நல்வினை, தீவினை, வினை ஆன்மாவைச் சேர்தல்; வினை ஆன்மாவைச் சேராது தடுத்தல்; வினை ஆன்மா வோடு இணைத்தல், இணைந்த வினையை ஒழித்தல்; மாசு களைந்து ஆன்மா தன்னிலை அடைதல் ஆகிய ஒன்பது தத்துவங்கள் மகாவீரர் கூறிய அடிப்படைத் தத்துவங்கள் எனப்படும். ஒவ்வொரு தலைப்பிலும் பல்வேறு பிரிவுகள், உட்பிரிவுகள் உள்ளன.

ஆன்மா அறிவே உருவமானது என்ற ஒரு கருத்து சமணர்களால் உலக ஞானிகளுக்கு வழங்கப் பட்ட புதிய கோணம் என்று அறிஞர்கள் உரைத்



படிப்பகம்

www.padippakam.com

துள்ளனர். "வினைகள்" என்ற கருத்து சமணர்கள் தத்துவ உலகுக்கு வழங்கிய ஒரு கொடையாகும்.

சமணர்கள். இறைவன் உலகைப் படைத்தான் என்ற கருத்தை எதிர்க்கிறார்கள். வினைகள் அத்தனையையும் அழித்த எந்த மனிதனும் வினைகள் நீங்கிய இறைவனாகலாம் என்பது சமணர்கள் கருத்து. இதை ஒருவர் எழுதும் பொழுது கூறுகிறார்:—

God in jainism is the ideal, man, that is to say, the ideal of man; there is a way to achieve it and that is the jain ethical way" -

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" – (குறள்)

"டெய்லர்" என்பவரும் இதைப் பற்றியே கூறுகிறார்:—

"Jainism is definitely atheistic, if by atheism we mean the denial of a divine creative spirit. In the philo sophy of the Jainas no place is reserved for God. Indeed, it seems probable that the first Jainas did not acknowledge Gods at all. They early taught that one should not say "God rains" but just 'the cloud rains'. Thus, one of their fundamental principles would seem to have been that there is no power higher than man. This principle, however, it is instructive to note, soon proved unworkable, and it has long since been practically abandoned. The Jainas do worship, yet are the objects of their worship neither God nor Gods. Denying God, They worship man, to wit, the Venerable (Arht) The conqueror (Jaina), the founder of the (four) orders (Tirthankara).



## மகாவீரர் கூறிய அறம் :

இன்றைய உலகில் ஒரு விந்தையை நாம் நாள்தோறும் பார்க்கிறோம். மற்றவர் நம்மைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்று அறிய நம்முடைய நேரம், பொருள், நினைப்பு அனைத்தையும் வீணாக்கு கிறோம். அண்டை நாட்டின் எண்ணம் என்ன என்பதை அறிய ஒரு நாடு கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிடுவதை அறிவோம். அனைவரும் நல்லவராக நல்வழி நிற்கும் உலகில் இந்தச் செலவுகள் தேவையில்லை. வீணாகச் செலவாகும் பொருளும் நேரமும் வறியவரின் வாழ்வைச் செம்மைப் படுத்த உதவும்.

உலகம் திருந்த வேண்டும். திருந்தினால் மக்கள் வருந்துவது நிற்கும் என்று எண்ணுபவர், எழுதுபவர், பேசுபவர் பலர் உண்டு. உலகத்தைத் திருத்த, நல்வழிப் படுத்த உத்தமர்கள் தோன்றுகின்றனர் என்பதை அனைவரும் ஏற்கின்றனர். உலகம் திருந்துவதற்கு முதல்படி, மிகவும் எளிய வழி, ஒவ்வொருவரும் உள்ளத்தைத் திருத்திக் கொள்வதே ஆகும். திருந்திய உள்ளம், தூய உள்ளம் கொண்ட மக்கள் வாழும் உலகம் நம்முடைய வாழ்க்கையின் மாலை நேரத்தில் நமக்கு நிறைவைத் தருகின்ற உலகமாக இருக்கும். அப்படிப்பட்ட உலகம் இல்லை என்றால், நாம் ஈன்றெடுத்த செல்வங்களை இந்த உலகில் விட்டுச் செல்கிறோமே என்ற வேதனை, முதியவர்கள் உள்ளத்தில் மேலோங்கி நிற்கும். பொய்யும், பொருள் சேர்க்கும் பேராசையும், தகாத உறவும் நாளுக்கு நாள் பெருகி வரும் உலகமாக இந்த உலகம் இருக்கக் கூடாது என்றால் உள்ளம் திருந்த வேண்டும்.உள்ளத் தில் முளைக்கும் எண்ணங்கள் ஏற்றமுடையவையாக இருத்தல் வேண்டும். உலகம் திருந்த வேண்டும் என்று விழைபவர் முதலில் தங்கள் உள்ளத்தைப் பண் படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் வீட்டில் தவழும் குழந்தைகளின் உள்ளத்தில் நல்ல கருத்துக்கள் ஊன்றுவதற்கு வழிகோல வேண்டும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற"

என்று திருக்குறள் கூறுவதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மகாவீரர் போதித்த அறவுரைகளைத் தொகுத் துக் கூற முனைந்த நூல்கள் என்ன உரைக்கின்றன என்று ஆராய்வோம்.

"பத்து மூன்றாகி நின்ற
கிரியையைப் பயின்றிட்டானே
பத்தறம் பன்னிரண்டார்
தவத்தொடு பயின்று தன் கண்"

என்று மேரு மந்திரமும்,



படிப்பகம்

www.padippakam.com

"படை கெழு புரிசை வெல்வார் புற நின்று
பதின்மர் காக்க"

என்று சூளாமணியும் பாமாலை புனைவதைப் பார்க்கிறோம்.

பத்து அறம் என்று இந்த நூல்கள் குறிப்பிடுவதை வடமொழி நூல்கள் உத்தமக்ஷமை, உத்தம மார்த்தவம், உத்தம ஆர்ஜவம், உத்தம சத்யம், உத்தம சவுசம், உத்தம ஸம்யமம், உத்தம தவம், உத்தம ஆகிஞ்ஜின்யம், உத்தம தியாகம், உத்தம பிரம்மச்சர்யம் என்று வரிசைப்படுத்திச் சொல்கின்றன.

அறுப்பவனுக்கும் நிழலைத்தரும் மரம் போன்ற பண்பு பேணல் முதல் அறம்.

அனைவரையும் சம நோக்கோடு காணல் இரண்டாம் அறம்.

அகமும் புறமும் வேறுபடாமல் நிற்றல் மூன்றாம் அறம்.

உண்மை போற்றுதல் நான்காம் அறம்.

தீ நெறிகள்பால் செல்லும் மன்த்தைத் தடுத்து நிறுத்தல் ஐந்தாம் அறம்.

வினை விளைவிக்கும் செயல்களில் புலன்கள் ஈடுபடாமல் காத்தல் ஆறாவது அறம்.

தவம் மேற்கொள்ளல் ஏழாவது அறம்.

தரும பரிணாமத்தோடு வாழ்தல் எட்டாவது அறம்.

அறம் போதித்தல், மற்றவர் நல்வழி செல்ல உதவுதல் ஒன்பதாவது அறம்.

பிரம்மச்சரியம் பத்தாவது அறம்.

இந்த அறங்களை உணர்ந்து படிப்படியாகப் பின்பற்றுவது, உய்வதற்குச் சிறந்த வழி என்று மகாவீரர் போதிக்கிறார். இயல்பாக வெண்மையாக இருக்கும் சுண்ணாம்பு, மஞ்சள் சேர்ந்ததும் தன் நிறத்தை இழக்கிறது: துணியின் தூய்மை கறைபட்டதும் மறைகிறது. ஆன்மாவின் தூய்மை, வினைகள் சேர்வதால் குறைகிறது. ஏற்கெனவே சேர்ந்துள்ள வினைச்சுமையைக் களைய, புதிதாக வினைக் கட்டுகள் வந்து ஆன்மாவை மாசுபடுத்தாமல் இருக்க இந்த அறங்களைப் போற்றுதல் இன்றியமையாதது என்பது மகாவீரரின் அறிவுரை ஆகும்

## சமணர்

மனிதனுடைய மனம் நிலையற்றது. மனித வாழ்வு நிலையற்றது. நிலையற்ற மனித வாழ்விலிருந்து நிலையான இன்பம் பெற அன்புடன் அறம் செய்பவர்களாக, அடக்கமும், பண்பும் உடையவர்களாக, இரக்கமும் தியாகமும் உள்ளவர்களாக வாழ



வேண்டும். மனிதன் தன் நிலையற்ற மனநிலை காரணமாகச் சில நேரங்களில் விலங்குக் குணம் படைத்தவனாகிறான். ஆறறிவு இருந்தும் அறியாமையால் அநீதி செய்கிறான். பண்பறியாத நிலையில் பாதகம் பல செய்கிறான். அடக்கமின்மையால் ஆத்திரப்படுகிறான். அன்பின்மையால் அல்லற்படுகிறான். அறமின்மையால் இன்பமிழக்கிறான். இத்தகைய நிலையில் வாழும் மனிதனை அவனுக்குரிய பண்புகள் பற்றி அவ்வப்போது நினைவுறுத்தும் பணியினை மேற்கொள்ளும் நிலையில் சான்றோர் பலர் தோன்றி நல்வழி காட்டினார்கள். அந்த நல்ல வழிக்கு வித்தாவன — நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்பன. இம்மூன்றையும் அடிப்படை அறமாகக் கொண்டு, அருக தேவனை அடிபணிவோர் அருக சமயத்தவர், சமண சமயத்தவர் எனலாம்.

சமணர்கள் அங்கு, இங்கு எனாதபடி ஏறக்குறைய இந்தியா முழுமையும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் திகம்பரர், ஸ்வேதாம்பரர் என்னும் இரு பெரும் பிரிவினர். திக்கையே ஆடையாக அணிபவர் திகம்பரர்; வெள்ளையாடை யுடுப்பவர் ஸ்வேதாம்பரர், வடநாட்டில் சம்மேதகிரி, சம்பாபுரி, பாவாபுரி, இராசகிருகம், ஊர்சய்ந்தகிரி முதலியன சிறந்த புண்ணியத் தலங்க்ளாகக் கருதப்படுகின்றன. கர்நாடகத்தில் சிரவண பெல்கோலா வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. கர்நாடகத்தில் ஒம்புஜம், சிம்மனகத்தை, கார்களா, மூடுபத்திரை போன்ற இடங்களில் சமண மடங்கள் உள்ளன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை வட ஆற்காடு மாவட்டத்தில்தான் சமணர்கள் மிகுதியாகக் காணப்படு



படிப்பகம்

www.padippakam.com



கின்றனர். வட ஆற்காட்டில் ஆர்ப்பாக்கம், திருமலை, திருப்பருத்திக் குன்றம் போன்றவையும் தென் ஆற்காட்டில் திருநறுங்கொண்டை, மேல் சித்தாமூர் போன்றவையும் சிறந்த புண்ணியத் தலங்களாகும். வட ஆற்காட்டில் பொன்னூர் மலை பிரசித்தி பெற்றது. மேல் சித்தாமூரில் சமண மடம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீபங்குடியும் சிறந்த தலமாகும். மதுரையில் சமணர்மலை உள்ளது. சித்தன்னவாசலிலும் பல சமண சிற்பங்கள் உள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் அருங்குளம் சிறந்த தலம். இவற்றைத் தவிரச் சமணர்கள் வாழ்ந்து வரும் எல்லா இடங்களிலும் சமணர் கோயில்கள் உண்டு.

திகம்பர சமணர்கள் சாவகர், சாரணர் என்று பிரிக்கப் படுகின்றனர். இதைச் சிலப்பதிகாரத்தின் மூலமும் அறியலாம். சாவகர்—இல்லறத்தார்: சாரணர்—துறவறத்தார். புலால் உண்ணாமையும், தேன் உண்ணாமையும், இரவில் உண்ணாமையும் சாவகரின் இலக்கணம். மீன் பிடித்தல், வேட்டையாடுதல் தவிர மற்றத் தொழில்களைச் செய்வர். அவா அறுத்தல் சாரணரின் முக்கிய கொள்கை. அகிம்சை, வாய்மை, கள்ளாமை போன்றவை இரு சாராருக்கும் உரியன. இவர்கள் ஜைனர், ஜினர் என்றும் கருதப்படுகின்றனர். ஐம்பொறிகளை அடக்கி வென்றவர், ஊழினைக் கடந்து வென்றவர் என்பது இதன் பொருள்.

பிறப்பினால் உயர்வு, தாழ்வு கருதாத சிறந்த பண்பு இவர்களுடையது. இதை,

> "பறையன் மகனெனினும் காட்சி யுடையான்
> இறைவன் என உணரற் பாற்று."

என்ற அருங்கலச் செப்பினால் அறியலாம். பண்டைக் காலத்தில் சமண சமயம் தமிழ்நாடு முழுவதும் பரவி நிலை பெற்றுச் செல்வாக்கு பெற்றிருந்தமைக்கு இதுவும் ஒரு காரணம். சமண சமயம் செழித்து வளர மற்றொரு காரணம் அவர்கள் மேற்கொண்டிருந்த தமிழ் மொழிப் பற்று. இதனால் மதமும் வளர்ந்தது. தமிழும் வளர்ந்தது. மேலும் உணவு, கல்வி, மருந்து, அடைக்கலம் இவற்றை எந்தப் பலனையும் எதிர் பாராமல் அளித்தமை இவர்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தது.

இந்தச் சமணம் முதன் முதலில் வடக்கே தோன்றியது என்றும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சந்திரகுப்தர் காலத்தில், பத்தரபாகு முனிவர் மூலம் தமிழகம் வந்து படிப்படியாக வளர்ந்தது என்றும் கூறுகின்றனர். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் இவர்கள் வழிபாட்டிற்கு உரியவர்கள். அதில் பார்சுவ நாதர் நூறு ஆண்டுகளும், மகாவீரர் எழுபத்து இரண்டு ஆண்டுகளும் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் சிறந்த பெரியோர்களாகவும் கருதப்படுகின்றனர். இந்த இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் பாதங்களும் செஞ்சி மலையில் உள்ளன.

இனி இவர்கள் இலக்கியத் தொண்டினைக் காணலாம். இலக்கியத்தைப் பொறுத்தவரை இவர்கள் எடுத்து எழுதாத பகுதியே இல்லை எனலாம். இலக்கணம் இவர்களால் வளர்ந்தது; நிகண்டுகள் படைத்ததும் இவர்களே; பிரபந்தங்கள் பல படைத்து, புராணங்கள் பல பாடி, காப்பியங்கள் பல இயற்றி, நீதி நூல்களைப் பெருமளவில் படைத்து, வாய்ப்பாடு, வானநூல், சோதிடம் போன்ற பல வகையிலும் சமணர்கள் பணி புரிந்தனர் என்றால் மிகையாகாது. பள்ளி என்ற சொல்லே இவர்கள் காலத்தில்தான் வழக்கில் வந்தது.

**இவர்கள் இயற்றிய பெருங்காப்பியங்கள்:** சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, பெருங்கதை.

**சிறு காப்பியங்கள்:** சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், நாக குமார காவியம், உதயண குமார காவியம்.

**புராணங்கள்:** சாந்தி புராணம், மேரு மந்தர புராணம், ஸ்ரீபுராணம், நாரத சரிதை.

**பிரபந்தங்கள்:** திருக்கலம்பகம், 'திருநூற்றந்தாதி, அச்சில் வராத பிரபந்தங்கள் பல உண்டு.

**நிகண்டுகள்:** சூடாமணி, பிங்கலம், திவாகரம்.



படிப்பகம்

www.padippakam.com

இலக்கணம்: அவிநயம், யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை, வச்சணந்திமாலை, நேமி நாதம், நன்னூல், நம்பியகப்பொருள்.

கணிதம்: எண்சுவடி, நெல் இலக்க வாய்ப்பாடு, சிறு குழி மற்றும் பல கிடைக்கவில்லை.

சோதிடம் : சினேந்திர மாலை, சோதிட நீதி, வான நூலும் ஒன்று உள்ளதாகக் கூறப்படுகிறது.

நீதிநூல்கள்: நாலடியார், பழமொழி நானூறு, சிறு பஞ்சமூலம், ஏலாதி, அருங்கலச் செப்பு, அற நெறிச்சாரம்.

அறநெறிக் கதைகள்: கிளி விருத்தம், எலி விருத்தம், நரி விருத்தம்.

உரையாசிரியர்கள்: இளம் பூரணர் நச்சினார்க்கினியர், நேமி நாதர், அடியார்க்கு நல்லார், மயிலை நாதர், கலிங்கத்துப் பரணி எழுதிய சயங் கொண்டார், தீபங்குடிச் சமண வகுப்பைச் சார்ந்தவர்.

—இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது இவர்கள் இலக்கியத் தொண்டினை நன்கு அறிகிறோம். இத்தகு பெருமையுடைய இலக்கியச் செல்வத்தை நாம் பெற்றிருப்பது பெருமையல்ல, போற்றிக் காப்பதுதான் பெருமை.

அணு ஆராய்ச்சி முதல் ஆண்டவன் அருள் வரையில் அருகனை வழிபடும் சமணர்கள் கைபடாத இடமே இல்லை. எனவே, தமிழும் சமணமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத அளவு பிணைந்துள்ளன. பாலும் சுவையும் போல், பாற்கடலும் பரமனும் போல், மலைமகளும் அவளுக்குத் தன்னுடலில் சரிபாதி தந்த அவள் தலைவனும் போல், கண்ணனும் வெண்ணையும் போல், தமிழும் அதன் இனிமையும் போல், தமிழோடு பிணைந்துள்ள சமயம் சமணம் என்று கூறுவது பொருந்தும்.

## சமணர் தொண்டு:

சமணம் இந்தியா முழுமையும் மிகப் பழமையான காலத்தில் வேதகாலத்திற்கு முன்பே பரவி இருந்த ஒரு சமயம் என்பதைக் கடந்த இருபது முப்பது ஆண்டுகளில் (1983) வெளிவந்த ஆராய்ச்சி நூல்கள் தெளிவாக்குகின்றன. மகாவீர வர்த்தமானரை இருபத்து நான்காவது தீர்த்தங்கரர் என்றும், அவருக்கு முன்னாலே இருபத்து மூன்று தீர்த்தங் கரர்கள்—வழி காட்டிகள் இருந்தனர் என்றும் சமண சமயத்தைச் சார்ந்தவர் இயம்புவர். மகாவீரருக்கு முன்னால் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராக இருந்த பார்சுவ நாதரை இப்போது சரித்திரம் ஏற்றுக் கொள்கிறது.

முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர், ரிஷபதேவர், ஆதிபகவன் என்ற பல பெயர்களில் அழைக்கப்



படுவார். இவரைப் பற்றிய குறிப்புக்கள் பல பழைய புராணங்களிலும், வேதங்களிலும், ஆரண்ய நூல் களிலும் இருக்கின்றன. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வால்மீகி இராமாயணம் எழுந்ததாகக் கூறுவர். தென்னிந்தியாவில் சமணக் கருத்துக்கள் பரவி இருந்ததைப் பற்றிய குறிப்புகள் இந்த நூலிலும் உள்ளன.

திருமதி N.R. குசேவா (Guseva) என்ற இரஷ்ய நாட்டு ஆராய்ச்சியாளர் கோல்புருக் (Colegbrooke) ஜெர்மனிய அறிஞர் ஹென்றி ஜீம்மர், ஜே.சி. பர்லாங் மோ ஹன்லால் மேதா ஆகியோர் சமணத்தின் தொன்மையைத் தம் நூல்களில் விளக்கிக் காட்டி உள்ளனர். பல பழைய கருத்துக்களைச் சமணம் ஏற்க வில்லை என்பதை இரஷ்ய அறிஞர் குசேவா குறிப்பிடுகிறார். கடவுள் படைப்பு, வேள்வி செய்தல், சாதிப் பாகுபாடு போன்ற கருத்துக்களைச் சமணம் எதிர்த்தது என்பதை "Jainism" என்ற தன்னுடைய நூலில் எடுத்துக் காட்டுகிறார். கொல்லாமைக் கொள்கையை உலகுக்கு ஈந்த சிறப்பு சமணத்தையே சாரும் என்று மேனாட்டு வரலாற்று ஆசிரியர் பலர் செப்புவர். ஆசிரியர் ஒருவர் எழுதுகிறார்:

The history of ancient India is a history of thirty centuries of human culture and progress. It divides itself into several distinct periods, each of which, for a length of several centuries, will compare with the entire history of many a modern people. In these thirty centuries of human culture and progress, the jaina contribution is a solid synthesis of many-sided developments in art, architecture, religion, morals and science; but the most important achievement of the Jaina thought is its ideal of Ahimsa.



படிப்பகம்

www.padippakam.com

தென்னிந்தியாவில் அதுவும் குறிப்பாகத் தமிழகத்தில் சமணம் பரவியிருந்ததைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் பலர் கூறும் கருத்துக்களைக் காணுவது நலம் என்று நினைக்கிறேன்.

A note on Bhagavata purana in Wilson's Vishnu purana has it : "That work enters much more iuto detail on the subject of Rishaba's devotion and particular circumstances not found in any other Purana. The most interesting of these are the scenes of Rishaba's wanderings, which are said to be Konka, Venkata, Kutaka and Southern Karnataka or the western part of the peninsula; and the adoption of the jaina belief by the people of those countries."

பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் நவில்வார்:—

சமண சமயம் இன்று தமிழ்நாட்டில் குறுகி இருந்தாலும் ஒரு காலத்தில் தமிழ்நாடு முழுதும் சீருஞ் சிறப்புமாகப் பரவி இருந்தது என்பதற்குக் கல்வெட்டுகளும், வயலோரத்திலும், மூலை முடுக்கிலும் காட்சியளிக்கும் சமண விக்கிரகங்களும், அமணப்பாக்கம், அருகத்துறை, நமணசமுத்திரம், ஜீனாலயம், பஞ்சபாண்டவமலை, அமன்குடி, சமணர்திடல், சமணமலை, அருகமங்கலம், பஸ்திபுரம் முதலிய இடங்களின் பெயர்களும் சைன மடத்தின் பெயராகிய பள்ளி என முடியும் இடப் பெயர்களும் இன்று சான்று பகர்கின்றன.

பேராசிரியர் அறவாணன் அவர்கள் கூறுவார்:

"கி.மு. 322—185 என்ற கால இடை வெளியில் வடபுலத்தில் ஆட்சிபுரிந்த மோரியர், வடுகரைத் துணையாகக் கொ ண்டு தமிழ் நாட்டின்மேல் படை எடுத்தனர். இச்செய்தியை அகநானூறு (281) என்ற சங்க இலக்கியம் சுட்டுகிறது.

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவு'

இவ்விலக்கியக் குறிப்பு, பத்திரபாகு முனிவரை ஆசானாகக் கொண்ட சந்திரகுப்த மோரியனுடைய படையெடுப்பைப் பற்றியதாகலாம்.

'முடிவாக, பத்திரபாகு முனிவரின் காலத்தில் சைனம் தென்புலம் வந்த செய்தியும், அவரால் சைனம் தமிழகத்தில் பரவி இருக்கும் என்ற செய்தியும், கல்வெட்டுக்களாலும், செவிவழிச் செய்திகளாலும், வடமொழி, கன்னட, தமிழ் இலக்கியச் சான்றுகளாலும் தெரிய வருகின்றன; தெளிவாகின்றன.'

தமிழகத்தில் சைனம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது என்பதை வலியுறுத்தும் கல்வெட்டுகள் ஏறக்குறைய 38 இடங்களில் தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை மதுரை, திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தக் கல்வெட்டுக்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழுக்குச் சமணர் ஆற்றிய தொண்டைப் பற்றிப் பேராசிரியர் அறவாணர் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழின் மீது சைனர்கள் காட்டிய அக்கறை பெரிது. பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் கொண்டு வந்தார்கள். தமிழிலேயே புதியன படைத்தார்கள். அவர்கள் ஆற்றிய தொண்டு நான்கு வகைப்பட்டது.

1. இலக்கணத் தொண்டு.
2. இலக்கியத் தொண்டு.
3. அற இலக்கியத் தொண்டு.
4. உரைத் தொண்டு.

இலக்கணத் தொண்டு பற்றி பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. அவர்கள் கூறுவார்கள்:

"சிறந்த இலக்கண நூல்களில் பெரும்பான்மை சமணர்கள் எழுதியனவையேயாம். தொல்காப்பியம் சமணநூல் என உறுதி கூற முடியாமற் போனாலும், சமணம் பரவிய காலத்தெழுந்த தமிழ் வழக்கிற்கே இலக்கணம் கூறுகிறதெனலாம். இறையனார் அகப்பொருள், புறப்பொருள், வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், பிரயோக விவேகம் நீங்கிய மற்றைய இலக்கணப் பரப்பெலாம் சமணர் இட்ட பிச்சையே எனலாம். இவையும் சமண இலக்கணங்களின் துணை கொண்டு விளங்குவனவேயாம். பாட்டுக்களை எல்லோரும் ஒப்புக் கொள்ளும் வகையில் சீர்பிரிப்பதற்குப் பொது வழி ஒன்று காட்டியவர் யாப்பருங்கலங்காரரே ஆவர். எழுத்து, சொல் ஆராய்ச்சியைச் சிறுவரும் கொண்டு விளையாடும் படியாகச் செய்தவர் நன்னூல் எழுதிய பவணந்தி ஆவர். நிகண்டிற்குக் கடைக்காலிட்டுக் கோட்டை கட்டியவரெல்லாம் சமணர்களே ஆவர். மேனாட்டார் அகராதி தொடங்குமுன் சமணர் முயற்சியே சிறந்து விளங்கியது.

அவிநயம், அவிநயனார் யாப்பு, அவிநயனார் புறனடை, அவிநயனார் கலாவியல், அவிநயனார் புறத்திணைப்படலம், இந்திர காவியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, அமுத சகாரம், நேமிநாதம், வெண்பாப் பாட்டியல், நன்னூல், அகப்பொருள் விளக்கம் ஆகிய இலக்கண நூல்கள் சமணர் இயற்றியவை என்பது இப்போது பலரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியத் தொண்டைப் பற்றித் தெ.பொ.மீ. அவர்கள் உரைப்பார்கள்:

"இலக்கியத்தில் பழைய காப்பியங்கள் மணிமேகலை, குண்டலகேசி நீங்கலாக, வழங்யவையெல்லாம் சமணக் காப்பியங்களே யாம். காப்பிய வழியினைக் கம்பர் முதலோர்க்குச் செவ்வனே அமைத்துத் தந்தவர்களும் அவர்களேயாம். அறவழி நூல்களைச் செய்தவர்கள் பெரும்பான்மையினும் சமணர். பிறர் எழுதிய அற நூல்களும் சமணர்களிட்ட அறநூல் திட்டத்தைப் பின்பற்றுவனவேயாம். திருவள்ளுவர் சமணர் அல்லர் என்று கொள்வோரும், சமண அடிப்படையாம் அருளறத்தின் மேலேதான் திருவள்ளுவர் எக்காலத்துக்கும் எந்நாட்டினர்க்கும் தக்கதானதொரு அறக்கோயிலை எழுப்பியுள்ளார் என்று ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்."

நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அறநெறிச்சாரம், அரங்கலச் செப்பு போன்ற அற இலக்கியங்கள் சமணச் சார்புடையவை என்பர். நீலகேசி என்ற சமய தர்க்க நூலும் சமண ஆசிரியரால் எழுதப்பட்டது. பெருங்கதை, யசோதர காவியம் மேருமந்திர புராணம், கலிங்கத்துப் பரணி போன்ற நூல்களும் சமணப் புலவர்களால் தோற்றுவிக்கப்பட்டவை என்று உரைப்பர். கவுந்தி, அம்மை, கன்னி, பைம்மை, ஐயை, குறத்தி போன்ற சொற்கள், சமணப் பெண் துறவிகளைக் குறிக்க வருகின்றன. சமணப் பெண் புலவர்கள் இருந்தார்கள் என்று தெரிய வருகிறது.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரும், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம் பூரணரும் 'சமணத்தைச் சார்ந்தவர் என்று கூற காரணங்கள் இருக்கின்றன.

சமணர் தீட்டிய ஓவியங்களைப் புதுக் கோட்டைக்கு அருகே உள்ள சித்தன்னவாசலில் காணலாம். குகைக் கோயில்களும், சில மலைக் கோயில்களும் சமணர் கலை ஆர்வத்தைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இத்தகைய சான்றுகள் பல, பல்வேறு காரணங்களால் இடைக்காலத்தில் அழிந்து பட்டிருக்கலாம் என்று அறிஞர் எடுத்துக் காட்டுவர்.

சமணர் எழுதிய நூல்களில் எல்லாம் பல பொதுமையான பண்புகளைக் காணலாம். உறவில் தொடங்கித் துறவில் முடியும் காப்பிய இலக்கியங்களைக் காணலாம்•சிலப்பதிகாரமும், சிந்தாமணியும் இதற்குச் சான்று எனலாம். ஊழ்வினை அருவப் பாத்திரமாக ஆனால் வில்லனாக வருகின்ற புதுமையைச் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம். வண்ணகச் சிறப்பைச் சிந்தாமணியில் சுவைக்கிறோம். கொல்லாமை, பொய்யாமை, களவாடாமை, மிகுபொருள் விரும்பாமை, பிறன்மனை நோக்காமை



ஆகியவை சமணர் போற்றிய ஐம்பெரும் விரதங்கள்: வினைப்பயன், நிலையாமை, உயிர்களை ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை பகுத்தல், உலகம் கடவுளின் படைப்பன்று — நிலம், நீர், தீ, வளி, வீசும் பொடு ஐந்தும் கலந்த மயக்கம்—ஆகியன பற்றிப் பெரிதாகப் பேசும் நூல்கள் சமணச் சார்புடையவை என்று எண்ண இடம் இருக்கிறது. பொருட் பெண்டிரை வெறுத்து ஒதுக்கி ஆனால் ஊடல் சுவையை இழக்காமல் திணை வகுத்த புரட்சியில் பெரும் பங்கு சமணரைச் சாரும் என்று சொன்னால் தவறாகாது. பரத்தையர் தொடர்பால் ஊடல் என்ற நிலையை மாற்றி, 'தும்முகிறான் யாரையோ நினைந்து' என்று கற்பனையால் ஊடலைக் காட்டும் பாங்கு போற்றுதற்குரியது.


எங்களைச் சார்ந்தது உங்களைச் சார்ந்தது என்ற வாதத்தைத் தவிர்த்து, தமிழ் மொழி சிறக்க, அம்மொழியின் வளம் அவனியெலாம் பரவ நாம் அனைவரும் பாடுபட வேண்டும். இத்தனை நேரம் பேசப்பட்ட கருத்துக்கள் வரலாற்றுக் கோணத்தில் கூறப்பட்ட கருத்துக்களே அன்றி வேறு காரணங்களுக்காகக் கூறப்பட்டவை அல்ல. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பாடிய கவிதையை இங்கே நினைவு கூறுதல் பொருந்தும்.

அந்நெறி எதுவோ செந்தண் சைனம்
சைனம் ஒரு மத சார்பின தன்று
சைனம் எதுவெனச் சாற்றுவன் இங்கே
ஐம்புலன் வெல்லும் செம்மை சைனம்
ஒழுக்கம் காக்கும் விழுப்பம் சைனம்
கொலைகள் வொழிக்கும் நிலைபெறல் சைனம்
கள் பொய்க் காமம் தள்ளல் சைனம்
ஊனுண் ணாத மேநிலை சைனம்
வெறியா வேசம் முறியிடம் சைனம்
சாந்த அமுதம் மாந்தல் சைனம்
நல்லெண்ணம் நல்மொழி நற்பணி சைனம்
பிறக்கென வாழும் திறத்துறைசைனம்
தேவை அளவை மேவல் சைனம்
அகிம்சா தர்மம் அனைத்தும் சைனம்
இந்த சைனம் எந்த மதமோ?
மக்கட் குரிய தக்கப் பொதுமை.



படிப்பகம்

www.padippakam.com



## நீண்ட சப்தம்

யவனிகா ஸ்ரீராம்

முகவிகாரங்கள் படர்ந்து
கொண்டிருக்கும் எல்லையற்ற
உயிரொலிகள் முணு முணுக்கும்
கடைசி வார்த்தை தேடியலைகிறேன்
அது ஆலயங்களின் புற வாசல்களில்
நகரோடு கலக்கும் தருணத்தில் சிதறிப்
படர்ந்து கொண்டிருந்தது.

திடுக்கிடும் குரலாய்
நிர்வாணத்துடன் ஒன்றிரண்டு
சந்துகளில் ஓடி ஒளிவதையும் கண்டேன்

சொறிபற்றி யுலர்ந்த நாயின் முன்
கிடக்கும் வறண்ட புரைக்கு எதிரான
ஓலமாகவும் அது இருந்தது

சிலவேளை கனத்த கோஷங்களுக்குள்
மயானங்களின் நண்பகல் மௌனத்தில்
கூவுங்கோழிகள் வந்தடையும் அந்தியில்
அடைத்து விட்ட மதுக்கடை வாசலில்
என இறுதியில் அது
ஒரு ஒலி பெருக்கியின் முன்னால்
நீண்ட சப்தமாக முடிந்து கொண்டிருந்தது.

## தாயும் சேயும்

அ. வெண்ணிலா

அடிக்கிற அம்மாக்களைக் கண்டால்
பிடிக்கவே பிடிக்காது
முன்பெல்லாம்

வாயை இறுக மூடிக்கொண்டு
கையை தடுக்கும் பொழுதும்...

பாலை உள்வாங்கி
உதட்டிற்குக் கொண்டுவந்து உமிழ்வதும்

வரும் தூக்கத்தை
அழுகையால் விரட்டிக்கொண்டே
தூக்கத்திற்கு அழுவதும்,

தூக்கினால் கீழிறங்கியும்
கீழ்விட்டால் தூக்கச் சொல்லியும்,


விதவிதமான விளையாட்டு சாமான்களை
ஒதுக்கி,
உடைந்த பாத்திரங்களோடு உருள்வதும்,

தூங்கச் செய்ய
தட்டிக் கொடுத்து, தட்டிக் கொடுத்து
சோர்ந்து போகும் கைகளால்



படிப்பகம்

www.padippakam.com




அடிக்கத்தான் தோன்றுகிறது
அது குழந்தை
நான் கவிதை எழுதுபவள் என்ற
உணர்வுகள் மறந்து
அடிக்கிற அம்மாவாய் !



## நிழல்

கோ. இராஜேந்திரன்

வெளிச்சத்தின் பின்புறத்தில்
பிறந்துவிட்ட
வர்ணமிழந்த நிழல்களை
பார்க்கிற போதெல்லாம்
சந்தேகிக்கிறேன்.

நீண்டோ சிறுத்தோ
குட்டியாகவோ நீள் வாட்டிலோ
காலுக்கடியிலிருந்து தொடங்கும்
நிழல்களை
சில சமயங்களில் பாராட்ட வேண்டியிருக்கிறது.

நான் தொடமுடியாத
மனிதர்களை நிழல் கொடுக்கிறபோது

நான் தோற்றாலும்
நிழல் ஜெயிக்கிற போது.

நிழல்களை நம்ப முடியவில்லை எப்பொழுதும்
காட்டிக் கொடுத்து விடுகின்றன
சில சமயங்களில் மறைவில் நின்றாலும்.

நிஜங்கள்தான் நிஜம் என்றாலும்
நிழல்கள்தான்
நிஜமான நிஜங்களுமாய் இருக்கின்றன
நிருபிக்க வேண்டிய தருணங்களில்.




படிப்பகம்

www.padippakam.com

தான். இனி படவிருக்கும் பாடுகளை மறந்த மகிழ்ச்சி. பிறப்பது முக்கியம். பிறப்பின் துன்பங்களைப் பின்னால் அனுபவித்துக் கொள்ளலாம்.

பக்கத்தில் நாலைந்து சொறி நாய்கள் திரிகின்றன. இந்த இடத்தில் உள்ள குப்பை கூளங்களுக்கிடையில் காக்காய் கூட்டங்களுக்கும் குறைவில்லை. இந்த இளம் சதைப் பிண்டங்கள் எதற்கு வாய்த்திருக்கிறதோ தெரியவில்லை.



"என்ன இங்கியே உட்கும்மா! நான் பூனக்குட்டிங்களப் பாத்திக்கிட்டு இருக்கேன்!'' என்றான் ஆறுமுகம் ஆசையாக.

அவள் அவனை அங்கேயே விட்டு உள்ளே போய் அடுப்பை மூட்டினாள்.

"பூன, குட்டிங்கள நக்கிக்கிட்டே இருக்கும்மா! ஏன் அப்படி?" கதவுப் பக்கத்திலிருந்து கத்திக் கேட்டான் ஆறுமுகம்.

மீன் குழம்பைக் கிண்டிய வாறே பார்வதி சொன்னாள். "அப்படித்தான் சுத்தப் படுத்தும்!"

"அந்த அளுக்கெல்லாம் சாப்பிட்டா ஒன்னும் செய்யாது?"

"ஒண்ணும் செய்யாது. புள்ளங்க அளுக்கு தாய்க்கு ஒண்ணும் செய்யாது!"

வாயில் குழம்பை விட்டுப் பார்த்தாள். உப்புப் போதவில்லை. அவன் நன்றாக உப்பு சாப்பிடுபவன். உறைப்பு இருக்க வேண்டும். உப்பு இருக்க வேண்டும். உப்பை இன்னும் கொஞ்சம் எடுத்துத் தூவினாள். கலக்கினாள்.

"ரெண்டு குட்டிங்க கருப்பு, ஒரு குட்டி சாம்பல், ஒரு குட்டி சாம்பலும் கருப்புமா கலந்து இருக்கு!"

அவள் பேசாமல் அரிந்து வைத்த கத்தரிக்காயைக் கழுவினாள்.

"ஐயோ! இந்த சாம்பல் குட்டி கருப்பு குட்டி மேல ஏறிடிச்சி. கருப்புக்கு வலிக்காது?"

"வலிக்காது!" என்றாள்.

"ஐயோ! சரிஞ்சி கீள உளுந்திடுச்சி, நல்லா வேணும்!'' கைகொட்டிச் சிரித்தான்.

"ஒண்ணு மேல ஒண்ணு ஏறி பால் குடிக்குதம்மா. பூனை பாட்டுக்குப் பேசாம படுத்திருக்கு! கண்ண மூடிக்கிட்டே இருக்கு!"

நிமிடத்துக்கு நிமிடம் நடப்

படிப்பகம்

www.padippakam.com

பவற்றை நேரடி வருணனை செய்து கொண்டே இருந்தான்.

'நல்லதுதான். உள்ளே இருந்தால் அது வேண்டும் இது வேண்டும் என்று நிம்மதியாக வேலை செய்ய விடமாட்டான்.' இன்றைக்குப் பூனைகளோடு உட்கார்ந்து விட்டதால் வேலை பார்க்க நிம்மதியாக இருந்தது.

பார்வதி படுக்கையைத் தட்டிப் புது விரிப்பை எடுத்துப் போட்டாள். தலையணைகளைத் தூசு தட்டினாள். கூட்டுமாறை எடுத்து அறையை விறுவிறுவெனப் பெருக்கினாள். கட்டியிருந்த புடவையை அவிழ்த்துப் போட்டு விட்டு துண்டை எடுத்துக் கொண்டாள்.

"ஆறுமுகம். அம்மா குளிக்கப் போறேன். நீ உள்ளுக்கு வாரியா?" என்று கேட்டாள்.

"வேணாம்மா! இங்கனே இருந்துக்கிறேன். பூனக் குட்டிங் களப் பாக்க ஆசயா இருக்கு!"

அவனை விட்டுப் பாத்ரூமுக்குள் நுழைந்தாள். உடம்புக்கு நன்றாகச் சவுக்காரம் பூசித் தேய்த்தாள். அப்புறம் கொஞ்சம் பவுடர் போட்டு சென்டும் தடவிக் கொள்ள வேண்டும். புடவை வேண்டாம். மேக்சி போட்டுக் கொள்ளலாம்.

எப்பொழுதும் ஒரு நிமிஷமும் பொறுக்காமல் அலைகிறவன் கடந்த முறை வந்த போது கொஞ்சமும் ஆர்வம் காட்டவில்லை. நேரமில்லை என்று அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டான்.

"என்னர் பார்வதி, நல்ல விருந்தா நேத்து?" என்று தாயம்மா மறுநாள் காலை கேலி செய்த போது உண்மையைச் சொல்லாமல் சிரித்து மறைத்துவிட்டாள். தாயம்மா ஏற்கனவேயே எச்சரித்துக் கொண்டிருக்கிறாள்:

"லோரி வேல பாக்கிறவங்கள நம்பக் கூடாது. போற போற இடத்தில ஆளுவச்சிக்குவாங்க. ஊர மேய்ற மாட்டுக்கு ஊட்டு மாடு புடிக்காது பார்வதி."

**எப்பொழுதும் ஒரு நிமிஷமும் பொறுக்காமல் அலைகிறவன் கடந்த முறை வந்த போது கொஞ்சமும் ஆர்வம் காட்டவில்லை.**

உடம்பைத் துவட்டும் போது தடவிப் பார்த்தாள். இன்னும் "திண்"ணென்றுதான் இருக்கிறது. தளர்ந்து விடவில்லை. ரெஸ்டாரண்டில் பாத்திரம் பிடித்துப் பிடித்துக் கை கொஞ்சம் முரடாகி விட்டிருந்தது. தண்ணீரிலேயே நிற்பதால் கால் ஊறிப் போய் கருத்துவிட்டது. ஒரு பிள்ளை பெற்றதைத் தவிர இளமை குறையவில்லை. அந்த ஒரு பிள்ளைக்குப் போலியோவில் கால் சூம்பிப் போனபோது அவள் முகம் சூம்பிப் போன அடையாளம் இன்னும் கொஞ்சம் இருக்கிறது. அதைத் தவிர இன்னும் கள்ளூறும் மலராகத் தான் இருந்தாள்.

பவுடர் பூசிக் கொண்டிருந்த போது "அம்மா பூனை குட்டிங்கள உட்டுட்டு எங்கியோ போவுது!" என்று கத்தினான்.

"போவுட்டும். அது சாப்பிட வேணாமா?" என்றாள்.

"இந்தக் குட்டிங்களுக்கு அப்பா யாரு?"

"யாருக்குத் தெரியும்?"

"ஏன் வந்து பாக்கில?"

"ஆமா! வந்து பாக்கப் போவுது? போற போக்கில இருந்துட்டு காரியம் முடிஞ்ச வொன்ன போவ வேண்டியது தான்!"

"அப்பா...!"

"அதான் தெரியாதுன்னு சொன்னேன்ல!"

"இல்லம்மா! அப்பா வந்திருக்காங்க!"

ஆவலோடு வாசலைப் பார்த்தாள்.

"பார்வதி" என்று சிரித்தவாறு நின்றிருந்தான் பொன்னுசாமி. கையில் ஒரு பை வைத்திருந்தான். அதிலிருந்து இரண்டு பீர் பாட்டில் கள் எட்டிப் பார்த்தன. "வந்திட்டிங்களா!" என்று பொங்கினாள்.

ஆறுமுகத்தைத் தூக்கி உள்ளே உட்கார வைத்துக் கொண்டாள். மூவரும் ஒன்றாகச் சாப்பிட்டார்கள். "கோழி ஆக்கிலியா?" என்று கேட்டான் அவன். மீன் கறி அவ்வளவாக அவனுக்குப் பிடிக்கவில்லை. மீன் துண்டுகளைப் பொறுக்கிப் பொறுக்கி ஆறுமுகத்தின் தட்டில் வீசி "தின்னுடா!" என்றான். அந்த அக்கறையை நன்றியுடன் ஏற்றுக் கொண்டு ஆறுமுகம் அன்று வயிறு புடைக்கத் தின்றான்.

பொன்னுசாமி சாப்பிட்டுக் கொண்டே பேசினான். "மிந்தியாட்டம் இப்ப ரொம்ப டிரிப் இல்ல. கொறஞ்சி போச்சி!"

"அப்புறம் ஏன் இப்படி அவதிஅவதியா போவுணும்னு பறக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"இன்னிக்கு கண்டிப்பா போவுணும். டிரிப் இருக்கு! அடுத்த வாரம் முளுக்க டிரிப் இல்ல!" என்றான்.

இரண்டு போத்தல் பியரையும் சாப்பாடு முடிவதற்குள் குடித்து முடித்துவிட்டான். ஏப்பம் விட்டுக் கை கழுவி வந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

பார்வதி பீங்கான் தட்டுகளைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவன் படுக்கையில் சாய்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்.

"அப்புறம் கழுவிக்கலாம் வா பார்வதி!" என்றான்.

"இருங்க முடிச்சிட்டு வர்ரேன்" என்றாள். தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"சீ! சீக்கிரம் வா! நான் போக வேண்டி இருக்குன்னு சொன்னேன்ல!" என்றான்.

கை துடைத்து வந்தவளைப் பிடித்து வெடுக்கென்று இழுத்தான். படுக்கையில் சிரித்துக் கொண்டே விழுந்தாள். "ஐயோ அம்மா உளுந்திட்டாங்க!" என்று கை கொட்டிச் சிரித்தான் ஆறுமுகம். அவனுக்கு அந்த விளையாட்டு விளங்கியது. பிடித்திருந்தது. அப்பாவும் அம்மாவும் என்றைக்காவது ஒரு நாள் அந்நியோன்யமாக இருக்கும் அந்தக் காட்சியும் அபூர்வமாக.

இப்படி வாய்விட்டு அம்மா சிரிப்பது அவனுக்குப் பிடித்திருந்தது.

"இந்த சனியன கௌவிக்கிட்டியே விட்டுட்டு வந்திருக்கலாமில்ல!" என்று கிசுகிசுத்தான் பொன்னுசாமி.

"சீ! பாவம் அப்படிச் சொல்லாதிங்க!" என்றாள்.

"இப்ப என்னா செய்யப் போற இத?" என்று கேட்டான்.

மேக்சியைச் சரிபண்ணிக் கொண்டு எழுந்தாள். "ஏன் கண்ணு, கொஞ்ச நேரம் வெளியே போய் இந்தப் பூனக் குட்டிங்களோட வெளையாடிக்கிட்டு இருக்கியா?" என்று கேட்டாள்.

"வேணாம்! இருட்டா இருக்கு! குட்டிங்கள கொண்ணாந்து உள்ளுக்கு உடு!" என்றான் ஆறுமுகம்..

"சீ! பூனக்குட்டிய வூட்டுக்குள்ள கொண்டாரக் கூடாது. வெளியதான் வெளிச்சம் இருக்கு! அந்த ரோடு லாம்பில் இருந்து வருது பாரு!" அவனைத் தூக்கி கதவுக்கு அப்புறமாக உட்கார வைத்தாள். தூரத்திலிருந்து வந்த தெரு விளக்குகள் வெளிச்சத்தில் பூனைக்குட்டிகள் புழுக்களாக நெளிந்தன.

"கொஞ்ச நேரம் கதவச் சாத்திக்கிறேன் கண்ணு!"

"ஏம்மா?"

"அப்பா என்னமோ பேசணுமா ஏங்கிட்ட! கொஞ்ச நேரந்தான்!" கதவைச் சாத்தினாள்.

பூனைக்குட்டி ஒன்றைத் தூக்கிக் கைகளில் வைத்துக் கொண்டு தடவினான். இதற்குள் பிசுபிசுப்பு மாறி மெத்தென்றிருந்தது. களைத்துப் படுத்துக் கிடந்த தாய்ப்பூனை அவனை நிமிர்ந்து பார்த்து பலவீனமாக "மியாவ்" என்று கத்தியது.

கையிலிருந்த பூனைக்குட்டி கால்களை அசைத்தது. ஆறுமுகம் பிடித்துப் பார்த்தான். தன் கால்களைப் போலத்தான் சூம்பி மெலிதாக இருந்தாலும் பூனையின் கால்களில் உயிர் இருந்தது. காற்றில் நீந்துவது போல அவை அசைந்தன.

தூரத்தில் சாலை நிறைய ஓடும் வெவ்வேறு கார் ஒலிகள் ஒன்றாகக் குழம்பி "சோ" என்று கேட்டுக் கொண்டிருந்தது. அவற்றின் விளக்கு வெளிச்சம் எதிர் வீட்டுத் தகரக் கூரையில் பட்டுப் பட்டு மறைந்து கொண்டிருந்தது. பூனைக்குட்டிகளின் மயிர்கள் போர்த்திய தோல்கள் அந்த வெளிச்சத்தில் மின்னிமின்னி மறைந்தன.

**பூனைக்குட்டி ஒன்றைத் தூக்கிக் கைகளில் வைத்துக் கொண்டு தடவினான் இதற்குள் பிசுபிசுப்பு மாறி மெத்தென்றிருந்தது.**

உள்ளே சிருங்கார ஒலிகள் கேட்டுக் கொண்டிருந்தன. அம்மா சிணுங்குவதும் சிரிப்பதுமாக இருந்தாள். அப்பாவும் அம்மாவும் இப்படி இருந்தது அவனுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. சில சமயங்களில் ஆறுமுகத்திடமும் அம்மா இப்படித்தான் விளையாடிச் சிரிப்பாள். அப்படிப்பட்ட நேரங்கள், மிகக் குறைவானவை. அபூர்வமானவை. அம்மாவின் அந்த மகிழ்ச்சிக்காகத்தான் ஆறுமுகம் இருட்டின் தனிமையைப் பொறுத்துக் கொண்டிருந்தான். ஆனால் நேரம் ஆக ஆக அவனுக்கு பயம் அதிகமாகியது.

பாத்ரூமைத் திறந்து அம்மா தண்ணியை அள்ளி ஊற்றும் சத்தம் கேட்டது. "அம்மா, என்ன உள்ளக் கொண்டு போ! இருட்டா இருக்கு!" என்று குரல் கொடுத்தான் ஆறுமுகம்.

"சும்மா கெட சனியனே, இன்னுங் கொஞ்ச நேரம்!" என்று அதட்டினான் பொன்னுசாமி.

ரகசியமாக உள்ளே நடந்த பேச்சுகளில் சத்தம் கொஞ்சம் அதிகரித்திருந்தது.

"ஒரு அவசரத்துக்குத்தான் கேக்கிறேன் பார்வதி. பாரு, ஒரு மாசத்தில மூட்டுக் கொடுத்திட்றேன்!" என்றான் பொன்னுசாமி.

"நீங்க ஒண்ணும் வாங்கிப் போடல! நான் சாப்பாட்டுக் கடையில மாடா இருந்து ஒளச்சி ஒரு சங்கிலி பண்ணி வச்சிருக்கேன். அதயும் குடுத்திட்டு நான் என்னா செய்ய?" என்றாள் பார்வதி.

"குடு பார்வதி. ஒரு எடத்தில



படிப்பகம்

www.padippakam.com

கடன் வாங்கிட்டேன்! குடுக்க வேண்டியிருக்கு!"

"அப்ப உங்க சம்பளத்த என்னா பண்றிங்க? ஏன் கடன் வாங்கிறிங்க?"

"அட குடுடி! பெரிய பெரிய கேள்வியெல்லாம் கேட்டுக்கிட்டு! புருஷன் ஊட்டுக்கு வந்து ஒரு அவசரத்துக்குக் கேக்கிறானேன்னு குடுப்பியா, பெரிய லாயர் கேள்வி யெல்லாம் கேக்கிற...!"

"கேக்காம, நெனச்ச நேரம் வர்ரிங்க போறிங்க! என் வீடு ஓட்டல் மாறி ஆயிடுச்சி!"

வார்த்தைகள் தடித்தன. ஆறுமுகத்துக்கு கலவரமாக இருந்தது. ஏன் இவர்கள் சந் தோஷம் மாறிப் போயிற்று?

"அம்மா! என்ன உள்ளத் தூக்கிட்டு போம்மா!" என்று கத்தினான்.

பதில் இல்லை. உள்ளே அவன் எதையோ படாரென்று போட்டு உடைத்தான். "வே ணாங்க! சொன்னாக் கேளுங்க! எடுக்காதிங்க!" என்று அம்மா கெஞ்சினாள்.

"போ கஸுத!" என்றான். தடால் என்ற சத்தம் கேட்டது.

"ஐயோ பாவி!" என்று அலறினாள் அம்மா.

ஆறுமுகத்துக்கு மனம் பட படவென்றது. இடுப்பைத் திருப்பிக் கதவைப் பட்பட்டென்று தட்டி னான். "அப்பா! அம்மாவ அடிக் கிறீங்களா? வேணாம். அடிக்கா திங்க!" என்று கத்தினான்.

எதிர்த்த வீடுகளில் சிலர் கதவு திறந்து பார்த்தார்கள். அப்புறம் இது வழக்கம்தான் என்பது போல மீண்டும் சாத்திக் கொண்டார்கள்.

"ஐயோ அதக் குடுத்திடுங்க. நம்ப புள்ளக்கின்னு இது ஒண்ணு தாங்க இருக்கு!" என்று அழுது கொண்டே சொன்னாள்.

"ஆமா பெரிய புள்ள. நோஞ் சானும் நொண்டியுமா ஒண்ண பெத்துக் குடுத்திட்டு, ரொம்பதான் பினாத்திக்கிறா. போடி!" என்றான்.

**ஆறுமுகத்தின் கால்களில்தான் பலமில்லை கைகளில் இருந்தது**

நோஞ்சான் பிள்ளைக்கு உடம்பெல்லாம் அவமானத் தால் செத்துப் போனது. ஊரெல் லாம் நொண்டி என்று சொல் லியதைத் தாங்கியாயிற்று. இப்போ பெற்றவனுமா?

அம்மா சீறினாள். "ஆமா நொண்டிப் பிள்ளதான்! உன் பிள்ளதான! நான் மட்டும் தனியாவா பெத்தேன்?"

"போடி! யாருக்குப் பெத் தியோ?" என்றான்.

"என்ன சொன்னே? என்னத் தேவடியான்னா சொல்ற?"

"ஆமா! தேவடியாதான்! நான் இல்லாத போது என்ன நடக்குதோ, யாருக்குத் தெரியும்?"

எதுவோ வீசப்பட்டு உடைந்து விழுந்தது. சாமான்கள் புரண்டன. 'படார் படார்' என்று அடிக்கும் ஒலி கேட்டது. அம்மா "ஐயோ, ஐயோ!" என்று அலறினாள்.

ஆறுமுகம் படபடவென்று கதவைத் தட்டினான். "டேய்! எங்கம்மாவ அடிக்காத, அடிக்காத, படவா ராஸ்கோல்!"

கத்தினான். சுற்று முற்றும் பார்த்தான். ஒரு கம்பு, ஒரு சட்டம். கையில் ஒன்றும் அகப்படவில்லை.

ஆறுமுகத்தின் கால்களில் தான் பலம் இல்லை. கைகளில் அசுர பலம் இருந்தது. ஒரு கம்பு கையில் இருந்தால் கதவைத் திறந்து அவன் வெளியே வரும் வேளையில் மடேரென்று அவன் கால்களில் அடிக்கலாம். தேடி னான்.

"ஐயோ, அந்த சங்கிலியக் குடுத்திருங்க! அத எடுக்காதிங்க!" என்று உள்ளே அம்மா அழுதாள். மீண்டும் படார் என்ற சத்தம். "போடி உளுந்து செத்துத் தொல!" என்றான் பொன்னுசாமி.

படீரென்று கதவைத் திறந்து கொண்டு வந்தான். கதவு திறந்த தில் வாசலில் வெளிச்சம் பாய்ந் தது. அந்த வெளிச்சத்தில் சங் கிலியைப் பாக்கெட்டில் சொருகிய வாறு ராட்சசன் மாதிரி நின்று ஆறுமுகத்தை முறைத்தான்.

"ஓ நோஞ்சான் பயலுக்கு இவ்வளவு திமிரா? நொண்டின்னு பாவம் பாக்கிறேன். இல்லன்னா இன்னேரம் ஏறி மிதிச்சிருப்பேன் ஒன்ன!"

வெளியே நடந்தான்.

"நீ என் அப்பன் இல்ல! நீ ஒரு மிருகம்" என்று கத்தினான் ஆறுமுகம்.

பொன்னுசாமி திரும்பி நின்று ஒரு கணம் முறைத்தான். அப்புறம் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு ஆறுமுகத்தை நோக்கி வந்தான்.

ஆறுமுகம் தன் கையில் இருந்த பூனைக்குட்டிகள் ஒவ் வொன்றையும் குறிதவறாமல் வீசினான். நெத்தியில் ஒன்று, கண்களைப் பார்த்து ஒன்று. நெஞ்சை நோக்கி ஒன்று,

தடுக்கத் திரும்பியவனின் தோள்பட்டையை நோக்கி ஒன்று.

பொன்னுசாமி குழம்பிப் போய் பார்த்தான். அவன் நெத்தியிலும் நெஞ்சிலும் தோளி லும் ரத்தம் ஒழுகியது. மிரண்டு போய் காலடியில் கிடந்த இறைச் சிச் சிதறலைப் பார்த்தான். 'வேக்' என்று வாந்தியெடுத்தவாறு இருட்டில் ஓடினான்.

வெள்ளைப் பூனை மியாவ் என்று கத்தி ஓடி மோந்து பார்த்து அழுதது.

●



படிப்பகம்

www.padippakam.com



# நினைக்கப்படும்

## மரன்

மும்பைக்குப் போயிருந்தேன்.

தாராவியைக் கடந்தபோது வரதராஜ முதலியார் நினைவுக்கு வந்தார். நாயகன் படக் கதை மாந்தர். குடிசைகளைக் காணோம். ராஜீவ் காந்தி புண்ணியத்தில் அடுக்குமாடிகளாகியிருந்தன.

சென்னையை நினைவு படுத்துகிற மாதிரி சிறிய பெரிய மேம்பாலப் பணிகள். நவி மும்பையில் கணிசமான தமிழர்கள்; கலை இலக்கிய ஆர்வலர்கள்; நவிமும்பை தனியாகத் தெரிந்தது. வரிசையாக தென்மாநிலக் கலை மன்றங்கள். நவிமும்பையிலும் தமிழ்ச் சங்கம். பெரிய கட்டடம்; அரசாங்கம், சலுகை விலையில் இடம் தந்திருக்கிறது.

அவ்வப்போது தமிழ்நாட்டுக்காரர்கள் போய்க் கலைநிகழ்ச்சி நடத்துகிறார்கள். மாநகராட்சிப் பள்ளிக் கூடங்கள் இங்கே போலத்தான் இருக் கின்றன.

மாநகராட்சிப் பள்ளிகளில் இருபதாயிரம் மாணவர்கள் தமிழ்வழி படிக்கிறார்கள்.

பள்ளிகளில் காலை மாலை ஷிப்டு.

ஏழாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி: ஆங்கிலம் தவிர அனைத்தும் தமிழ்.

எட்டாம் வகுப்பிலிருந்து வேறு சில மொழிகள். தமிழர்கள் நடத்தும் பள்ளிகளில் தமிழும் ஆங்கிலமும்.

பாடப் புத்தகங்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடுகள்.

தமிழ்நாட்டுப் பாடத்திட்டம்.

ஆனால் படிக்கிற மாணவர்களுக்குப் பாடநூல் கிடைப்பதில்லை.

எம்.ஜி.ஆர். காலத்தில் ஒருமுறை இலவசமாக அனுப்பியிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் ஆசிரியரிடம் மட்டுமே பாடநூல்.

மாணவர்கள் எழுதிக் கொள்கிறார்கள். கையில் புத்தகம் இல்லை.

காரணம், தமிழ் மாணவர்களின் ஏழ்மை நிலை. தமிழ்நாட்டுப் பாடநூல் மும்பையில் வாங்கிட கூடுதல் விலை கொடுக்கவேண்டும். அன்றாடக் கூலிகளின் குழந்தைகள் பாடநூல் வாங்கிட முடியாமல் அன்றாடப் பாடங்களைக் கரும் பலகையிலிருந்து பார்த்து எழுதிப் போகிறார்கள்.

ஆசிரியர்களுக்குப் பாடம் எழுதிப் போடவே நேரம் போதவில்லை.

நடத்துவது எப்படி?

ஆனாலும் ஆசிரியர்கள் தனிக் கவனம் தந்து ஈடுபாட்டுடன் உழைக்கிறார்கள்.

பாடத் திட்டத்தை வாங்கிப் பார்த்தபோது, தமிழ், கணிதம், அறிவியல் மூன்றும் தமிழ்நாட்டுப் பாடநூல்.

வரலாறு, பூகோளம் மும்பைப் பாடத்திட்டம். மும்பைப் பாட நூலைத் தமிழில் ஆசிரியர்களே மொழிபெயர்த்து நடத்துகிறார்கள்.

தேர்வெல்லாம் தமிழில்தான்.

'அதுவென்ன கணிதமும் அறிவியலும் தமிழ் நாட்டுப் பாட நூலாயிருக்க, வரலாறும் பூகோளமும் மும்பைப் பாடத் திட்டம்' என்று கேட்டபோது சொன்னார்கள்:

கணிதமும் அறிவியலும் பொது. அது தமிழ் நாட்டுப் பாடத் திட்டம், சரி.

ஆனால் வரலாறும் பூகோளமும் மாணவர்கள் வாழும் பகுதி பற்றியதாக இருக்க வேண்டாமா?

தமிழ்நாட்டு வரலாறும் பூகோளமும் மும்பை யில் வாழ்கிறவனுக்குத் தேவையில்லையே. அதனால் மும்பை வரலாறும் பூகோளமும் சொல்லித் தரப் படுகின்றனவாம்.

தமிழ்நாட்டுக் கான்வெண்டுகளில் வரலாறு, பூகோள புத்தகத்தைப் பார்த்தால் தெரியும்.

இலண்டன் வரலாறும், இலண்டன் மாநகரத் தெருக்கள் பற்றியும், பூகோளம் பற்றியும் ஏராளமான பாடங்கள்.

மும்பைத் தமிழ் மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி கூட, நிமிர்ந்து நில் (Attention), தளர்ந்து நில் (Stand at ease) தான்.

மும்பைப் பாடத்திட்ட வல்லுநர்கள் பிற மாநிலங்களுக்கும் முன்னோடியாக நினைக்கப் படுகிறார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# இடிபாடுகளுக்குச் சொந்தம்

## மோஹன் ராகேஷ்

### தமிழில் : வீ. விஜயராகவன்

மோஹன் ராகேஷ் (1925-1972). இயற்பெயர் மதன் மோஹன் குக்லானி. அமிர்தசரஸ் நகரில் பிறந்து வளர்ந்து, லாகூர் ஓரியண்டல் கல்லூரியில் வடமொழியில் சாஸ்திரி மற்றும் எம்.ஏ பட்டமும், இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், ஜலந்தர் நகரில் ஹிந்தியில் எம்.ஏ பட்டத்தில் முதலிடமும் பெற்றார். ஜலந்தர், சிம்லா, மும்பை நகரக் கல்லூரிகளில் ஹிந்திப் பிரிவுகளுக்குப் பொறுப்பு வகித்தவர். ஸாரிகா என்ற இதழுக்கு ஆசிரியராக சிறிது காலம் இருந்தார். எழுத்தாளராக 1962 முதல் தில்லியில் வசிக்க ஆரம்பித்த இவர் முதுமையை எய்து முன்னரே, 1972—ல் இதய பாதிப்பால் காலமானார்.

பல சிறுகதைத் தொகுப்புகள்: (மனித இனத்தின் இடி - குலைவு, புதிய மேகங்கள், விலங்கும் - விலங்கும், இன்னுமொரு வாழ்க்கை போன்றவை), புதினங்கள் : (இருளும் மூடிய அறையும், நாளைய வராது, என சில), நாடகங்கள் : (பாதியாய் - முடியாதவை, ஆஷாட மாதத்தில் ஒரு நாள் முதலியன) இவரது இலக்கியப் பயணத்தின் மைல் கற்கள். பயணக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

இவரது நாடகம் 'ஆஷாட மாதத்தில் ஒரு நாள்,' சங்கீத நாடக அகதமியின் பரிசை வென்றுள்ளது. சாகித்திய அகதமியும் கௌரவித்துள்ளது. ஹிந்தியில் எழுதும் - ஹிந்தி தாய் மொழியாக அல்லாத சிறந்த படைப்பாளிகளில் ஒருவராகத் தேர்வு செய்து மத்திய அரசு பரிசளித்தது. நாடகத்தில் ஒலியின் தாக்கத்தைப் பற்றி ஆய்வு செய்ய, ஜவஹர்லால் நேரு ஆய்வுத் திட்டத்தின் கீழ் இவர் மேற்கொண்ட பணி நிறைவேறுவதற்குள் மரணம்முந்திக் கொண்டது.

மத - இன உணர்வுகளை மீறி, மனிதன் பிறந்த மண், வாழ்ந்த சமூகம் - இவற்றுடன் எவ்வாறு பிணைக்கப் பட்டுள்ளான் என்பதை, சொந்த அநுபவத்தில் உணர்ந்து, இந்தச் சிறுகதை மூலம் துல்லியமாக வெளிக் கொணர்வதில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

சரியாக ஏழரை வருடங்கள் கழித்து அவர்கள் லாகூரிலிருந்து அமிர்தசரஸ் வந்தனர், ஹாக்கிப் போட்டியைப் பார்க்க வேண்டுமென்பதைச் சாக்காக வைத்துக் கொண்டு. அவர்கள் எல்லோரும் மீண்டும் ஒரு முறை காண விரும்பியதென்னவோ, ஏழரை ஆண்டுகளாக அந்நியமாகிப் போன அந்த ஊரின் வீடுகளையும், கடை வீதிகளையும் தான்.

ஒவ்வொரு தெருவிலும், வந்திருந்த முஸ்லீம்கள் சிறு சிறு குழுக்களாக வலம் வருவது தென்பட்டது. கண்டது அனைத்தையும் ஆர்வமுடன் உள்வாங்கும் அவர்களுடைய கண்களின் தீவிரத்தைப் பார்த்தால், அவர்கள் வந்திருந்த இடம் ஒரு சாதாரண நகர மன்று. ஒரு வசீகரத் தலமோ என்று தோன்றியது.

குறுகிய கடை வீதிகளில் புகுந்து புறப்பட்ட அவர்கள்., பழையவற்றை எல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்ட வண்ணமிருந்தனர்.

"பார் இதோ வெற்றிக் கும்பம், கல்கண்டு பஜார்ல பாருங்க, முன்னைவிட இப்பொக் கடைங்க குறைஞ்சு போச்சு இல்ல.... அந்த மூலைல பலகாரக் கடைக்காரியோட தணல் — அடுப்பு இருக்கும், இப்ப வெத்திலை பாக்குக் கடை வைச்சிருக்கான்... அங்கே உப்பு மண்டியைப் பாருங்க, கான் சாஹிப்."

கடை வீதிகளில் வெகு நாட்களுக்குப் பிறகு உச்சிக் குஞ்சலங்கள் வைத்த தலைப் பாகைகளும், சிவப்புத் துருக்கித் தொப்பிகளும் தென்பட்டன. லாகூரிலிருந்து வந்திருந்த முஸ்லிம்களில் பெரும்பாலோர், பிரிவினையின்போது ஏதோ கட்டாயத்தின் பேரில் இங்கிருந்த வீடு — வாசலைத் துறந்தவர்களே. ஏழரை வருட இடைவெளி தோற்றுவித்த பெருத்த மாறுதல்களைக் கண்ட அவர்களுடைய குழப்பத்தையும், வருத்தத்தையும் அவர்களது கண்களே வடித்துக் காட்டின.




"வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர் மொழி வாழியவே!"

வாழும் தமிழ்
2000

விரைவில்

புத்தகங்களின் கண்காட்சி

இலக்கியம், இதிகாசம், சமயம், கவிதை, நாடகம், சினிமா, ஓவியம், சிறுவர்களுக்கான புத்தகங்கள்

"பிரபஞ்சத்தை அறிய முடியாது ஆனால் விஷ்ணுபுரத்தை அறிந்து விடலாமென எண்ணுகிறாய் நீ... அறிய முடியாது நண்பா. ஒரு கூழாங்கல்லைக்கூட என்னாலோ உன்னாலோ எந்த ஒரு மானிடப் பதராலோ அறியமுடியாது. அறிய முடியாதென்பதின் சாட்சிகளே இங்குள்ள நூல்களும் தத்துவங்களும்."

- விஷ்ணுபுரத்தில் ஜெயமோகன்

காலம் சஞ்சிகை
(416) 291 - 6971
P.O. Box : 7305
509 St. Clair Ave. W
Toronto, ON
M6C 1CO
tamilbook@yesic.com


"அல்லா, ஜயமல் சிங் சதுக்கம் எப்படி இவ்வளவு அகலமாகிப் போச்சு? இந்தப் பக்கம் இருந்த வீடுங்க எல்லாமே எரிஞ்சு போச்சா?... ஹகீம் அஸிஃப் அலியின் மருந்துக்கடை இங்கே இருந்துச்சு இல்ல? இப்ப ஒரு செருப்புக் கடைக்காரன் பிடிச்சு வைச்சிருக்கானே!"

அவ்வப்போது வேறு வேறு மாதிரிப் பேச்சுகளும் கேட்டன.

"மாமா, இந்த மசூதி எப்படி இருந்ததோ, அப்படியே இருக்கே? இங்க இருக்கவங்க இதைக் குருத்வாராவாக (சீக்கியக் கோயில்) மாத்தலையா?"

வந்திருந்த பாகிஸ்தானியர்கள் போன வழியெல்லாம், உள்ளூர்வாசிகள் ஆவலுடன் பார்த்தனர். சிலர் சந்தேகப் பார்வையுடன் பின் வாங்க, பலர் முன் வந்து அவர்களைத் தோளோடு அணைத்து முகமன் கூறினர். புதிதாக வந்தவர்களிடம் கேள்வி மேல் கேள்வி கேட்ட வண்ணம் இருந்தனர்.

"இப்போ லாகூர் எப்படியிருக்கு? அனார்கலி முன் போலவே கலகலப்பாக இருக்கா? கேள்விப் பட்டோம்! ஷாஹாலமிகேட் பஜாரை முழுக்கப் புதிசாக் கட்டி இருக்காங்களாமே? கிருஷ்ண நகர்லெ மட்டும் ஒன்னும் ரொம்ப மாத்தம் வரல்லெயா? அங்கே ரிஷ்வத்புரா உண்மையிலேயே ரிஷ்வத் (லஞ்சம்) — பைசாவை வைச்சாக் கட்டியிருக்காங்க? இங்கே சொல்றாங்க, பாகிஸ்தான்லெ அநேகமா எல்லாருமே புர்காவை (முத்திரை—அங்கி) எடுத்துட்டாங்கன்னிட்டு... உண்மையாவா?"

இந்தக் கேள்விகளில் தொனித்த நெருக்கத்தையும், கரிசனத்தையும் கவனித்தால், லாகூர் வெறும் ஊரல்ல. முனைந்து விசாரிக்கும் அளவுக்கு ஏதோ மிகவும் வேண்டப்பட்ட உறவோ எனத் தோன்றியது. அங்கிருந்து வந்தவர் எல்லோரும் நாள் முழுவதும் இந்த ஊரின்



படிப்பகம்

www.padippakam.com

விருந்தினராகவே பாவிக்கப்பட்டனர். அவர்களைச் சந்திக்க நேர்ந்ததில், இங்கிருந்த அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்த வண்ணம் இருந்ததால்.

அமிர்தசரஸில், மூங்கில் பஜார் அப்படி ஒன்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடமில்லை. பிரிவினைக்கு முன், நலிந்த முஸ்லிம்களின் குடியிருப்பாக அது இருந்தது. அங்கே மூங்கில், கூரைக் கட்டடங்களுக்குத் தேவையான மர — தூலங்கள் விற்பனை செய்து வந்த கடைகளே அதிகம். கிட்டத் தட்ட அவை அனைத்துமே ஒரே சமயத்தில் தீக்கிரையாயின.

மூங்கில் பஜார் எரிந்தது அமிர்தசரஸில் வெகு நாள் வரை மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. பஜாரில் அக்கம் பக்க குடியிருப்புகளையும் நெருப்பு விட்டு வைக்கவில்லை. எப்படியோ அந்தத் தீயைச் சமாளித்து விட்டார்கள். இருந்தும், எரிந்த ஒவ்வொரு முஸ்லிம் வீட்டுடன், ஐந்தாறு ஹிந்துக்களின் வீடுகளும் எரிந்து சாம்பலாகித் தான் போயின.

கடந்த ஏழரை ஆண்டு இடைவெளியில் அங்கு புதிய கட்டிடங்கள் தோன்றிவிட்டாலும், ஆங்காங்கே பழைய இடிபாடுகளின் குவியல்களும் தென்பட்டன. புதிய பளபளப்புகளுக்கிடையே, இந்த அவலக் குவியல்கள் மனத்தை நெருடத்தான் செய்தன.

இன்றுகூட மூங்கில் பஜாரில் அதிக நடமாட்டமில்லை. அங்கிருந்தவர்களில் அநேகம் பேர், வீடுகளோடு கூடவே வெந்து மடிந்து விட்டனர். தப்பி ஓடிப் பிழைத்துக் கொண்டவர்களுக்குத் திரும்பி வரும் தைரியம் இருந்திருக்க நியாயமில்லை. சந்தடியற்ற அந்தத் தலத்தில் முதிர்ந்த, மெலிந்த முஸ்லிம் கிழவன் ஒருவன் புதிய கட்டிடங்கள், பழைய இடிபாடுகள் இரண்டுக்கும் இடையே, வழி

## எதிரே மின்சாரக் கம்பிகளின் மீது இரு பருந்துகள் அசையாது அமர்ந்திருந்தன கம்பத்தின் அருகே சிறிது வெய்யில் படிந்தது

தவறிய மலைப்போடு காணப்பட்டான். இடது பக்கம் திரும்பி அங்கிருந்த சந்துக்குள் நுழைய வேண்டியவன், அதுதானா செல்ல வேண்டிய வழி என்பது புரிபடாதது போலத் தயங்கி நின்றான். சந்தினுள், சிறுவர்கள் ஓடி விளையாடிக் கொண்டிருக்க, உள்ளே எங்கிருந்தோ இரு பெண்கள் உரத்த குரலில் வசவு மாரி பொழிந்தவாறு தீவிரச் சண்டையில் ஈடு பட்டிருந்தது காதில் விழுந்தது.

''எல்லாம் மாறிட்டது, ஆனா இந்த வசை மொழி மட்டும் மாறல்ல'' எனத் தனக்குள் முணுமுணுத்தவாறே அந்த முஸ்லீம் கிழவன் தடியை ஊன்றி நின்று கொண்டிருந்தான். அவனது கால்—முட்டிகள், நைந்த பைஜாமாவிலிருந்து வெளியே துருத்திக் கொண்டிருக்க, அவனது ஷெர்வானியிலும் இரண்டு மூன்று ஒட்டுப் போட்ட தையல்கள் தெரிந்தன. சந்திலிருந்து ஒரு குழந்தை அழுது கொண்டே வெளியே ஓடி வந்தது. பரிவான சப்தங்களை உதட்டில் வரவழைத்துக் கொண்டே, கிழவன் அந்தக் குழந்தையை அழைத்தான்.

“இங்க வா, குட்டி, வா— நான் உனக்கு ஏதோ ஒன்னு குடுக்கப் போறேன்.”

அவனது கை ஜேபிக்குள் நுழைந்து, ஏதாவது இருக்கிறதா என்று துழாவத் தொடங்கியது. ஒருக் கணம் அழுகையை நிறுத்தி அவனை ஏறிட்ட குழந்தை, உதட்டைப் பிதுக்கியவாறு மீண்டும் அழத் துவங்கியது.

சந்தினுள்ளிருந்து பதினாறு பதினேழு வயதுள்ள ஒரு பெண் ஓடி வந்து, அந்தக் குழந்தையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போனாள். திமிறி எகிறப் பார்த்த குழந்தையை, எடுத்து அணைத்துக் கொண்டவாறு அவள் சொல்லிக் கொண்டே போனது:

“வாயை மூடிண்டு சும்மா இரு ஸபயா, அழுதேன்னா, அந்த முஸ்லிம் கிழவன் பிடிச்சிட்டுப் போயிடுவான், நான்தான் தவிக்கணும், வாயை மூடு.”

குழந்தைக்குக் கொடுப்பதற்காக எடுத்த பைசாவைக் கிழவன் மீண்டும் ஜேபியில் போட்டான். தலையிலிருந்த தொப்பியை எடுத்துத் தலையைச் சொறிந்து கொண்டவன், தொப்பியை அக்குளில் இடுக்கிக் கொண்டான். அவனது தொண்டை வறண்டது. கால் முட்டிகள் நடுங்க ஆரம்பித்தன. சந்து முனையில், மூடியிருந்த ஒரு கடையின் பலகையைப் பற்றியவாறே, அவன் தொப்பியை மீண்டும் தலையில் வைத்துக் கொண்டான். சந்து எதிரில், முன்பு உயர உயரமான உத்திரங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த இடத்தில் இப்போது ஒரு மூன்று மாடிக் கட்டிடம் இருந்தது. எதிரே மின்சாரக் கம்பிகளின் மீது இரு பருந்துகள் அசையாது அமர்ந்திருந்தன. கம்பத்தின் அருகே சிறிது வெய்யில் படிந்தது. சிறிது நேரம் வெம்மையில் மேலெழும்பும் தூசியை வெறித்த அவனது வாயிலிருந்து வெளிப்பட்டது. “ஹே, எஜமான்!”

கை விரல்களில் சாவிக் கொத்தைச் சுழற்றியவாறே, அந்த



படிப்பகம்

www.padippakam.com

சந்தை நோக்கி வந்து கொண்டிருந்த இளைஞன் ஒருவன், கிழவனைக் கண்டவுடன் அருகே வந்து கேட்டான்:

"சொல்லுங்க, மியான்ஜி, இங்க ஏன் இப்படி நின்னுக் கிட்டிருக்கீங்க?"

கிழவனின் மார்பும், தோள்களும் சிறிது நடுங்கின. உதடுகளை நாக்கினால் ஈரப் படுத்திக் கொண்டு, அந்த இளைஞனை உற்றுப் பார்த்துக் கொண்டே, "பையா, உன் பேரு மனோரீ இல்லே?" என்றான்.

அந்த இளைஞன், சாவிக் கொத்தைச் சுழற்றுவதை நிறுத்தி, கைக்குள் அடக்கிக் கொண்டு, வியப்புடன் கேட்டான். "உங்களுக்கு என் பேரு எப்படித் தெரியும்?"

"ஏழரை வருஷத்துக்கு முன்னாடி நீ இத்துனூண்டு தானெ இருந்தே பையா." இதைச் சொன்னவாறே கிழவன் சிரிக்க முயன்றான்.

மனோரீ கேட்டான். "நீங்க பாகிஸ்தான்லெருந்து இன்னிக்கு வந்திங்களா?"

"ஆமாம், ஆனா முன்னே நாங்க இந்தச் சந்திலேதான் இருந்தோம். என் பிள்ளை சிராக்தீன் உங்களோட தையல்காரனா இருந்தான். பிரிவினைக்கு ஆறு மாசம் முன்னாடி தான் நாங்க இங்க எங்களோட புது வீட்டைக் கட்டினோம்."

மனோரீக்கு அடையாளம் தெரிந்து விட்டது. "ஓ! கனி மியான்."

"ஆமா பையா. நான்தான், உங்களோட கனி மியான். சிராக், அவனோட பொண்டாட்டி, பசங்களைத்தான் பார்க்க முடியாது. சரி, வீட்டோட இருப்பதையாவது ஒரு தரம் பார்த்திட்டுப் போவலாம்னு நினைச்சேன்."

தொப்பியை எடுத்தபடி, அவன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

"நீங்க மட்டும் தனியா, ரொம்ப முன்னாடியே இங்கேருந்து போயிட்டீங்க இல்லே?"

மனோரீயின் கேள்வியில் பரிவு கூடியிருந்தது.

"ஆமா பையா, இந்தப் பெரிய இடி விழறத்துக்கு முன்னயே தனியாக் கிளம்பிப் போயிட்டேன். இருந்திருந்தா ஒருவேளை அவங்களோடேயே....." சொல்லும் போதே குரல் தழுதழுத்தது. அவ்வாறு பேசிக் கொண்டே போவது தவறோ என அவனுக்குப் பட, மேலே பேசுவதை நிறுத்திக் கொண்டான். ஆனால் கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

"கனி ஸாஹப், விடுங்க, நடந்து போன சமாசாரத்தைப் பத்தி யோசிச்சு என்ன பண்ணப் போறோம்?"

மனோரீ கனியின் தோளைப் பற்றியவாறே சொன்னான். "வாங்க போகலாம். உங்க வீட்டைக் காண்பிக்கறேன்."

அதற்குள் செய்தி சந்திற்குள் பரவி விட்டது.

"சந்து வெளியே ஒரு முஸல்மான் நின்று கொண்டிருக்கான். ராமதாஸியோட பையனைத் தூக்கிட்டுப் போயிடப் பார்த்தான். நல்ல வேளையா அந்தப் பையனோட அக்கா இழுத்துகிட்டு வந்துட்டா, இல்லாவிட்டா..."

இதைக் கேட்டவுடனேயே, மணை, பாய் போட்டுக் கொண்டு வெளியே உட்கார்ந்திருந்த பெண்கள், எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக் கொண்டு வீடுகளுக்குள் புகுந்து கொண்டனர். வெளியே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களையும் சத்தம் போட்டு வளைத்து வீட்டுக்குள் அடைத்தனர்.

மனோரீ, சந்திற்குள் கனியை அழைத்து வந்த சமயம், சந்து வெறிச்சோடிக் கிடந்தது, ஒரு வண்டிக்காரனையும், கிணற்றடி மூலையில் வளர்ந்திருந்த அரச மரத்தினடியில் தாறுமாறாகக் கிடந்து உறங்கிக் கொண்டிருந்த ரக்கா பயில்வானையும் தவிர.

சந்திலிருந்த வீடுகளில் அநேகமாக எல்லா ஜன்னல்கள் கதவு இடுக்குகளிலிருந்தும் தலைகள் தெருவை எட்டிப் பார்த்த வண்ணம் இருந்தன. கனியைக் கண்டவுடன் அங்கங்கே பேச்சு கிசுகிசுப்பாகக் கேட்டது. தாடிதான் வெளுத்து விட்டதே தவிர, சிராக்தீனின் அப்பன் அப்துல் கனியை அடையாளம் கண்டு கொள்வது அவர்களுக்குக் கடினமாயில்லை.

"அதுதான் உங்க வீடாக இருந்தது." தள்ளியிருந்த, ஒரு இடிந்து கிடந்த குவியலைச் சைகையால் காட்டியவாறே, மனோரீ சொன்னான்.

சில கணங்கள் திகைத்துப் பிரமை பிடித்து, கனி அந்த திசையை வெறித்தவாறு நின்றான்.

சிராக், அவனுடைய மனைவி மக்களோட மரணங்களை ஒருவாறு கனி என்றோ சுவீகரித்துக் கொண்டுவிட்

**எல்லா ஜன்னலின் கதவு இடுக்குகளிலிருந்தும் தலைகள் தெருவை எட்டிப் பார்த்த வண்ணம் இருந்தன**



படிப்பகம்

www.padippakam.com


தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்

BLUE STAR

Authorised Dealers for :
WINDOW
SPILIT
DUCTABLE SYSTEM &
WATER COOLERS

AIRCONS PROJECTS
10, ANANDAN STREET,
T. NAGAR, CHENNAI-17
Phone : (004) 8215682 / 83
Fax : (044) 8259708


டாலும், புதிதாகக் கட்டிக் கைவிடப் பட்ட வீட்டின் இந்த நிலை அவன் எதிர்பாராதது. கண் முன் நின்ற அதன் அவலக் கோலம் அவனை ஆட்டி, உலுக்கி விட்டது. நா உலர்ந்து, அவனது கால் முட்டிகளில் நடுக்கம் அதிகரித்து விட்டது.

"அந்த இடிஞ்ச குவியலா?" நம்பிக்கையற்ற குரலில் கேட்டான்.

மனோரீ அவனது வெளிறி வரும் முகத்தைக் கண்டான். அவனுடைய பக்கத்தில் அணைந்து நின்று கொண்டு, குரல் குழைய, நிதானமாகச் சொன்னான்:

"உங்க வீடுதான். அந்த சில நாள்லேயே எரிஞ்சு போச்சு."

கனி கைத்தடியின் துணையுடன் எப்படியோ அந்த இடிந்து கிடந்த குவியலருகில் சென்று விட்டான். எல்லாமே ஒரே மண்ணோடு மண்ணாய் இருந்தது. இடை இடையே துருத்திக் கொண்டிருந்த கருகிய செங்கலோடு. இரும்பும், மரமும் என்றோ நீக்கப் பட்டு விட்டது தெரிந்தது. எரிந்து கருகிய ஒரு வாசக்கால் சட்டம் மட்டும் எப்டியோ மிஞ்சி, இடிபாடுகளிடையே நிமிரப் போராடிக் களைத்தது போல் பாதி சாய்ந்து காணப்பட்டது. பின்புறம் எரிந்த கட்டைகளாய் இரு அலமாரிகள், அவற்றின் கரிக் கறைகள் மீது அடை அடையாய் உளுத்த வெளுப்புக்கள்.

குவியலின் அருகில் நின்றவாறு இதுதான் மிச்சமா, இது தானா என்று புலம்பிய கனிக்கு, அவனுடைய கால்களே விடை கொடுப்பது போல் தள்ளாட, கருகிய வாசக்காலைப் பற்றிய வாறே அவன் அமர்ந்தான். ஒரு கணம் கழித்து அவனது தலை வாசக்கால் சட்டத்தின் மேல் படிந்த போது, விம்மலுடன் குரல் வெளிப்பட்டது:

"ஐயோ, ஐயோ சிராக் தீனா."

எரிந்து விட்ட வாசற் கதவுச் சட்டங்கள், இடிந்து மேடாகிய குவியலிலிருந்து ஏழுரை வருடங்களாக வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்தாலும், மரம் என்றோ உளுத்து, பொறை தட்டிப் போய் விட்டது. கனியின் தலைபட்டவுடனேயே, பட்ட இடம் பொல பொலவென்று உதிர்ந்து சிதறியது. கனியின் தொப்பியிலும், முடியிலும் கொஞ்சம் ஒட்டிக் கொண்டது.

உதிர்ந்த மரத் துகள்களுடனே, ஒரு மண் புழுவும் கீழே விழுந்தது. கனியின் காலடியில் இருந்து ஆறு அங்குலம் தள்ளி செங்கல் பதித்திருந்த சாக்கடையோரம் நெளிந்தது. ஓட்டை, சந்து தென்படுகிறதா என்று ஓரிரு முறை தலையைத் தூக்கி, புகலிடம் இன்றி அங்குமிங்கும் திரும்பி நெளிந்து தவித்தது.

அவர்களுக்கே பட்டது — அந்த இடிந்த சுவர்களே கனியிடம் அனைத்தையும் சொல்லாமல் சொல்லிவிடும் என்று.



படிப்பகம்

www.padippakam.com

சிராக் ஒரு நாள் மாலை, வீட்டு மாடியில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது ரக்கா பயில்வான் வந்து கூப்பிடும் குரல் கேட்டது. "கீழே வந்து ஒரு முக்கியமான சமாசாரம் கேட்டுட்டுப் போ" என்றான்.

ரக்கா பயில்வான் அந்த நாட்களில் இந்த இடத்துக்கே ராஜா மாதிரி. ஹிந்துக்களே அவனுக்குக் கீழ்ப்படிந்த போது, சிராக் எங்கே... முஸ்லிம் வேறெ. சிராக் கையில் எடுத்ததை அப்படியே வைத்து விட்டுக் கீழே இறங்கி வந்தான். அவனது பீவி ஜுபைதாவும், பெண்கள் கிஷ்வரும், ஸுல்தானாவும் மாடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தனர்.

சிராக் வீட்டின் முகப்பைத் தாண்டியதுதான் தாமதம். பயில்வான் அவனது சட்டைக் காலரைப் பிடித்துத் தெருவில் இழுத்தான். இழுத்த வேகத்தில் அவனைக் கீழே தள்ளி, அவன் மார்பின் மேல் ஏறி அமர்ந்து அழுத்திப் பிடித்துக் கொண்டான். அவனது கையைப் பிடித்த சிராக் அலறினான்.

'வேணாம், ரக்கா பயில்வான், என்னை அடிக்காதெ, ஐயோ என்னைக் காப்பாத்துங்க. ஜுபைதா. என்னைக் காப்பாத்தேன்.'

மேலேயிருந்து, ஜுபைதா, கிஷ்வர், ஸுல்தானா மூவரின் தீனமான கூக்குரல் எழும்பியது. ஜுபைதா அலறிக் கொண்டே கிழிறங்கி, வாசல் முகப்பிற்கு ஓடி வந்தாள்.

அதற்குள் ரக்காவின் அடியாட்களில் ஒருவன் சிராகின் திமிறிய தோள்களை அழுத்திப் பிடிக்க, ரக்கா அவனுடைய தொடைகளைத் கால் முட்டிகளால் அழுத்தியவாறு கறுவினான்.

"ஏன் அலர்றே... பாகிஸ்தான்தானே வேணும், இந்தா தர்றேன், எடுத்துக்கோ..." ஜுபைதா வருவதற்குள் சிராகிற்கு பாகிஸ்தான் அளிக்கப்பட்டு விட்டது.

**இருந்த எல்லாப் பொருட்களும் அநேகமாக சூறையாடப் பட்டவுடன், யாரோ வீட்டிற்குத் தீயும் வைத்தார்கள். ரக்கா பயில்வானும், தீ வைத்தவர்களை உயிரோடு விடப் போவதில்லை என்று சபதமிட்டுத் திரிந்து கொண்டிருந்தான்**

அக்கம் பக்கம் வீடுகளின் ஜன்னல்கள் உடனே அடைக்கப் பட்டன. யாரெல்லாம் இதைப் பார்த்தார்களோ, அவர்களெல்லாம் கதவுகளை அடைத்ததின் மூலம், இந்தச் சம்பவத்தில் தங்களுடைய பொறுப்பைக் கை கழுவினார்கள். மூடப் பட்ட கதவுகளையும் தாண்டி, வெகு நேரம் வரை, ஜுபைதா, கிஷ்வர், ஸுல்தனா மூவரின் அலறல் கேட்டுக் கொண்டே இருந்தது. ரக்கா பயில்வானும், அவனுடைய சகாக்களும் இவர்களையும் விட்டு வைக்கவில்லை. அன்றிரவே அவர்களுக்கும் பாகிஸ்தான் அளிக்கப்பட்டது, ஆனால் வேறு வழியில்.

அவர்களை சிராகின் வீட்டில் காண முடியவில்லை. அவர்களுடைய உயிரற்ற உடல்கள், அருகிலுள்ள கால்வாயில் மிதந்து கொண்டிருந்தன, பின்னரே தெரியவந்தது.

இரண்டு நாட்கள் சிராகின் வீட்டைத் தேட்டை போட்டார்கள். இருந்த எல்லாப் பொருட்களும் அநேகமாக சூறையாடப் பட்டவுடன், யாரோ வீட்டிற்குத் தீயும் வைத்தார்கள். ரக்கா பயில்வானும், தீ வைத்தவர்களை உயிரோடு விடப் போவதில்லை என்று சபதமிட்டுத் திரிந்து கொண்டிருந்தான். சிராக் கொல்லப்பட்ட காரணமே அந்த வீட்டின் மேல் ரக்காவிற்கு ஒரு கண் என்பதால்தான். வீட்டை மங்கலமாக்க, அவன் பூஜைக்கு சாமக்கிரியைகளெல்லாம் வேறு வாங்கி வைத்திருந்தான். ஆனால் கடைசி வரை தீ வைத்தது யாரென்று பிடிபடவேயில்லை.

ஏழரை வருடங்களாக, ரக்கா பயில்வான் அந்த இடிந்த குவியலுக்குச் சொந்தம் கொண்டாடி வந்திருக்கிறான், யாரையுமே பசு—எருமை கட்ட விடாமல், கம்பு, கத்தி, எதையுமே அண்ட விடாமல். அந்த இடத்தில் அவன் அனுமதியின்றி ஒரு கல்லைக் கூட நகர்த்த முடியாது.

எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர், இன்று எப்படியாவது முழுக்கதையும் கனீயின் காதுகளுக்கு எட்டி விடும்... அந்தக் குவிந்து கிடந்த அவலத்தைப் பார்த்தாலே, அவனுக்கு எல்லாமே புரிந்து விடும் என்று. கனீயோ அந்தக் குவியலின் நடுவே, நகங்களால் மண்ணைக் கிளறிக் கிளறி அவன்மீதே தூவிக் கொண்டு, வாசற்காலைக் கட்டிக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தான்.

"சொல்லு, சிராக்தீனா, சொல்லு, எங்கெ போயிட்டேடா நீ, எங்கே போயிட்டேடா நீ. ஐயோ, கிஷ்வர், அடிஸுல்தானா, என் பொண்ணுங்களா, எங்கே டீ போயிட்டீங்க. ஐயோ, கனீய இங்க ஏன்டீ இப்படி விட்டுட்டுப் போயிட்டீங்க."

உளுத்துப் போன வாசற்காலிலிருந்து மரத் துகள்கள் உதிர்ந்த வண்ணம் இருந்தன.

அரச மரத்தடியில் உறங்கிக் கொண்டிருந்த ரக்கா பயில்வானை யாரோ எழுப்பி விட்டார்களோ, அல்லது அவனாகவே எழுந்து விட்டானோ



படிப்பகம்

www.padippakam.com

தெரியவில்லை. பாகிஸ்தானிலிருந்து அப்துல் கனீ வந்திருக்கிறான், தன்னுடைய வீட்டின் இடிபாடுகளிடையே உட்கார்ந்திருக்கிறான் என்பதைக் கேட்டதுமே அவன் தொண்டையை ஏதோ அடைத்தது போல் உணர்ந்து, ஓர் இருமலுடன் சேர்த்துக் கோழையாகக் கிணற்று மேடையில் துப்பினான். இடிந்த குவியலை நோக்கிய அவன் தொண்டையிலிருந்து ஏதோ தோல் துருத்தியை இயக்கினாற் போல பெரு மூச்சு எழுந்தது. அவனது கீழுதடு தளர்ந்து தொங்கியது.

"கனீ அங்கேதான் குந்தியிருக்கான்." ரக்காவின் சகா லச்சா பயில்வான் அவனருகில் வந்து அமர்ந்தவாறு சொன்னான்.

"அந்த மேடு அவனது எப்படி? என்னோடது தானே." தூக்கக் கலக்கத்தில் பயில்வானின் குரல் கரகரத்துக் குழறியது.

"ஆனா அவன் அங்கேயே தான் உக்காந்திட்டிருக்கான்" கண்களால் சைகை காட்டியவாறு சகா மீண்டும் ரகசியம் பேசுவது போல,

"உக்காந்தா — உக்காந்துட்டுப் போவட்டும், நீ ஹுக்காவைக் கொண்டா."


ரக்கா கால்களை கொஞ்சம் நீட்டி, வெளியே தெரிந்த தொடைகளைக் கைகளால் நீவி விட்டுக் கொண்டான்.

"மனோரீ அவனிடம் எல்லாத்தையும் சொல்லிட்டா?"

ஹுக்காவை நிரப்ப எழுந்த லச்சா, அந்தப் பக்கம் ஓரக் கண் பார்வையைப் படர விட்டவாறே கேட்டான்.

"மனோரீக்குக் கெட்ட காலம் வந்திடிச்சா என்ன?"

லச்சா அரச மரத்தடிக்குச் சென்று, அதனடியில் பரவியிருந்த உலர்ந்த இலைகளைப்



பொறுக்கிக் கைகளிடையே வைத்துப் பொடித்தான். பின்னர், துணியை அடியில் இருத்தி, அவன் கொடுத்த ஹுக்காவை ஏந்தி, ஒரு நீண்ட இழுப்புக்குப் பிறகு ரக்கா கேட்டான். "அப்புறம்? கனீயோடு யாராவது பேசினாங்களா?"

"இன்னும் பேசல."

"அதானே.." இருமல் குறுக்கிட அவன் ஹுக்காவை லச்சாவிடம் நீட்டினான். அந்த மேட்டிலிருந்து மனோரீ, கனீயின் தோள்களைப் பிடித்து அழைத்து வருவதை லச்சா பார்த்தவாறு நின்றான். பதட்டத்தில் மீண்டும் மீண்டும் ஹுக்காவை இழுத்த அவனது பார்வை, ரக்கா மீதும், நடந்து வந்து கொண்டிருக்கும் கனீ மீதும் மாறி மாறிப் படர்ந்தது.

மனோரீ, கனீயைப் பிடித்துக் கொண்டு, முன்னேயிருந்து நடத்திச் செல்வதைப் பார்த்தால், கனீ கிணற்றின் ஒரு பக்கமாக, ரக்கா பயில்வானைப் பார்க்காமலேயே சென்று விடுவான் போல் பட்டது. ஆனால் ரக்கா கை கால்களைப் பரப்பிக் கிடந்த கோலம், தொலைவிலேயே கனீயின் பார்வையில் சிக்கியது. கிணற்றங்கரையைச் சமீபித்ததுமே, கனீயின் தோள்கள் பூரித்தன. குரல் கூடியது.

"ரக்கே பயில்வான்!"

ரக்கா கழுத்தை நிமிர்த்திக் கண்களைச் சுருக்கி அவனை உற்று நோக்கினான். அவனது தொண்டையிலிருந்து புரிபடாத ஒலி எழுந்தது, ஆனால் அவன் வாய் திறக்கவில்லை.

"ரக்கா பயில்வான், என்னை அடையாளம் தெரியல்லே?"

கனீ குனிந்தவாறே கேட்டான். "நான்தான் கனீ, அப்துல் கனீ, சிராக்தீனொட அப்பன்."

பயில்வான் சந்தேகம் நிரம்பிய கண்களோடு, அவனை ஏற இறங்கப் பார்த்தான். ரக்காவைக் கண்டதுமே அப்துல் கனீயின் கண்களில் ஒளி கூடிவிட்டது. வெள்ளைத் தாடியை நிமிர்த்திய வண்ணம் அவனது முகச் சுருக்கங்கள் கீழே சிறிது பரவியது.



படிப்பகம்

www.padippakam.com

"ரக்காவின் கீழுதடு சற்று பிரிந்து, அவனது உடம்பினுள்ளிருந்து ஒலியெழுந்தது. "சொல்லு, கனீயா."

கனீயின் உடம்பு அணைப்பை எதிர்பார்த்து முன்னேற, அந்த வரவேற்பை மறுதரப்பில் காணாமல் அப்படியே சற்று நின்றது. பின்னர் அரச மரக்கிளையைப் பற்றியவாறு கிணத்துக் கல் மேல் அமர்ந்தது.

மேலே, ஜன்னல்களிடையே கிசுகிசுப்பு தீவிரமாகியது. இப்ப இரண்டு பேரும் எதிரெதிரே உட்கார்ந்தாகி விட்டது.... இனி பேச்சுக் கிளம்ப வேண்டியது தான்... இரண்டு பேருக்கும் இடையில் வசவு மேல் வசவு பரிமாற்றம் நடந்து, அப்புறம்...

இப்ப ரக்காவாலெ கனீயை ஒன்னும் சொல்ல முடியாது, அந்த நாளெல்லாம் மலையேறிப் போயாச்சு... பெரிய்ய குப்பை மேட்டு ராஜா இவரு... அசல்ல பார்த்தால் அது இவனுக்கும் சொந்தமில்ல, கனீக்கும் சொந்தமில்ல. சர்க்காருக்குச் சொந்தமாகிப் போச்சு. பசு மாட்டைக் கூடக் கட்ட விடமாட்டான்...

மனோரீ சரியான பயந்தாங் கொள்ளி. அவன் கனீ கிட்டெ சொல்லியிருக்க வேண்டியது தானே. சிராகையும், அவன் பெண்டாட்டி. பசங்களை ரக்கா தான் அடிச்சுக் கொன்னுப் போட்டான்னு. ரக்கா மனுஷனில்ல, மிருக ஜாதி. நாள் முழுக்க காளை மாடு மாதிரித் தெருத் தெருவா திரிஞ்சிக்கிட்டு....

கனீ பாவம் எவ்வளொ இளைச்சிப் போயிட்டான் பார்த்தியா? தாடி மயிரெல்லாமே நரைச்சுப் போயாச்சு.

கனீ கிணற்று மேடையில் அமர்ந்தவாறே பேசினான்:

"பாரு, ரக்கா பயில்வான். எப்படியெல்லாம் ஆகிப் போச்சு. விட்டுட்டுப் போகச்ச புத்தம் புது வீடு, ஆளு தேளோட நிறைஞ்சு.

**பயில்வானின் கால்களிரண்டும் சுய நிலைக்கு மீண்டன கிணற்றுக் கம்பத்திலிருந்த மேல் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான்**

ஆனா இன்னிக்கிப் பாத்தா இங்கே வெறும் மண்ணு மட்டுந் தான் இருக்கு. வைச்சிருந்த வீட்டுக்கு இந்த அடையாளம் தான் மிச்சமிருக்கு. உண்மையைச் சொல்லணும்னா, இந்தக் கல் மண்ணைக் கூட விட்டுட்டுப் போக மனசு வர மாட்டேங்குது"

சொல்லும் போதே அவனது கண்கள் கலங்கின.

பயில்வானின் கால்களிரண்டும் சுய நிலைக்கு மீண்டன. கிணற்றுக் கம்பத்திலிருந்த மேல் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான். லச்சா நீட்டிய ஹுக்காவை வாங்கி புகையிழுக்க ஆரம்பித்தான்.

"நீயே சொல்லேன் ரக்கா, எப்படி இப்படியெல்லாம் நடந்தது?" கனீ கண்ணீரைக் கட்டுப் படுத்தியவாறே கேட்டான். "நீங்க எல்லாருமே பக்கத்திலேதானே இருந்தீங்க. ஒருத்தருக்கு ஒருத்தர் அண்ணன் தம்பீ மாதிரியில்ல ஆசையாக இருந்தீங்க. அப்படியே வேணுமின்னா அவன் உங்க யார் வீட்டிலேயாவது தங்கியிருக்க முடியாதா என்ன? அவனுக்கு அந்த அளவு கூடவா புத்தியில்லாமப் போச்சு?"

"அப்படித்தான்னு வைச்சுக்க."

ரக்காவிற்கு தன்னுடைய குரலே மாறி, சுரத்தில்லாமல் கேட்டது போலப் பட்டது. அவனது உதடுகள் எச்சிலின் ஈரப்பத மிகுதியால் ஒட்டிக் கொண்டு விட்டன. மீசையின் கீழே வியர்வை வழிந்து, உதடுகள் கரித்தன. நெற்றி மேட்டில் அமுத்தினாற் போல் வலித்தது. முதுகு தாங்குவதற்கு ஆதரவு தேடித் தவித்தது.

"பாகிஸ்தான்ல எப்படியிருக்கு?"

ஈன ஸ்வரத்தில் ரக்காவின் கேள்வி எழும்பியது. அவனது குரல்வளையின் நரம்புகளில் இறுகிய அழுத்தம் பரவியது. மேல் துண்டால் அக்குளில் வடிந்த வியர்வையைத் துடைத்தவாறே, தொண்டையை அடைத்த சளியைசெறுமிச் செறுமி சந்தை நோக்கித் துப்பினான்.

"நான் சொல்றதுக்கு என்ன இருக்கு, ரக்கா?" தடியின் மீது கைகளை ஊன்றிக் கொண்டு, கனீ கொஞ்சம் முகத்தைக் குனிந்தவாறு பேசினான்.

"என்னோட நிலை என்னன்னு கேட்டியானா, அது குதாவுக்குத்தான் தெரியும். என்னோட சிராக், கூடவே இருந்திருந்தா நிலமையே வேறெ... ரக்கா, நான் அவனோட எவ்வளவோ முட்டிண்டேன். என் கூடவே வந்திடுன்னு, கேட்கல. புது வீட்டை அப்படியே விட்டிட்டு எப்படிப்பா வரதுன்னான். நம்ப தெரு, தெரிஞ்சவங்க, ஆபத்து வராதுன்னான். சாதுவான புறாவுக்கு ஆபத்து இங்கிருந்துதான் வரணுமா என்ன, வெளியேயிருந்தும் வரலாம்ன்னு தெரியாதா? வீட்டுப் பராமரிப்புன்னு சொல்லிக் கடைசிலெ நாலு பேரும் பலியாயிட்டாங்க... ரக்கா, அவனுக்கு உங்கிட்ட ரொம்ப நம்பிக்கை இருந்திச்சு. சொல்



படிப்பகம்

www.padippakam.com

லிண்டே இருப்பான்... ரக்கா இருக்கிற வரை என் மேல எவனாலேயும் கை வைக்க முடியாதின்னிட்டு. கடைசிலெ, ஆபத்து வந்தப்பொ, ஒத்தரா லெயும் ஒன்னும் தடுக்க முடி யல்ல பாத்தியா?"

ரக்கா நிமிர யத்தனம் செய் தான். ஏனெனில் முதுகுத் தண்டின் ஒவ்வொரு எலும்பும் வலித்தது. இடுப்பும், தொடை களும் சேருமிடத்திலும், கடுமை யான வலி பரவியது. வயிற்றிலும் கடையப் படும் வேதனை, மூச்சே திணறும்படி. குதிகால்கள் நொந் தன. உடல் முழுவதும் வியர்த்தது. கண்ணெதிரே பூச்சி பறந்தது. நாவும் உதடுகளும் உலர்ந்து போயின. வாய்க்கடையில் ஏதோ நமநமத்தது. மேல் துண்டால் அதைத் துடைத்த ரக்காவின் வாயிலிருந்து கிளம்பிய சொற்கள்:

"ஹே, ப்ரபு உண்மையிலெ நீ இங்கே, நீயே இருக்கே, நீதான் இருக்கே."

ரக்கா பயில்வானின் வறண்ட உதடுகளையும், நிலை யில்லாமல் துடிக்கும் விழி களையும் கண்டுணர்ந்த கனீ, அவனுடைய தோள்களில் கைவைத்தவாறே சொன்னான்:

"சுதாரிச்சுக்கோ ரக்கா. எது நடக்கணும்னு விதியோ அது நடந்து போச்சு. அதைத் திரும்பிப் பெறவா முடியும்? எப்பவும் நல்லத நல்லவங்கதான் பாத்துக் கிடணும், கெட்டதுக்கு கெட்ட வங்களே ஒரு வழியா முடிவு கட்டணும். இல்ல நாமே மன்னிச்சு மறக்கணும். எனக்கு சிராக் இல்லாட்டி என்ன, நீங்கதான் இருக்கிங்களே. எனக்கு இங்க வந்ததுலெ ஒரு நிம்மதி பழைய நாட்களையும் நெனச்சிப் பார்க்க முடிஞ்சுதே. உன்னைப் பார்த்ததே சிராகைப் பார்த்த மாதிரிதான். அல்லா உங்க எல்லாரையும் நல்லா ஆரோக் கியமா வைக்கட்டும். ஆயுசோட, சந்தோஷமா இருங்க."

கனீ, தடியை ஊன்றிக்



கொண்டே எழுந்தான். அங் கிருந்து நகர்ந்தவாறே சொன்னான்:

"ரக்கா பயில்வான், நினைவு வைச்சுக்கொ."

ரக்காவின் தொண்டை யிலிருந்து, 'சரி' என்பது போன்ற ஓர் ஒலியெழுந்தது. மேல்துண்டை இரு கைகளுக்கிடையே ஏந்திய வாறே, அவன் கைகள் குவிந்தன. கனீ அந்த சந்தின் இருப்பை, இழப்பு நிறைந்து வரும் இரு கண்களால் பருகியவாறே, மெதுவாக வெளியேறினான்.

மேலே ஜன்னல்களில் கிசுகிசுப்பு சிறிது நேரம் நீடித்தது. மனோரீ சந்தைத் தாண்டிய வுடன், கனீயிடம் எல்லாத்தையும் சொல்லிடுவான்... கனீக்கு எதிரில் எப்படி ரக்காவின் முகம் சுண்டி, நா வரண்டு போச்சு பாத்தியா?... இவன் இப்ப எந்த மூஞ்சியெ வைச்சிண்டு பசு மாட்டைக் கட்ட இடம் கொடுக்க மாட் டேன்னு சொல்லுவான்? பாவம் ஜுபைதா, எவ்வளவு நல்லவ... யார் கிட்டெயும் குரல் ஓங்கிப் பேசினதெ கிடையாது. ரக்கா முரடன், அவனுக்கு வீடாவது, காடாவது... அம்மா, தங்கைன்னு தெரியாத, மரியாதை கெட்ட காட்டானாச்சே.

சிறிது நேரத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்தனர். சிறுவர்கள் விட்டுப் போன கில்லி ஆட்டத்தைத் தொடர்ந்தனர். பன்னிரண்டு பதிமூன்று வயதுள்ள இரு பெண்கள் ஏதோ பேச்சின் பெயரில், உரக்க வாய்ச் சண்டை போட்டுக் கொள்ள ஆரம்பித் தனர்.

மாலை இருள் கவிந்து வெகு நேரம் வரை, ரக்கா எதையோ வெறித்தவாறு, ஹுக்கா புகைத்தபடி இருந்தான். அந்தப் பக்கம் சென்ற அநேகம் பேர் அவனிடம் இதையே கேட்டனர்.

"ரக்கா, கேள்விப்பட்டேன்,



படிப்பகம்

www.padippakam.com

கனி ..ாகிஸ்தான்லேர்ந்து இன்னிக்கு வந்திருந்தானாம்?"


"ஆமா, வந்திருந்தான்.'"ரக்கா ஒவ்வொரு முறையும் இதே பதிலைச் சொன்னான்.

"அப்புறம்?"

"அப்புறம், ஒன்னுமில்லெ. திரும்பிப் போயிட்டான்."

இரவு நீண்டதும், பயில் வான் வழக்கம் போல, சந்திற்கு வெளியே இடது பக்கம் கடையின் பலகை மேல் வந்து அமர்ந்தான். தினமும் போவோர், வருவோரில் தெரிந்தவரைக் குரல் கொடுத்து நிறுத்தி, சில வியாபார உத்திகள், ஆரோக்கியத்திற்கான வழிகள் என்று பேச்சுக் கொடுப்பான். ஆனால் இன்று அவன் லச்சாவிற்கு வைஷ்ணவ தேவி யாத்திரை விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தான், அதுவும் பதினைந்து வருடங்களுக்கு முன்னே போனது! லச்சாவை விடை கொடுத்து அனுப்பி விட்டு, சந்தினுள் வந்தவன் அந்த இடிபாட்டுக் குவியலின் அருகே, லோகூ பண்டிட்டின் எருமையைக் கண்டு, அன்றாட பழக்கத்தின் பேரில் அதைத் தள்ளி விரட்டலானான். தத்... தத்.. தத்தூ.. தத்.

எருமையை அங்கிருந்து துரத்தியடித்து விட்டு, ரக்கா ஓய்வாக அந்த இடிபாடுச் சட்டத்தின் மேல் வந்தமர்ந்தான். சந்து அப்போது சந்தடியற்று நிசப்தமாக இருந்தது. முனிசிபல் விளக்கு ஏதுமில்லாததால், மாலை நேரத்திலிருந்தே இருட்டு வழிந்து கொண்டிருந்தது. அந்தக் குவியலுக்கடியில் சாக்கடை நீர் மெல்லிய சலசலப்புடன் ஓடிக் கொண்டிருந்தது. நிலவிய நிசப்தத்தையும் மீறி, இரவோடு என்றுமே சொந்தம் கொண்டாடும் சில சப்தங்கள் அந்த மண்ணிலிருந்து வந்து கொண்டிருந்தன. ச்யு... ச்யு... ச்யு.. சிக்... சிக்.. சிக்... சிர்ர்ர்_ இர்ர்ரு.. ரீ_ ரீ_ ரீ_ சிர்ர்ர்ரு.



வழி தவறிய காக்கையோ என்னவோ தெரியவில்லை. அந்தக் கட்டையின் மீது வந்து அமர்ந்தது. அந்தச் சந்தடியில், கட்டையின் மேலிருந்த உளுத்த தூள் அங்குமிங்கும் சிதறியது. அதுதான் தருணமென்று, ஒரு மூலையில் படுத்திருந்த நாய் எழுந்து வள் வள்ளென்று குரைக்க ஆரம்பித்தது. சிறிது பயந்து ஒடுங்கி அமர்ந்திருந்த காகம், சற்று பொறுத்து கிணற்றங் கரையோரம் இருந்த அரச மரத்தில் சரணடைந்தது. நாய் முன்னே வந்து பயில்வானை நோக்கி நின்றவாறே மீண்டும் குரைக்க ஆரம்பித்தது. பயில் வானும் குரல் எழுப்பி அதை ஓட்ட முயற்சித்தான். துர்ர்.. துர்ர்... துர்ர்ரே... துர்ர்ரே.

நாய்'இன்னும் அருகே வந்து குரைக்க ஆரம்பித்தது... வௌ.... வௌ.. வௌ.. வவ்_ வவ்.. வௌ....

ஹட்... ஹட், துர்ர்.. துர்ர்... துர்ர்ரே... துரே

வௌ... வௌ... வவ்... வவ்... வௌ.

ரக்கா ஒரு மண்ணுருண்டையை எடுத்து நாயை நோக்கி வீசினான். நாய் கொஞ்சம் பின் வாங்கியதே தவிர குரைப்பதை நிறுத்தவில்லை. நாயோடு நாயாக முகம் சேர்க்காத குறையாக, அவன் அதன் தாய்க் குலத்தை விளித்து, ஒரு பாட்டம் ஆபாசமாக வசை பாடிவிட்டு, அங்கிருந்து எழுந்து நகர்ந்து சென்று கிணற்றுக் கல்லின் மீது படுத்துக் கொண்டான்.

ரக்கா நகர்ந்ததுமே, நாய் நடுத் தெருவுக்கு வந்து நின்று, கிண்ற்றை நோக்கிக் குரைக்க ஆரம்பித்தது. வெகு நேரம் குரைத்தபின், சந்தினுள் எந்தப் பிராணியின் அசைவோ, நடமாட்டமோ இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு, அந்த நாய் காதுகளை ஒரு முறை சிலிர்த்துக் கொண்டவாறே, இடிபாட்டுக் குவியலருகே வந்து மூலையில் அமர்ந்தது.

அமர்ந்து வெகு நேரம் வரை, தாழ்ந்த தொனியில் அதன் ஊளை அழு குரலாய்க் கேவலுடன் கேட்டுக் கொண்டேயிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# கடன்

அ. முத்துலிங்கம்

சீனவெடி வெடிக்குமுன் காதைப் பொத்திக் கொள்ளும் சிறுவன் போல இவருக்கும் தற்காப்பு எச்சரிக்கை அதிகம். அதிகாலையிலேயே எழுந்து தயாராகி விட்டார். அவருடைய மகன் வரைந்து கொடுத்த படம் பையிலே இருந்தது. முதல் நாள் வந்து ஒத்திகை பார்த்துக் கொண்டபடி பத்து நிமிடம் முன்பாகவே வந்து காத்துக் கிடந்தார்.

அங்கே இன்னும் பலரும் இருந்தார்கள். வரவேற்பு பெண் முகத்திலே புன்னகையை ஒட்டி வைத்திருந்தாள், ஸ்டிக்கர் பொட்டு போல. அவளுடைய வெண் தோள்கள் முன்னறிவித்தல் இல்லாமல் திடீரென்று கழுத்தின் கீழே ஆரம்பமாயின. மெல்லிய கறுப்பு காலுறை அணிந்திருந்தாள். இவர் வணக்கம் சொன்னபோது சாட்டிலைட் தொலைபேசிபோல அவளிடமிருந்து தாமதமாகவே பதில் வந்தது.

இரண்டு பேரை இப்போது உள்ளே அழைத்து விட்டார்கள். இவர் உள்ளங் கைகளை அடிக்கடி துடைத்தபடி காத்திருந்தார்.

இவருக்குத் தெரியாமல் ஒரு சதி நடந்ததை இவர் அறியவில்லை. இந்தச்சதி நேற்றிரவு நடந்தது. அதில் அமெரிக்க அரசாங்கத்துக்கும் ஒரு கை இருந்தது. ஆனால் இவருக்கு அது தெரியாது. பொறுமையாக காத்திருந்தார்.

காத்திருப்பது என்பது பரம சுகமானது. இவர் நன்றாகக் காத்திருப்பார். அபூர்வமான பொறுமைசாலி. தயிர் கட்டியாகும்வரை காத்திருப்பதுபோன்ற பொறுமைசாலி.

அமெரிக்காவிற்கு முதல் முறை வருகிறவர்கள் பலவிதமான சம்பவங்களையும் சந்திக்க தயாராக இருக்க வேண்டும். இதில் முக்கியமானது வெற்றி என்று சொல்வார்கள். இவருடைய மகன் சாந்தன் இங்கே வந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன. அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமாக இருந்தாலும் மற்றவர்கள்போல அவன் தலைகால் தெரியாமல் நடக்கவில்லை. மிகவும் அடக்கமான எளிய வாழ்க்கை. இருப்பிட வசதிகளிலிருந்து சாப்பாடு வரைக்கும் இவரை மிக்க கவனத்துடன் பார்த்தான்.

இந்த வயதில் இவருக்கு பெரிய உபத்திரவம் இவருடைய நாக்குத்தான். வயோதிகம் வந்ததும் கண் மங்கலாகிறது; காதும் மந்தமாகிறது. உடல் சுகம் தணிந்து விடுகிறது. மணக்கும் உணர்வும் மடிந்துவிடுகிறது. ஆனால் இந்த நாவிருக்கிறதே இதன் ஆசை மட்டும் அணைவதில்லை. பிறந்ததிலிருந்து இது ருசி தேடிப் பறக்கின்றது. வயோதிகம் நெருங்க நெருங்க இதன் வேகமும் அதிகரிக்கிறது.

திரும்பச் சூடாக்கிய தோசை போல ருசியெல்லாம் கெட்டுவிட்டது. நாக்கின் சுவை மொட்டுகள் கூராகிவிட்டன. தயிர் பச்சடி கேட்கிறது. ஊறுகாய் தேடி வாய் ஊறுகிறது. காப்பியின் ருசி கூட இங்கே இவருக்கு மட்டமாகிவிட்டது. இந்த நாவை அடக்குவது எவ்வளவு கஷ்டமான காரியம்.

சாமர்த்தியச் சடங்கும், முட்டைக் கோப்பியும் இப்பொழுது உலக முழுவதும் பிரபலமாகிவிட்டன. இந்த முட்டைக் கோப்பிக்கு இங்கே என்ன பாடுபட வேண்டியிருக்கிறது. தங்கம்மா இருந்திருந்தால் எப்படியெல்லாம் முட்டைக் கோப்பி போடுவாள். தங்க நிறத்தில் அதிகாலையில் கொண்டு வருவாள். இந்த முப்பது வருடங்களில் எத்தனை ஆயிரம் முட்டைகளை அடித்து அடித்து ஓய்ந்திருப்பாள்.

நேற்றிரவு முழுக்க நித்திரை இல்லை. தங்கம்மாவை மறந்து கொண்டிருப்பதிலேயே நேரம் கழிந்தது. இந்த மறதியும் ஒரு நோய்தான். அந்திமத்தின் இன்னொரு கொடுமை இது. வரவர மோசமாகிக் கொண்டே வந்தது. தண்ணீரை எடுப்பார், ஆனால் அதை குடித்தது ஞாபகத்தில் இராது. மருந்து சாப்பிட்டாரா இல்லையா என்பது அடிக்கடி மறந்துபோகும். இவருடைய மூளையிலேயே ஓரவஞ்சகம் நடக்கிறது. தலைவிரிந்த கோலத்தில், வீதியோரத்தில் கிடத்திவிட்டு வந்த மனைவியின் ஞாபகம் மட்டும் அடிக்கடி வருகிறது. இந்த விசித்திரத்தை என்னவென்பது!

இந்த மறதியால் ஒரு முறை மிக மோசமான தவறு வேறு நேர்ந்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அவசியமான சில பொருட்கள் வாங்க ஒருநாள் சூப்பர் மார்க்கட் போனார். ஒருவித அவசரமும் காட்டாமல் சாமான்களை வண்டியிலே நிரப்பி தள்ளிக்கொண்டு கீழும் மேலுமாக உட்பாதைகளில் அலைவது இவருக்குப் பிடிக்கும். அன்று இரண்டு பள்ளி மாணவிகள் இவருக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தார்கள். மிஞ்சிப் போனால் பதின்மூன்று பதினாலு வயதுதான் இருக்கும். இறுக்கமான வெள்ளை டி சர்ட்டும், ஜீன்ஸும் அணிந்திருந்தார்கள். ஒருத்திக்கு சாம்பல் முடி; மற்றவளுக்கு சிவப்பு தலை. சுத்தமாக வைரஸ் நீக்கப்பட்ட மென்தகடுபோல தகதகவென்று இருந்தார்கள். இருவரும் பிணைந்தபடி அசைந்தார்கள்.

ஒருத்தி சொன்னாள்: 'நீ அந்தப் பையனை விட்டுவிடு. நான் உனக்கும் ஒரு லொரிக்காரனை சிநேகம் செய்து வைப்பேன். மணமானவன். தொட்டதுக்கெல்லாம் உன்னுடன் சண்டை போட மாட்டான்'.


மற்றவள், மிகவும் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு, 'கொஞ்சம் பொறு, என் அம்மாவைக் கேட்டு சொல்கிறேன்' என்றாள். பிறகு இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஒருவரை ஒருவர் புஜங்களால் இடித்தார்கள். தள்ளுவண்டி இரண்டு பக்கமும் தள்ளாடியது.

அவர்களுடைய மெய்மறந்த நிலையை கெடுப்பதுபோல இவர் அவர்களை தாண்டிப்போனார். இவருடைய தோள்பட்டை சிவப்புத் தலை அழகியின் கூந்தல் கொத்தில் உரசிவிட்டது. அவள் அடங்கிய குரலில் old fool என்றாள். பிறகு மறுபடியும் சிரிப்பு.

இவருடைய மனதில் இது தைத்தது. ஓர் இளைஞன் இப்படி இடித்திருந்தால் முட்டாள் என்று கூறியிருப்பாளா? நீண்ட வரிசையைத் தேடி நின்றார்; பிறகு வழி நெடுக இதே சிந்தனை. வீடு வந்து சேர்ந்தபோதுதான் அவள் கூறியது எவ்வளவு சரியானது என்று அவருக்கு உறைத்தது.

அது தானாகவே பூட்டிக் கொள்ளும் கதவு. திறப்பை மறந்து உள்ளே விட்டிருந்தார். மகனுடைய தொலைபேசி எண் ஞாபகத்தில் இல்லை. வேறு யாரை உதவிக்கு அழைக்கலாம் என்ற அறிவும் கிடையாது. வசந்தத்தை முற்றிலும் பிரிய மனமில்லாத குளிர் காற்று. சூப்பர் மார்க்கெட் சாமான்களை அடைகாத்தபடி வாசல் படியிலே கிடந்தார். சாந்தன் வரும்போது ஏறக்குறைய விறைப்பு நிலைதான்.

சூரியனே இல்லாத நாட்டின் திசை அறிவது எப்படி? இங்கே இருக்கும் சாலைகள் மிக நேராகவும், நேர்த்தியாகவும் இருக்கும். ஒன்றையொன்று செங்குத்தாக குறுக்கறுத்து ஓடும். அதனால் அவைகளுடைய நேர்மையற்ற தன்மை மறைக்கப்பட்டு விடுகிறது. அநேக நாட்களில் இவர் அடையும் இடமும், போக விரும்பிய இடமும் வேறு வேறாக இருக்கும்.



கர்ப்ப காலம் என்றால் எல்லா நாட்டிலும் ஒன்றுதான். பலவிதமான உபாதைகளும் தவறாமல் வந்து சேர்ந்துவிடும். வழக்கமான தலை சுத்தல், கால் வீக்கம், மூட்டுவலி என்று இவர் தேகம் மாறிக்கொண்டே வந்தது. இந்த அறிகுறிகள் எல்லாம் இவர் மருமகளுக்கும் இருந்தன.

பிரசவ காலத்திற்கு முன்பே ஒரு சின்ன அறையை தயார் செய்வதில் மகனும், மருமகளும் முனைப்பாக இருந்தார்கள். இட நெருக்கடி கூடுகிறது. சில ஜாடைகளில் இவருடைய மனைவியைப் போலவே இருந்தாள் கிருத்திகா. மலேசியப் பெண். சாந்தனை அவள் மணமுடித்தபோது ஊரில் போர் விளைவுகள் உச்சநிலையில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தன. இவரால் வரமுடிய வில்லை. புகைப்படத்தில் பார்த்தது போலவே இருக்கிறாள். துள்ளும் கண்கள்.

சில வேளைகளில் மூளையில் ஏற்படும் குறுக்குத் தொடர்புகளால் 'தங்கம்' என்று அவளை அழைத்துவிடுவார். அவளும் ஒருதினுசாக கண்களை சாய்த்து சிரித்துக் கொண்டே 'என்ன மாமா?' என்பாள். தங்கத்தின் கண்களும் அப்படித்தான் சாயும்.

அவளைத்தான் வீதி ஓரத்தில் விட்டுவிட்டு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்தார். புதைக்கவும் இல்லை; எரிக்கவும் இல்லை. இன்றுவரை அது சாந்தனுக்குத் தெரியாது.

நிலவறையில் இவருக்கு நிறைய வசதிகள். கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர் காலத்தில் வெதுவெதுப்பாகவும் இருக்கும். ஆனால் இரவு நேரங்களில் யாரோ இவரை அடிக்கடி அமுக்குவதுபோல இருக்கும். இது தவிர இன்னுமொன்றும் நடந்துவிடுகிறது. சில வேளைகளில்,மிகச் சில வேளைகளில், இவர் அறியாமல் இவருடைய உடுப்பு நனைந்துவிடுகிறது.

சிறு சங்கிலியால் கால்கள் பிணைக்கப்பட்ட மறியல்காரர் போல இவர் கால்களை நகர்த்தி நகர்த்தி தன் வேலைகளை செய்து கொண்டிருப்பார். அது சனிக்கிழமை காலையாக இருக்கும். கிருத்திகா சலவை வேலைகள் பார்க்க நிலவறைக்கு வருவாள். 'இதென்ன மாமா மணம்?' என்று குழந்தைத்தனமாக மூக்கைச் சுருக்குவாள். இவர் படும் கஷ்டத்திலும் பார்க்க இதை மறைக்கும் காரியம் இவருக்கு பெரிசாக இருந்தது.

இவருடைய மகன் வேலை பார்க்கும் அலுவலகம் வெகு தூரத்தில் இருந்தது. அவன் அதிகாலையிலேயே போய் விடுவான். அடுத்து மருமகள் செல்வாள்.



அநேகமாக இவர் எழும்பி மேலே வரும்போது கிருத்திகா பூசிய செண்டின் நறுமணந்தான் அறையில் நிறைந்திருக்கும். அவர்கள் இருக்க மாட்டார்கள். காலை ஆகாரத்தை தானாகவே செய்து தனிமையில் உண்ண இவர் பழகிக் கொண்டார்.

ஆனால் இவர் ஆவலுடன் எதிர்பார்ப்பது இரவு நேரங்களைத்தான். மகனுடனும், கிருத்திகாவுடனும் சேர்ந்து உண்பது இவருக்கு பரம சந்தோஷம். சாந்தன் வரும்போதே 'அப்பா' என்று அழைத்தபடிதான் வருவான். உணவு மேசையில், அன்று அலுவலகத்தில் நடந்த அத்தனை சம்பவங்களையும் ஜோடனையாகவும், விஸ்தாரமாகவும் வர்ணிப்பான். அவன் எந்த விஷயத்தை சொன்னாலும் அதில் ஒரு நுணுக்கமான நகைச்சுவை இழை இருக்கும். சிரிப்புகளுக்கிடையில் இருவருக்கும் கனிவுடன் பரிமாறுவார்கள். இவர் மிகவும் எதிர்பார்க்கும்பொழுது அது.

ஆனால் அநேகமாக அவர்கள் வரமாட்டார்கள். இரவு ஒன்பது மணி தவறினால் இவரை சாப்பிட்டுவிடும்படி மகன் கூறியிருந்தான். இப்படியாக வாரத்தில் பல தடவைகள் இவர் தனிமையில் சாப்பிட்டு படுக்கச் சென்றுவிடுவார். சிலவேளைகளில் இரண்டு மூன்று நாட்கள்கூட அவர்களைக் காணாமலே இவர் கழித்ததுமுண்டு.

உணவு விஷயங்களில் கிருத்திகா மிகவும் புத்திசாலி. இவருடைய உணவு சிறு பெட்டிகளில் அடைத்து ஆழ்குளிரில் உறைந்து போய் இருக்கும். அதன் மூடிகளில் திங்கள், செவ்வாய் என்று கிழமை நாட்கள் மணிமணியான கையெழுத்தில் இருக்கும். அந்த நாளைக்கு அந்த பெட்டியை எடுத்து Micro Wave ல் போட்டால் இவருடைய சாப்பாடு தயார்.

இந்தப் பெட்டிகள்தான் ஒருமுறை மிகவும் சங்கடமான சம்பவத்தை ஏற்படுத்தியது.

சாந்தனுடைய வீட்டுக்கு அண்மையில் நெடுஞ்சாலையும், சோலையுமாக மாறிமாறி இருக்கும். காலநிலை அனுமதிக்கும் வேளைகளில், மனிதப்பாதைகள் வளைந்து செல்லும் இந்தப் பெரிய சோலைக்குள் சென்று கிளை இல்லாமல் நேராக வளர்ந்த பிரம்மாண்டமான ஓக் மரங்களையும், புசுபுசுவென்று ரோமம் கொண்ட அணில்களையும் பார்த்துக் கொண்டிருப்பார்.

திருப்பித் தாக்கத் தெரியாத இந்த அணில்கள் மிக வேகமாக செயல்படும். ஓடியோடி ஓக்மர



படிப்பகம்

www.padippakam.com

விதைகளை அவைகளின் சிற்றறிவுக்குத் தோன்றிய இடங்களில் சாமர்த்தியமாக ஒளித்து வைக்கும். இரண்டாயிரம் விதைகளை மாலை வருவதற்கிடையில் சேகரித்துவிட வேண்டும் என்று அவைகளின் சூப்பர் வைஸர் கட்டளையிட்டதுபோல அவதியுடன் வேலை செய்யும். குளிர் காலம் வரும்போது இவற்றை மீண்டும் கண்டுபிடித்துவிடலாம் என்ற அசையாத நம்பிக்கை இருந்தது. இந்தப் பிரபஞ்சத்தில் பிரமித்தல்களுக்கு எல்லையே இல்லை. ஒரு சிறு குழந்தையின் வியப்புடன் இயற்கையில் கொஞ்சம் தனக்காக எடுத்துக்கொள்வார். சொல்ல முடியாத மன நிம்மதி அப்போது பரவும்.

இங்குதான் ஒருநாள் இவர் ஆறுமுகத்தை சந்தித்தார். அவருடன் ஒரு சிறுமி இரும்புக் கூட்டுப் பற்கள் பிரகாசிக்க நின்றுகொண்டிருந்தாள். அறிமுகத்தின் பின் இவருடைய ஊர்க்காரர் என்று தெரிந்தது. இவரைப் போலவே அவரும் மகனுடன் வந்து நாலு வருடங்களாக இருக்கிறார். இவருக்கு இருக்கும் பலவித உபாதைகள் அவருக்கும் இருந்தன. இருவரும் தங்கள் பிரச்சனைகளை ஒருவித உவப்போடு பரிமாறிக் கொண்டனர்.

அப்போதுதான் இவர் ஒரு விஷயத்தை கண்டுபிடித்தார்.

பச்சை அட்டையின் மகிமை. அதில் ஓர் அங்கீகாரம் இருந்தது; 'உதவிப் பணம் கிடைக்கும். முகம் மழிக்கக்கூட மற்றவர் தயவை எதிர்பார்க்கத் தேவையில்லை. மருத்துவச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். வயது அறுபத்தியைந்தை தாண்டிவிட்டால் இன்னும் பல சலுகைகள்.'

ஆறுமுகம் தனியாகக் குடிபோவதற்கு தீர்மானித்திருந்தார். இவரும் வந்தால் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து கொள்ளலாம் என்றார். முக்கியமாக தனிமை இராது. தனக்குத்தானே பேசவேண்டிய அவசியமில்லை. தங்கள் தங்கள் உபாதைகளை சுதந்திரமாக அனுபவிக்கலாம்; சிறுமைகள் இல்லை. அப்படித்தான் தேசம் தொலைத்து வந்த இரண்டு விருத்தாப்பியர்களும் கையடித்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

சொந்த நாட்டிலே இவர் பெரிய அதிகாரியாக இருந்தவர். உணவு அலுவலகத்தில் முக்கிய

தோட்டத்தில் தண்ணீர் விசிறிகள் அந்த நேரத்தில் உயிர்த்து அந்த நேரத்துக்கு தணிந்து விடுவதுபோல நிலவறை விளக்குகளும் தாமாகவே ஒளிர்ந்து தாமாகவே அணைந்தும் போயின

மான பொறுப்பு. அங்கே ஒருவருடைய தகுதி வரவேற்பறையில் காத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கையிலேதான் நிர்ணயமாகும். இவரைப் பார்ப்பதற்கு எப்பவும் ஐந்து, ஆறு பேர்கள் காத்திருப்பார்கள்.

ஆட்களை காத்திருக்க வைத்தே பழக்கப்பட்டவர் இங்கேயென்றால் காத்திருப்பதற்காக ஆலாய்ப்பறந்தார். எங்கே வந்த காரியம் சீக்கிரம் முடிந்துவிடுமோ என்று பயந்தபடியே இருந்தார். சூப்பர் மார்க்கட் போனால் மிக நீளமான வரிசையைத் தெரிவு செய்து அங்கே போய் நின்றுகொள்வார். மருந்து வாங்கச் சென்றால் பலவிதமான யுக்திகள் தயார்செய்து இரண்டு மணி நேரமாவது தாமதமாக்கிவிடுவார். இப்படி, இடத்திற்குத் தக்கபடி தந்திரங்களை மாற்றி நேரத்தை நிரப்புவதில் குறியாய் இருந்தார்.

இவருடைய மகன் சொல்கிறான்: இவர் அடிக்கடி தனக்குள் கதைத்துக் கொள்கிறாராம். சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்கிறார் என்று குற்றம் வேறு சாட்டுகிறான். இவர் டிவி பார்த்துக் கொண்டிருக்கும் போதே கிருத்திகா வந்து சத்தத்தை குறைத்துவிட்டு போய்விடுகிறாள். பக்கத்து வீட்டாரிடம் பேச்சு வாங்காமல் இருக்கவேண்டும் என்ற ஆர்வம்தான் காரணம். வாயசைக்கும் டி.வி.யை அணைத்துவிட்டு வந்து படுத்துவிடுவார்.

சிறுகச் சிறுக இவர் செயல்பாடுகள் தளர்ந்தன. பாரம் தூக்குவதற்கு ஆயத்தப் படுத்துவது போல மிகச் சாதாரண காரியத்துக்கும் பலத்தை சேகரிக்க வேண்டி வந்தது. சட்டையிலே பொத்தான்கள் போடுவதற்கு மிகவும் சிரமப்பட்டார். சப்பாத்திலே நாடா கட்டுவதென்றால் சொல்லவே வேண்டாம். கையெழுத்துப் போடுவதற்கு சரியாக ஐந்து நிமிடங்கள் தேவைப்பட்டன.

தேகசாஸ்திர நிபுணர் ஆலோசனைப்படி இவருக்காக செய்த பிரத்தியேகக் கட்டில் ஒன்று இருந்தது. மிருதுவான, ஆனால் வளைந்து கொடுக்காமல் உறுதியாக இருக்கும் படுக்கை. தோட்டத்தில் தண்ணீர் விசிறிகள் அந்த நேரத்தில் உயிர்த்து அந்த நேரத்துக்கு தணிந்து விடுவது போல நிலவறை விளக்குகளும் தாமாகவே ஒளிர்ந்து தாமாகவே அணைந்தும் போயின. இரவு நேரங்களில் தொலைபேசியின்



படிப்பகம்

www.padippakam.com

ஒலிகள் அமுக்கப்பட்டன. காசு; கொடுத்து வாங்கிய சில்லிடாத் தண்ணீர் இவருக்காக பக்கத்தில் காத்திருந்தது. இப்படி எல்லா சௌகரியங்களையும் மகன் செய்திருந்தான்.

ஆனால் இரவு நேரங்களில் திடீரென்று விழிப்பு ஏற்படும் போது நாலு ஒடுங்கிய சுவர்கள் பதுங்கு குழிச் சுவர்கள் போல நெருங்கி வந்தன. பேசுவதற்கு ஒரு துணை இல்லை. அப்பொழுது தான் இவர் தனக்குள் பேச ஆரம்பித்தார். உண்மையிலே இவர் தங்கம்மாவுடன்தான் பேசினார்.

அங்கே சண்டைதான் நிரந்தரம்; இடைக்கிடை சமா தானம் மூளும். இவருடைய வயதுக்காரர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். வீட்டுநாய், மாதாகோவில் மணி, ஒற்றைப் பனைமரம் எல்லாம் தாண்டி இவர் உயிர் வாழ்ந்தார்.

பிளாஸ்டிக் வாளிகள் பாவிப்பதற்கு சட்டம் அனுமதித் தது. ஆனால் பிடிகள் இரும்பில் இருக்கக் கூடாது. தங்கம்மா கயிற்றினால் பிடி செய்து போட் டிருந்தாள். விமானங்களின் இரைச்சல் மேலே. தண்ணீர் கொண்டு வரும்போதுதான் விழுந் தாள். சிவப்புச்சேலை உடுத்தி யிருந்தாள் என்று நினைத்தார். உண்மையில் வெள்ளைச் சேலை தான் இப்படி சிவப்பாக மாறி யிருந்தது.

எல்லோரும் ஓடும்போது இவர்களும் ஓடினார்கள். ஒரு மூட்டைகூட கட்ட நேர மில்லாமல் ஓடினார்கள். கால் மைல் தூரம்கூட கடக்கவில்லை. அவளுடைய கால் இழுத்தது; சரிந்துவிட்டாள். நீண்ட தூரம் கொண்டுவந்த மூட்டைகளை சிலர் போட்டுவிட்டு ஓடினார்கள். அதை பின்னால் வந்து சிலர் தூக்கினார்கள். பிறகு அவர்களும் போட்டுவிட்டு ஓடினார்கள்.


தங்கம்மாவை தூக்குவதற்கு ஒருவரும் வரவில்லை. வீதியிலே கிடந்த அவளைத் தாண்டி ஓடிக் கொண்டேயிருந்தார்கள். உடம்பு குளிர்ந்து வெகு நேரமாகியும் செய்வதறியாது கூட இருந்தார். பிறகு இவரும் ஓடினார். திரும்பிப் பார்த்தபோது ஒரு சிறுவன் அவளுடைய செருப்புகளை திருடிக் கொண்டிருந்தான்.

இங்கேயும் ஒரு திருட்டு நடந்தது. இந்த பச்சை அட்டை விண்ணப்பம் பூர்த்தியாகும் தருணத்தில் இது சம்பவித்தது. இன்னும் சில விநாடிகளில் இவருக்கு அது தெரியவரும்.

இதற்காக இவர் மிகவும் கடுமையாக உழைத்தார். பல பாரங்களை நடுங்கியபடி நிரப் பினார். எவ்வளவோ காலம் இவரைக் காத்திருக்க வைத்து கடைசியில் இப்பொழுதுதான் நேர்முக கடிதம் வந்தது. இன்றைய செவ்வியில் தேறிவிட்டால் இன் னும் சில வாரங்களில் இவருக்கு பச்சை அட்டை கிடைத்துவிடும்.

முக்கால் மணி நேரம் கடந்து விட்டது. இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. மெதுவாகப் புன்னகைப் பெண்ணிடம் போனார். அவள் சொன்ன சேதி இவரைத் திடுக்கிடவைத்தது. இத்தனை நேரமும் இவர் கண்ணில் படாத மணிக்கூட்டை சுட்டிக் காட்டினாள். அது 11.30 காட்டியது. இவருடையது 10.30 காட்டியது. இவர் வரும்போதே இவருக்கு குறித்த நேரம் கடந்து விட்டது. இவர் மிகத்தாமதமாக வந்திருப்பதாக அந்தப் பெண் குற்றம் சாட்டினாள். இவரால் நம்பமுடியவில்லை.

அவள் விளக்க முற்பட் டாள். அதை உணரும் சக்தி இவரிடம் இல்லை. தன்மேலேயே கோபம் கோபமாக வந்தது. தன் மகனோ, மருமகளோ இது பற்றி





படிப்பகம்

www.padippakam.com



மூச்சுவிடாதது இன்னும் அதிர்ச்சியாக இருந்தது. எல்லோரும் சேர்ந்து அவரை ஏமாற்றி விட்டார்கள். அதற்கு ஓர் அரசாங்கமும் துணை போனதை அவரால் மன்னிக்க முடியவில்லை.

'இன்று பார்க்க முடியாதா?' என்று பணிவுடன் விசாரித்தார். அதற்கு அவள் கையை விரித்துவிட்டாள். அங்கே காத்திருப்போரை சுட்டிக்காட்டினாள். இவருடைய பேரை இன்னொரு பதிவில் திரும்பவும் கூப்பிடுவதாக உறுதி கூறினாள்.

'அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?'

'விரைவிலேயே கூப்பிடுவோம்; ஆறுமாதத்திற்குள் கூப்பிடுவோம்' என்றாள்.

திரும்பும்போது நடந்து போவது என்று முடிவு செய்தார். வரைபடத்தை எடுத்து வைத்தார். வடக்கு பக்கமாக நாலு கட்டடங்கள்; பிறகு கிழக்குமுகமாக மூன்று; மறுபடியும் வடக்கு... இப்படியாக மனனம் பண்ணினார்.

இது ஏற்கனவே ஆறுமுகம் சொன்னதுதான். அமெரிக்காவில் பனிக்காலம் தொடங்கும்போது அக்டோபரில் வரும் நாலாவது ஞாயிற்றுக்கிழமை, நேரத்தை ஒரு மணித்தியாலம் பின்னுக்குத் தள்ளி வைத்து விடுவார்கள். மறுபடியும் ஏப்ரல் மாதத்தில் வரும் முதல் ஞாயிறு அதிகாலை இரண்டு மணிக்கு ஒரு மணித்தியாலம் முன்னுக்குத் தள்ளி வைத்து விடுவார்கள். இதுக்கு அது சரியாகிவிடும்.

நண்பர் சொன்னபோது இவர் அவ்வளவு சுவாரஸ்யம் காட்டவில்லை. இது ஏப்ரல் மாதத்து முதலாவது திங்கள் கிழமை. கடந்த இரவு இவரைக் கேட்காமல் இவரிடமிருந்து ஒரு மணி நேரம் திருடிவிட்டார்கள். ஒரு முழு நாடே தனக்கு எதிராக சதிசெய்து தன்னை ஏமாற்றி விட்டதாக இவருக்குப் பட்டது.

நேற்றிரவு இவர் நித்திரையாக இருந்தபோது அமெரிக்காவில் உள்ள அத்தனை அணுசக்தி மணிக்கூடுகளும் தங்கள் மணிகளை தாங்களாகவே ஒரு மணித்தியாலம் முன்னுக்கு தள்ளி வைத்துக்கொண்டன. லட்சக்கணக்கான கம்பியூட்டர்களில் தகவல்கள் பறந்தன. இன்னும் பல லட்சணக்கான கம்பியூட்டர்கள் தங்கள் மணிகளைச் சரிபார்த்துக்கொண்டன; இன்னும் சில 'ஒரு மணி முன்னே தள்ளி வைக்கவும்' என்று செய்திகள் பரப்பின. வானொலிகளும், தொலைக்காட்சிகளும் இரவிரவாக தொடர்ந்து இதையே செய்தன. ஆனால் இவர் அந்த செய்திகளை அறியவில்லை.

அமெரிக்கா பெரிய கடனாளியாகிவிட்டது. இவரிடம் இருந்து எடுத்த ஒரு மணித்தியாலத்தை அது திருப்பிக் கொடுக்கவே இல்லை. அதற்கு சந்தர்ப்பமும் வரவில்லை. ஏனென்றால், அடுத்த அக்டோபர் மாதம் நாலாவது ஞாயிற்றுக்கிழமை வருமுன்னரேயே இவர் காலமாகிவிட்டார். ஒரு குளிர்காலம் ஆரம்பமாவதற்கு முன்னரான பொழுதில் நிலவறையில் இவருடைய உடல் விறைத்த நிலையில் காணப்பட்டது. இரண்டு நாள் கழித்து இவர் மகன் அந்த சடலத்தைக் கண்டான். குளிர் பெட்டியில் 'திங்கள்', 'செவ்வாய்' என்று குறித்த அட்சரங்களில் எழுதிய சிறு பெட்டிகள் தொடாமல் கிடந்ததுதான் காரணம். ●



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

## டிஎஸ். சொக்கலிங்கம்: அரசியல் / இதழியல்

ஆசிரியர் : பா. மதிவாணன்

அருளரசு வெளியீட்டகம். 367, மேல வீதி, தஞ்சாவூர். 613 009. ரூ. 25/—

வெங்கட் சாமிநாதன்

டி.எஸ். சொக்கலிங்கம் 67 வருட காலம், 1899லிருந்து 1966 வரை இந்தியாவின், தமிழ் நாட்டின், வரலாற்று சிறப்புமிக்க ஒரு காலகட்டத்தில், முதன்மை யான பத்திரிகையாளராக, அதற்கு அடுத்த நிலையில் அரசியல் வாதியாக வாழ்ந்தவர். இக்கால கட்டத்தில், இவ்வாறான வாழ்க்கை அமைந்த காரணத் தாலேயே, அவரது வாழ்க்கை, நாட்டின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாயிற்று. அதுபோலவே, தமிழ் பத்திரிகை வரலாறும் அவரைத் தொடாது எழுதப்பட இயலாது. தமிழ் இலக்கியத்தின் ஓர் சிறிய மறுமலர்ச்சிக் கட்டத்தில் (முப்பதுகளின் மணிக்கொடி காலத்தில்) அவர் ஓர் உந்து சக்தியாகவும் இருந்திருக்கிறார்.

இத்தகைய மனிதரின் வர வாறு எழுதப்படாது இருப்பது பற்றி தமிழ்நாடு ஆச்சரியப் படத் தேவை இல்லை. கடந்த 50 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சரித்திரத்தையும், சமூகத்தையும் மாற்றியமைத்த சக்திகள் என ராஜாஜி, ஈ.வெ.ரா., காமராஜ், அண்ணாதுரை, மு. கருணாநிதி இவர்களது வாழ்க்கை வரலாறும் கட்சி, ஜாதி, மனச் சாய்வுகள், வெறுப்புகள் விருப்புகள், போற்றல் தூற்றல் இன்றி பதிவாகவில்லை. பதிவாகும், பதிவாகக்கூடும் என்று எதிர்பார்க்கும் நிலையில் தமிழில் சமூகம் இல்லை. அறிவாளிகள், கல்வியாளர்கள் ஆராய்ச்சியாளர் கள், வரலாற்று ஆசிரியர் சமூகங் கள், கட்சி சேவகம் செய்கின்றனர் அல்லது பயந்து வாய்மூடி மௌனியாக இருக்கின்றனர். இது தமிழ்நாட்டின் அறிவார்த்த ஜீவி தத்திற்கு மானக்கெடு.

மதிவாணன் எழுதியிருக் கிறார். 75 பக்கத்திற்கு. டி.எஸ். சொக்கலிங்கம் பற்றி நிறைய படித்திருக்கிறார். ஆய்வு செய்திருக் கிறார். பட்டங்கள் பெற்றிருக் கிறார். நிறைய தகவல்கள் சேகரித் திருக்கிறார். அத்தகவல்களின் ஒரு சுருங்கிய அட்டவணையாகத் தான் மதிவாணனின் 75 பக்க கை யேட்டைப் பார்க்க முடிகிறது. மதிவாணனுக்கும், அவருக்கு உதவிய அவரது நண்பர்களுக்கும் டி.எஸ். சொக்கலிங்கத்திடம் நிறைந்த மரியாதை உண்டு தான். ஆனாலும் கட்சி சார்புகளும் உண்டு போலும். அது தெளி வாகவே தெரிகிறது.

"அவரிடம் கண்மூடித்தன மான கமயூனிச எதிர்ப்பு அபரி மிதமாகவே இருந்தது" என்று தன் அணிந்துரையில் தடித்த எழுத்துக் களில் எழுதும் தஞ்சை ராமமூர்த்தி யுடன் மதிவாணனுக்கு ஒப்புதல் இருந்திருக்கிறது. சொக்கலிங்கத் தின் எதிர்ப்பில் "கண்மூடித்தனம்" எங்கே என்பதற்கு தடயங்கள் அணிந்துரையிலும் இல்லை புத் தகத்திலும் இல்லை. ஆக, இவ் விருவரின் கம்யூனிஸ சார்புதான் கண்மூடித்தனமானது என்று நினைக்கத் தோன்றும். தொழி லாளருக்கு ஆதரவாளராக, அவர்கள் நிமித்தம் முதலாளிக ளோடு போர் புரிந்தவராக, சோஷலிஸத்தில் நம்பிக்கை கொண்டவராக, ஒரு சித்திரம் புத்தகத்தில் நிறைய இடங்களில் வெளிப்படுகிறது. ஆசிரியரும், அணிந்துரையாளருமே சொல் கின்றனர். ஆகவே, அவரது கம்யூனிஸ எதிர்ப்புக்குக் காரணம் எங்கே என்று ஆராயவேண்டும். அதற்கு அவசியம் இருப்பதாக ஆசிரியரும் அணிந்துரையாளரும் நினைக்கவில்லை.

துணை ஆசிரியர்கள் காரண மாக, கோயங்காவோடு சொக்க லிங்கம் முரண்படுகிறார். சண்டை போடுகிறார். பத்திரிகையை விட்டு விலகுகிறார். பின்னர் ஒரு கட்டத் தில் தமிழ்நாட்டின் சிறந்த பத்திரிகையாளர் இருவரில் கோயங்கா ஒருவர் என்று மதிப்பிடுகிறார் சொக்கலிங்கம். ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடம் சுய மரியாதையைவிட பரமரியா தையே மிகுதி என்று ஒரு சமயம் சொன்ன சொக்கலிங்கம் பின்னர், "அவர்களிடம் தியாகிகளும் உண்டு. அவர்களால் சமூகத்திற்கு நன்மைகளும், தேசியத்திற்கு தீமை களும் ஏற்பட்டுள்ளன" என்று சொல்வார். "எழுத்தாளர்கள் அறிவாளிகள். அவர்கள் சமூகத் தின் மூளை. அவர்கள் எல்லோ ரும் ஒரே அபிப்ராயமுள்ளவர் களாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது... இவர்களது இந்த இறுமாப்பை நான் வர வேற்கிறேன்" என்று ஒரு சமயம் சொன்ன சொக்கலிங்கம்தான், பின்னர் தன் விருப்பப்பட்ட முறையில் அளவில் கடுமையாக ஒருவருக்கு பதில் எழுத வேண்டும் என்று புதுமைப்பித்தனை நிர்ப் பந்தித்தவரும் இதே சொக்கலிங்கம் தான். இதே போன்ற காரணத் திற்காக பத்திரிகை முதலாளி கோயங்காவோடு மோதியவரும்.

இம்மாதிரியான முரண் பட்ட உணர்ச்சி சொக்கலிங்கத்



படிப்பகம்

www.padippakam.com

திடம் அநேகம். இந்த முரண்கள் லட்சியம் நடைமுறை, தனி மனிதன், சமூகம், காலமாற்றம், சூழல்மாற்றம், தனது அபிப்ராயங் களே கூட பெரும் மாற்றங்கள் என பார்க்கப்பட வேண்டியவை. சுயலாபம், கட்சி சேவகம், வேஷ தாரித்தனம் ஆகிய குணங்கள் பால்பட்ட முரண்கள் அல்ல. எப்படி? என்று ஆராய்வது ஒரு சிக்கலான பிரயாணம்.

இப்படி பல சிக்கலான ஆளுமையும் வளர்ச்சியும் கொண்டவர் சொக்கலிங்கம். ஓர் இலக்கிய ஆளுமையாகதான் இல்லாத போதிலும், பெரும் பத்திரிகையாளர்தான் என்ற போதிலும், 30க்களில் தமிழுக்குக் கிடைத்த ஒரு சின்ன இலக்கிய மறுமலர்ச்சிக்கு அவர் ஓர் உந்து சக்தியாக விளங்கினார். 'போரும் அமைதியும்' மொழி பெயர்க்கிறார். 'காமராஜின் வாழ்க்கை வரலாறு' எழுத எண்ணுகிறார். பல முன்னோடிகளான எழுத் தாளர்களை. அவர்களின் ஆரம்ப காலத்திலேயே இனம் கண்டு அவர்களை ஊக்குவிக்க முடிந் திருக்கிறது அவரால். இன்னும் அடிக் கோடிட்டு சொல்லப் போனால், "தினமணியும் (சொக்க லிங்கமும்) இல்லையென்றால் புதுமைப்பித்தன் என்ன செய்திருப் பார்? என்று கேட்கலாம். இக் கேள்வியை விரும்பாதவர்கள். "சொக்கலிங்கம் இல்லையெனில் இன்னொரு ராமலிங்கம் வர லாற்றில் பிறந்திருப்பார்" என்று வெட்டி பதிலளிக்கக்கூடும். அப் போதும் அந்த "இன்னொரு ராமலிங்கம்" வேண்டித்தான் இருக்கிறது வரலாற்றுக்கு. "இந்த இன்னொரு ராமலிங்கம்தான் வரலாறு தந்த சொக்கலிங்கம்" என்று பதில் சொல்ல வேண்டும்.

தமிழ் சமூகம், சொக்கலிங்கத் தின் ஜீவியகால தமிழ் சமூகம் ஒரு சிக்கலான வரலாற்றினூடே கடந்து வந்த சமூகம். அதில் பல தரப்பட்ட சக்திகள் மோதி யுள்ளன. இதில் பல தரப்பட்ட தனி மனிதர்கள், சக்திகள், கட்சிகள், சமூகத்தை பாதித்ததும், சமூகம் இவற்றை பாதித்ததும், ஒரு சிக்கலும் கலவையுமான வரலாறு. அதில் சொக்கலிங்கமும் ஒருவர். அவரது வாழ்க்கையும், அவரது ஆளுமையும், இச்சிக்கல்களுக்கும் கலவைக்கும் உதாரணங்கள். இதை யாராகிலும் பதிவாக்க முடியு மானால், அதில் சொக்கலிங்கத் தின் வாழ்க்கையும், தமிழ்நாட்டின் வரலாறும் பின்னிப் பிணைந்திருப் பதைக் காணலாம் இரண்டிலும். ஒன்றில் மற்றதன் சிக்கலும் கலவையும் பதிந்திருப்பதையும் காணலாம். அதற்காகவாவது டி.எஸ். சொக்கலிங்கத்தின் வர லாறு அதற்குரிய ஆழத்தில், சிக்கலில், கலவையில் தெளிவாக எழுதப்படவேண்டும்.

பொம்மை செய்யும் முதல் படியாக மூங்கில் பிளாச்சுகளை குறுக்கும் நெடுக்குமாக கட்டி, வைக்கோல் அடைத்து, சுற்றித் தைத்து... இதுதான் ஆரம்பம். மதி வாணனின் புத்தகத்தில் சில மூங்கில் பிளாச்சுகள் குறுக்கிலும் நெடுக்கிலுமாக கட்டப்பட் டுள்ளன. இந்த முதல் படி வேலையே இன்னும் பூரணமாக வில்லை.

நல்லெண்ணங்களுக்கு நம் பாராட்டு.

## சமகாலப் புள்ளிகள்

*சிறுகதைத் தொகுப்பு*

**கிருஷாங்கினி**

*அருள் புத்தகம் நிலையம். 12, வாணியர் வீதி, குறிஞ்சிப்பாடி— 701 302. விலை ரூ. 35.*

கிருஷாங்கினியின் இம் முதல் தொகுப்பில், 1982லிருந்து 1999 வரையிலான 17 வருட நீண்ட காலத்தில் எழுதிய 17 கதைகள். இப்படி வருடத்திற்கு ஒன்று எழுதுகிறவர், தானும் ஒரு எழுத்தாளர் என்று உலவவிருப்பம் கொண்டவராக இருக்க முடியாது. நிறைய கதைகள், பத்திரிகைகள் படிப்பவர், அவ்வப்போது எழுத வேண்டும் என்று தோன்றும் போது எழுதுகிறவர். அப்படி எழுதுகிற காரணத்தால்தான் சம்பிரதாயமாக கதை எழுதப்படும் விஷயங்களைக் கொண்டு இவர் கதை எழுதுவதில்லை. இவர் எழுதும் விஷயங்களைக் கொண்டு சாதாரணமாக ஒருவர் எழுதுவ தில்லை. புஷ்பித்தல் என்று ஒரு கதை. இயற்கையான ஒரு உடல் மாற்றம். அது கொண்டு எழும் மனநிலை. 70 வருடகால தமிழ் சிறுகதை அப்பியாசத்திற்குப் பிறகு இப்போது கதை எழுத உட்காரும் ஒரு நபர் இதைக் கதைப் பொருளாக நினைக்கமாட் டார்கள். அது தான் விஷயம். பெண்களுக்கு இதில் சொல்ல இருக்கிறது. அந்த மனநிலையைப் பற்றிச் சொல்லத் தோன்றியிருக் கிறது. கிருஷாங்கினி சொல்லியிருக் கிறார். இது, ஏற்கப்படுமா? கவலை இல்லை. இது போலத்தான் இத்தொகுப்பில் உள்ள இன்னும் பல. உடல் வருந்த அதனால் எழும் மனச் சஞ்சலங்கள். அவ்வப் போது மாறும் க்ஷண நேர சித்தங்கள். மரணம் பற்றி ஒரு கொத்துக் கதைகள். தற்கொலை என்னும் அனுபவம் பற்றி விசார ணைகள். உயிர் பற்றிய தர்க்கங்கள். என்று சாவோமோ என்றிருக்கும் கிழவனுக்கு பிணம் தூக்கி பிழைக்க வேண்டியிருக்கிறது. அதில் தனக்கு உதவும் சின்ன பையனைக் கடிந்து கொள்கிறான். சாவு என்பது ஒரு உண்மை, சாவு இல்லாத நிரந்தர உண்மை. அந்த உண்மையின் வாசற்படியில் கால் வைக்கும் போது தான் மாயைகள் பல மறைகின்றன. பிரமைகள் கேள்விக்குள்ளாகின்றன புழுத்துச் சாகும் நாயைக் காப்பாற்ற கவலை. ஆனால் எலியைக் கொல்ல முதலில் தயக்கம். பின்னர் அது நிர்ப்பந்த வழக்கமாகிறபோது உணர்ச்சி மரத்துப் போய், அதை உணர்ந்த போது, எப்போது மரத்துப் போயிற்று என்று கேட்கத் தோன்றுகிறது. எலியைக் கொல் லும் போது அணில் என்ன விதிவிலக்கு? ஏன்? பின் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

கொத்து குறியீட்டுப் பொருள் கொண்ட கதைகள். இவை ஒவ்வொன்றுக்கும், அவரவர்க்குத் தெரிந்த அர்த்தங்களைத் தேடிக் கொள்ளலாம். பூச்சி எவ்வளவு அருவருப்பானது! அற்பமானது! பலஹீனமானது! என்று நினைத்துக் கடைசியில் தான் எவ்வளவு 'அசகிதன்'. அப்பூச்சியின் முன் என்ற தெளிவு ஏற்படுகிறது. இவ்த தன்னைவிட எவ்வளவு பலம் பெற்றது. மூர்க்கத்தனம் கொண்டது! அதை வெற்றி கொள்ள வேண்டும் என்று வெறிகொண்டு, சிவுதத்தை அடக்கி அடிமை கொள்ள அழித்துவிடக் கிளம்பி கடைசியில் அப் பெருமிதத்தில் வெகுசீக்கிரம் தான் பலியாவதில் முடிகிறது. படம் என்ற கதையில் படம் ஒரு யதார்த்தமும் தான் குறியீடும்தான். எவ்வளவோ மரியாதையும் மதிப்பும் கொண்ட ஒன்று காலம் செல்லச் செல்ல மதிப்பிழந்து அலட்சியப்படுத்தப் பட்டு அழிகிறது.

எல்லாக் கதைகளுமே சம்பிர தாயக் கதைப் பொருள் மரபை மீறியவை. மீற வேண்டும் என்ற தோரணை இல்லை. ஏதோ ஒரு மனநிலை. ஒரு கருத்து, ஒரு பளிச்சிடும் உண்மை தோன்றுகிறது. அதை, அது பிறந்த அநுபவக்கீற்றோடு சொல்ல முயன்றதில் இப்படி கதையோ, மனச் சித்திரமோ ஏதோ எழுதப்பட்டு விடுகிறது. எழுதிவிடலாம். பின்னர் அதுக்கு யார் வேண்டுமானாலும் என்ன பெயர் வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறாப் போல இக்கதைகள்.

இதன் காரணமாகவே, எப்படி கதைகள் திட்டமிடப்பட வில்லையோ, ஒரு உத்தியோகமாக வில்லையோ, அது போலவே கிருஷாங்கினியின் நடையும்.

'திமிறி எழுந்து நிற்கும்' மரம் என்று ஒரு வர்ணனை. இதை ஒரு சிற்பியோ, தியானியோதான் சொல்வான். பார்வையிலும் அநுபவத்திலும் பிறப்பது இது. அழகான புதுவர்ணனைகள், உவமானங்கள் எழுதி இலக்கியம் பண்ண வேண்டும் என்று உட்காருகிறவனின் பேனாவிலிருந்து இது வராது.

இன்னொரு இடம் : வெள்ளை அணிதலும், அணிந்தவரைக் காணுதலும் தக்காளிச் செடியில் பக்கக் குச்சு. புடலங்காயில் நுனிக்கல், இரண்டின் காரியமும் நிமிர்த்தவே. முதுகோடு குச்சி வைத்து நிமிர்த்திவிடுகிறது. வெள்ளை மனதை சந்தோஷப் படுத்துகிறது. வெள்ளை உடையைக் கண்டாலே மூச்சை உள் இழுத்து விடச் செய்கிறது. ஏதோ மணம் நுகர்ந்தாற் போல்.

'நான் மிகவும் மென்மை' என்று சொல்லும் மென்மை உப்புங் பாறையையும் மல்லிகைப் பூவாய் மாற்றிக் காட்டும் நிறம். 'மசமச'வென்ற இருட்டில் பளீரென்று சிரிக்கும் நிறம்.

இவை எல்லாம் ஒரு கோடி. இதற்கு நேர் எதிர் கோடியாக சங்கடமான நடைகளும் உண்டு. பெரும்பாலான எழுத்து இவ்விரண்டு எதிர் முனைகளுக்கும் இடைப்பட்ட எழுத்து.

'இதம், மனம், ஆகாசம்' என்றொரு கதை. சாவு பற்றிய கதைகளோடு. இதுவும் எனக்குப் பிடித்த கதை. புனிதம் என்று கொண்டாடப்படும் இடத்தில் காணாம் கசடுகள். அழுக்குகள். கோவிலும் அதன் உட்சூழலும். நடப்பு வாழ்வின் சித்திரமாகவும் கொள்ளலாம். நாத்திகம் பேசுபவர்கள் உள்ளத்தைக் களிப்பூட்டும். இதைக் குறியீடாகவும் கொள்ளலாம். அப்போது எங்கெங்கெல்லாம் இக்குறியீடு இட்டுச் செல்லும். எந்தெந்த இடங்களை, புனிதங்களையெல்லாம் சுட்டிச் செல்லும் என்பது வெகு சுவாரஸ்யமாக இருக்கும். அத்தகைய பிரயாணத்தை, இக்கதையை நடப்பியல் சித்திரமாகக் கண்டு களித்தவர்கள் விரும்ப மாட்டார்கள்.



## சேலஞ்ச்

**நக்கீரன் கோபால்**

**வெளியீடு: நக்கீரன், 49 ஹாரிங்டன் சாலை, சென்னை 600 030. விலை ரூ 90.00**

**துளசி**

ஒவ்வொரு காலகட்டத்திலும், எழுதப்படும் சொற்களானது எவ்வளவு வீர்யமுடையது என்பதற்கு நிரூபணங்கள் இருந்து கொண்டே வருகின்றன. சரித்திரத்திலிருந்தே தம்மை விமர்சிக்கும் எழுத்தைக் கண்டு அஞ்சியவர்களும், அதைப் பொறுக்காமல், அவ்வெழுத்தின் இயக்கத்தை நசுக்க நினைப்பவர்களும் இருந்துகொண்டே வந்திருக்கிறார்கள். எழுத்தின் வெற்றி தொடர்ந்துகொண்டே இருப்பதும் மற்றொரு சரித்திரம்.

'சேலஞ்ச்' அப்படியொரு போராட்டத்தின் வெற்றிக் கதை தான். ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில், நக்கீரன் இதழ் சந்தித்த போராட்டங்கள், மரணங்கள், அடக்குமுறைகள், இக்கட்டுகள், தாக்குதல்கள் என்று நெஞ்சு கனக்க நினைவுகூறும் இப்புத்தகம் ஒரு சமகால வரலாறு.

இப்புத்தகத்தில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய பல அற்புதங்கள் உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

(அ) அஞ்சாத, ஆண்மை நிறைந்த மொழி போராட்டத்தின் உத்வேகமும், தன்னம்பிக்கையும் புத்தகம் முழுவதும் சிறிதும் சோர்வின்றி எழுதப்பட்டுள்ளது. வேகம் வாசகனை யோசிக்க வைப்பதுடன் கோபப்படவும் வைக்கிறது.

(ஆ) முக்கியச் சிறப்பாக நான் கருதுவது, மொத்த புலனாய்வு இதழிலேயே பெருமைப் படுத்தும் பாங்கு. புலனாய்வு என்றாலே 'மஞ்சள்' தன்மையுடனும் 'ப்ளாக் மெயில்' உடனும் தொடர்பு படுத்திப் பேசுவதும், அதை ஒரு முக்கிய இதழியல் போக்காக கொள்ளாதிருக்கும் மனநிலையும் இங்குண்டு.

இப்போராட்ட வரலாற்றின் தகிக்கும் உண்மை புலனாய்வு இதழியலின் கறையையே துடைத்தழிக்கிறது.

(இ) எல்லாவற்றையும் விஞ்சி நிற்பது, நக்கீரன் கோபாலின் அர்ப்பணிப்பு. ஏன் இப்படிப் போராட வேண்டும்? என்றொரு கேள்வியை எழுப்பினோமேயானால், விடை சுயலாபம் தருவதாய் அமையாது. ஆயினும் பத்திரிகைத் துறையின் மேலும், உண்மையின் மேலும் உள்ள அர்ப்பணிப்பே, இப்புத்தகத்தை தனித் துவப்படுத்துகிறது.

இந்தத் தனித்துவமே இதன் பலம்.

## வருகை

### மு. சுதந்திரமுத்து

*தொகுப்பாசிரியர் : முரளி அருபன், பக்கங்கள் : 64, விலை : 15/, கிடைக்குமிடம் : தமிழ் முதுகலை & ஆய்வுத் துறை, புதுக்கல்லூரி, சென்னை—14.*

கவிஞர் பலரின் கவிதைகள் ஒன்றாகத் தொகுக்கப்படுவது தமிழில் புதுக்குரல்க்ள் தொடங்கித் தொடர்கிறது. வானம்பாடிகளின் 'வெளிச்சங்கள்,' வாணியம்பாடிக் கவிஞர்களின் 'அந்தி' முதலான சில தொகுப்புகள் குழுசார்ந்து தொகுக்கப்பட்டவை. பலரின் கவியரங்கக் கவிதைகளின் தொகுப்புகளும் நெடுங்கவிதைகளின் தொகுப்புகளும் வந்துள்ளன. கிறித்துவக் கல்லூரியின் 'வனம்' அமைப்பின் தொகுப்புகளும், திருத்தணிக் கல்லூரிக் கவிஞர்களின் தொகுப்பும் வெளிவந்துள்ளன. அந்த வகையில் 'வருகை'யின் வருகை நேர்ந்திருக்கிறது.

புதுக்கல்லூரி மாணவர்களின் கவிதைகள் 'வருகை'யில் அரங்கேற்றப்பட்டு இருக்கின்றன. புதுக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் — எழுத்தாளர் முரளி அருபன் சிரத்தையுடன் இதைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவரை நாம் பாராட்ட வேண்டும்.

'வருகை'யை அணுகும்போது இக்கவிதைகள் எல்லாம் கவிதை ஆர்வங்களும் அக்கறைகளும் என்பதை நினைவில் கொண்டே அணுக வேண்டும். சில கவிதைகள் 'விகடன்' இதழ்களில் வெளியாகிப் பதிவு பெற்றவை. தாய்மை, காதல், சுற்றுச் சூழல், வாழ்க்கை பற்றிய விரக்தி, நம்பிக்கை, சாவு, சமயம், விதவைத் துயர் என்று பெரிதாகவும் சிறிய ஹைகூவாகவும் கவிதைகள் உள்ளன. 'காதல்' மிக அதிகமாய் ஆக்கிரமிப்புக் கொண்டிருக்கிறது. மற்ற அண்மைத் தொகுப்புகளில் காதல் காணாமல் போயிருக்க, இதில் அதிக இடம் பெற்று இருப்பது வேறுபட்டுத் தெரிகிறது. பிரபலமான வரிகளை நினைவூட்டும் வரிகள், சந்த இசைவு கொண்ட வரிகள், சிலேடை அர்த்தம் கொண்ட வரிகள், எனக் கவிதையின் வழக்கமான தடயங்களோடு புதிய தடயங்களும் 'வருகை'யில் பதிவாகியுள்ளன.

'எங்கள் இளமைக்
காலத்தை
எழுதி வைத்ததும்
இந்த நதியில்தான்'
..... .... .....
அத்தனை நாட்களையும்
அடித்துப் போய்விட்டது
ஆறு
நதியைச் சாகக் கொடுத்த
நான்
எங்குப் போய்க் குளிப்பது?

என்ற வரிகளில் நதிகளின் மரணம், கவலையாய்ப் படர்கிறது.

*பூ விற்கின்ற விதவைப் பெண் பற்றி,*

"இறந்தவள் விற்கிறாள்
அவளைப் போல
மணக்கிறது பூ"

என்பதும், *'தமிழில் அர்ச்சனை கேட்காத சாமியைப் பற்றி,*

''இரண்டாயிரம்
ஆண்டுகளாகத்
தமிழ் கற்கவில்லை
தமிழ்நாட்டுச் சாமி"

என்பதும் நினைவில் நிற்பவை.

"எப்போதும் விழ்வதுதான்
இங்கே வாழ்க்கையின்
இயல்பாக இருக்கிறது....
இதோ
ரொம்பப் பக்கத்தில்
மரணம்''

என்ற விரக்தி வரிகள் இளைஞர்கள் எப்போதும் வரித்துக் கொண்டவை.

''எல்லோரையும்
ஓட்டிவிட்டுக்
கடிகாரம் மட்டும்
காத்துக் கொண்டிருப்பது
யாருக்காக''

என்ற வரிகளில் மானுடத்தின் நிலையாமையோடு காலத்தின் நிலைத்த தன்மையும் இணைக்கப் படுகிறது.

பேருந்தில் போவதா அந்தக் காசில் தேநீர் குடிப்பதா என்ற சிந்தனையிலேயே வந்த ஒருவனின் அனுபவத்தை.

"யோசனையில் நடைநீள
எதிரே வந்தது
என் வீடு"



படிப்பகம்

www.padippakam.com

என்று முடித்துக் காட்டும் வரி களில் இந்தியர்களின் இயலாமைத் தர்க்கம் வெளிப்படுகிறது.

அசட்டுத் தனமான சில காதல் வரிகளைத் தவிர்த்திருக் கலாம்; முந்தைய சிந்தனைகளின் நிழல் களையும். ஆயினும் எல் லாமே புரிகிற கவிதைகள் என்பது கவிஞர்களின் நேர்மையைக் காட்டுகிறது. கொள்கைகள், குழுக்கள் இவற்றின் வண்ணம் பெறாமல் இயல்பான நிறத்தில் சுரந்திருக்கிற கவிதைகள் இவை. பாசாங்கு இன்றி இவை நேராகப் பேசுகின்றன. உணர்வுத்தளம் ஆழப்படுகிறபோது கவிதைகள் ஆழம் கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

புதுக்கல்லூரியின் பதி னெட்டுப் புதுக்கவிஞர்களின் இப்பதிவு மற்ற மாணவக் கவிஞர் களைத் தூண்டும் என்பதையும், தொகுப்புகள் தொடரும் என்பதை யும் எதிர்பார்க்கலாம்.

வரவேற்கத்தக்க வருகை.



## பெத்த மனசு

### ஹ.மு. நத்தர்சா

வெளியீடு: சுடர் பதிப்பகம், 39, லெமர் வீதி, காரைக்கால். பக்கங்கள் : 96 விலை ரூ 20.00

மு. சுப்ரமணியன்

நறுக்குத் தெறித்ததுபோல் எட்டுக் கதைகள் அடங்கிய தொகுப்பாக வந்திருக்கிறது 'பெத்த மனசு'. சின்னச் சின்ன சம்பவங் களைச் சேர்த்திழைத்துக் கதை களாக்கியுள்ளார் ஆசிரியர் நத்தர்சா.

சிக்கலாகும் மனக்கசப்புக்கு உள்ளாகும் மனித உறவுகள் பற்றிய ஆவணமாக இவரது கதைகள் அமைந்துள்ளன. ஏற்கெனவே, 'உறவுப் பறவைகள்', 'சின்னச் சின்ன ஆசை' போன்ற சிறுகதைத் தொகுப்புகளைத் தந்திருக்கிற ஆசிரியரின் மூன்றாவது தொகுப்பு இது.

கடைசிக் கதையாக இருக்கிற நன்னம்பிக்கை முனையும், காணா மல் போனவன் கதையும் இந்தத் தொகுப்பின் சிறந்த கதைகளாகச் சொல்லலாம். இன்னொரு முக்கிய மான விஷயம். இவர் தமது கதை மொழியை பண்டிதர்களின் மொழிநடையில் இருந்து மாற்ற முனைந்திருப்பதை வாசகன் அறியும் வகையில் இத் தொகுப்பு அமைந்துள்ளது. தமிழ்ப் பேராசிரி யாகப் பணியாற்றும் பின்னணி யில் எளிமையாகவும் அளவில் சிறியதாகவும் இத்தொகுப்பின் கதைகளைத் தந்திருக்கும் ஹ.மு. நத்தர்சாவை சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது.


# தீராத நாட்பட்ட வியாதிகளுக்கு தமிழ் சித்த மருத்துவம்



சர்க்கரை வியாதி, நரம்புத் தளர்ச்சி, மூட்டுவலி, பலஹீனம், கைகால் அசதி, எரிச்சல், நடக்க முடியாமை, ஞாபகமறதி, வயிற்றுவலி, வயிற்றுப் புண், குழந்தையில்லாக் குறை, பெண்களுக் குண்டாகும் வயிற்று வலி, சோரியாசிஸ், வாயுக் கோளாறுகள், தோல் நோய்கள், வெண்குட்டம், மூலம், நெஞ்சுவலி, இதய நோய்கள், ரத்த அழுத்தம், காசநோய், பக்கவாதம், புற்றுநோய், ஆஸ்துமா, சைனஸ், ஆண்மைக் குறைவு, எய்ட்ஸ், அதிக உடல் பருமன், தூக்கமின்மை போன்ற நாட்பட்ட நோய்களுக்கு சித்தா முறையில் சிகிச்சையளிக்கப்படும்.

குறிப்பு: ஹெபாட்டிஸ் B-க்கு சித்த விஞ்ஞானி திருத்தணிகாசலம் தமது ஆராய்ச்சியின் பயனாய் புதிய குணப்படுத்தும் மருந்தை கண்டுபிடித்துள்ளார். இதுஒரு உலக சாதனை.

*மேலும் விபரங்களுக்கு :*

சித்த விஞ்ஞானி க. திருத்தணிகாசலம்

**ரத்னா சித்த மருத்துவமனை & மூலிகை ஆராய்ச்சி நிறுவனம்**

629, ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலை, என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம். சென்னை-600 106

இணைய முகவரி; ratna-aids@hotmail.com மின்னஞ்சல் ; mpnwebcity.com/aidscure

போன் :6223828




படிப்பகம்

www.padippakam.com

# நூல் அறிமுகம்

**கவிமூலம்** / விக்ரமாதித்யன் வெளியீடு: மருதா பதிப்பகம், 62/1, முதல் தளம், பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14

ஒரு படைப்பாளியின் மன நெகிழ்வை, லாவகமாகச் சொல்கிறார் விக்ரமாதித்யன். தம் கவிதையின் பின்புலனாக அமைந்த நபர், சம்பவம் குறித்தப் பதிவுகள். பல பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள்.

**தஞ்சைச் சிறுகதைகள்** / தொகுப்பாசிரியர். சோலை. சுந்தரபெருமாள். வெளியீடு: காவ்யா, 16, 17 ஆவது 'இ' கிராஸ், இந்திரா நகர் 2 ஆவது ஸ்டேஜ், பெங்களூர்—38. பக்கம்: 352 விலை : ரூ.150/-

தஞ்சையைச் சேர்ந்த சிறு கதை எழுத்தாளர்களின் படைப்புத் திறமையையும் அவர்களது படைப்புகளின் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. படைப்பாளிகள் தம் மண்ணையும் மனிதர்களையுமே பதிவு செய்திருக்கிறார்கள் என்கிற தொனியை. இப்புத்தகம் கொடுக்கிறது. கதைத் தேர்வில் செலுத்தியிருக்கும் காரணம் பாராட்டுக்குரியது. விடுபட்டவர்களின் படைப்புகளை தொகுப்பாசிரியர் அடுத்த தொகுப்பில் சேர்ப்பார் என எதிர்பார்க்கலாம்.

**சோக வனம்** / சோ. தர்மன் வெளியீடு: சாருலதா பதிப்பகம், 52, 48 ஆவது தெரு, 9 ஆவது அவன்யூ, அசோக் நகர், சென்னை - 83. விலை: ரூ. 55.00 பக்கம்: 164

சோ. தர்மனின் பதினைந்து சிறுகதைக்ள் அடங்கிய தொகுப்பு.

**பூஜ்யங்களின் சங்கிலி** / சிற்பி. வெளியீடு: கோலம் வெளியீடு, 50, அழகப்பா குடியமைப்பு, பொள்ளாச்சி-642001. பக்கம் : 96 விலை : ரூ. 40.00

**இடைவேளை** / ஸ்டீபன் & இருதயராஜ். வெளியீடு: வைகறைப் பதிப்பகம், பெஸ்கி கல்லூரி, திண்டுக்கல் - 624001. விலை: ரூ.25.00, பக்கம்: 112

இடைவேளையில் மட்டும் கொஞ்சம் சுயநினைவுக்கு வரும் ரசிகர்கள் தமிழ்நாட்டில் உண்டு. அவர்களை முழுமையான சுயநினைவுக்குக் கொண்டுவர இந்த இடைவேளை பயன்படும் என்கிறார் இன்குலாப்.

**மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை** / அருணன். வெளியீடு: வைகை வெளியீடு, 6/16, புறவழிச்சாலை, மதுரை-625018. விலை: ரூ. 10/- பக்கம்: 87

**சிந்திக்க ஒரு நொடி** / வாஸந்தி. வெளியீடு கலைஞன் பதிப்பகம், 10, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை-17. பக்கம்: 215 விலை: ரூ. 45/-

**பறவை யுத்தம்** / பா. ராகவன். வெளியீடு: ராஜேஸ்வரி புத்தக நிலையம், 8, முத்துகிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை-17. விலை: ரூ. 30.00 பக்கம்: 112

"வண்ணங்களற்று வாழ்வோடு நீண்டுவரும் பெருங்கனவின் சுற்றுச் சுவர் பூச்சுகளை விரல் நகங்களால் கிறிக்கிறி அதனுள்ளிருந்து கண்டெடுக்கப்படுகின்றன என் கதைகள்" என்கிறார் பின்னுரையில்.

**கதா சாகரம்** / சா. தேவதாஸ். வெளியீடு: விஜயா பதிப்பகம், 20, ராஜவீதி, கோவை. பக்கம்: 192 விலை: ரூ. 60/-

சர்வதேச வாய்மொழிக் கதைகளின் தொகுப்பு

**மாமிசப் படைப்பு** / நாஞ்சில் நாடன். வெளியீடு: விஜயா பதிப்பகம், பக்கம்: 142, விலை: ரூ. 45/-

**அதிசயப்பிறவி வ.ரா.** / சிட்டி; பெ.சு. மணி. வெளியீடு: விஜயா பதிப்பகம், விலை: ரூ. 100/- பக்கம்: 336

மறுமலர்ச்சித் தமிழ் உரை நடையின் முதல்வர் என்றும், சமுதாயக் கவலைகொண்ட எழுத்தாளர் என்றும் இலக்கிய உலகில் பாராட்டப்பெற்ற வ.ரா. வின் வாழ்க்கை, இலக்கியம் பற்றிய நூல்.

**சமுத்திரம் கட்டுரைகள்** / சு. சமுத்திரம். வெளியீடு: ஏகலைவன் பதிப்பகம் 9, இரண்டாவது குறுக்குத் தெரு, டாக்டர். ராதா கிருஷ்ணன் நகர், சென்னை - 41 பக்கம்: 200 விலை: ரூ. 45.00



படிப்பகம்

www.padippakam.com

**சம்ப்பா நரேந்தர் பரிசு பெறும் குறுநாவல்**

# செயற்கை அறிவு

**காஞ்சனா தாமோதரன்**

ஆகஸ்ட் 2005. ஹார்வுட் ஸைபர்னட்டிக்ஸ் கம்பெனி உலகத் தலைமையகம், நியூயார்க்.

"டாக்டர் அர்ச்சனா மகாதேவன் டு கான்ஃபரன்ஸ் ரூம் 32 ப்ளீஸ்."

118—ஆம் மாடி முழுவதும் சன்னமான பெண் குரலில் இன்டர்காம் தேடி அழைக்கவும் அர்ச்சனா, கான்ஃபரன்ஸ் ரூமின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"குட்மார்னிங், ஜென்டில்மென். இந்த ஒரு மைக்ரோ செகண்ட் தாமதத்துக்கு என்னை மன்னிக்கவும்." அவளது ட்ரேட் மார்க் புன்சிரிப்பு. வறண்ட முகங்களிலும் பதில் மலர்ச்சியை வரவழைக்கும் புன்சிரிப்பு.

கோடியிலுள்ள அந்த விசாலமான ரூமின் இரு பக்கமும் கண்ணாடிச் சுவர்கள். வெளியே காலை வெயிலில் மினுங்கும் ஹட்ஸன் நதி. சுவரோடு பதித்த பளிங்கு மேடை அருகே கம்பெனியர் அல்லாத ஒரு சிறு கூட்டம்... ஆரஞ்சு ஜூஸ், காஃபீபியை கிசு கிசு பேச்சோடு கலந்து கொண்டு. அவள் குழுவினர் கான்பரன்ஸ் மேஜையைச் சுற்றி, கண்களில் கேள்விக் குறிகளுடன். மார்க்கெட்டிங் வைஸ் பிரெஸிடென்ட் க்ரிஸ் வாங்.

சுழல் நாற்காலியில் உட்காரும் ஒரு கணத்தில் அவள் பார்வை அனைத்தையும் வட்டமிட்டுப் பின் மேஜையின் தலையில் உட்கார்ந்திருந்தவனின் கண்களைச் சந்தித்தது.

ஸ்டீவ் ஹார்வுட். பல கோடி டாலர் மதிப்புள்ள ஸைபர்னட்டிக்ஸ் இன்டர்நேஷனல் கம்பெனியை நிறுவியவரின் பேரன். உரிமையாலும் உழைப்பாலும் முப்பத்தி ஐந்து வயதில் அந்த நிறுவனத்தின் பிரெஸிடென்ட் பதவிக்கு உயர்ந்தவன். கடந்த ஐந்து வருடங்களில் கம்பெனியின் லாபத்தையும் ஷேர் மதிப்பையும் பல மடங்கு பெருக்கியவன். நாளைய உலகத்தை இன்றே உருவாக்கி அதைத் தன் கம்பெனிக்குச் சாதகமாக்கும் துடிப்பும் கூர்மையும் பலமும் உள்ள ஒரு பிஸினஸ் பிரம்மா. எதற்கு இன்று இந்தத் திடீர் மீட்டிங்?

அர்ச்சனாவின் கேள்விக்குறிகளை ஸ்டீவ் மௌனமாய் உணர்ந்தான். அவளைப் பல வருடங்களாக அவனுக்கு நன்றாகத் தெரியும். இந்தியாவில் சென்னை ஐஐடியில் கம்ப்யூட்டர் துறையில் ஒரு பட்டம். பின் இங்கே கலிஃபோர்னியாவின் ஸ்டான் ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் கம்ப்யூட்டர்களை மனித அறிவின் படிமமாக்க முயலும் செயற்கை அறிவுத் துறையில் பி.ஹெச்டி பட்டம். அவள் ஆராய்ச்சியின் திசையையும் எதிர்காலப் பலனையும் உணர்ந்த ஹார்வுட் ஸைபர்னட்டிக்ஸ் அவளைக் கொத்திக் கொண்டது, எம்ஐடி. பல்கலைக்கழகம் உட்பட பலருடன் போட்டியிட்டு. இன்று இவள் ஹார்வுட் ஸைபர்னட்டிக்ஸ் ஆராய்ச்சிப் பிரிவின் தலைமை வைஸ்-பிரெஸிடென்ட். அறிவும் திறனும் பொறுப்புணர்வும் நிறைந்த மதிப்பிற்குரிய பெண்மணி. அவன் சொல்லப் போவதற்கு அவள் பதில் என்னவாக இருக்கும்? ஒரு நிமிடம் கடந்தது. ஆரஞ்சு ஜூஸ், காஃபியுடன் அனைவரும் தங்கள் இடங்களில் உட்காரவும், ஸ்டீவ் மீட்டிங்கைத் துவங்கினான்.

"லேடி அண்ட் ஜென்டில்மேன், வெவ்வேறு இடங்களிலிருந்து பறந்து வந்து இந்த மீட்டிங்கில் கலந்து கொள்வதற்கு நன்றி. சிரமத்துக்கு மன்னிக்கவும். விஷயத்தை வீடியோ—கான்ஃபரன்ஸ் மூலமாகச் சொல்வதை விட நேரில் கலந்து பேசுவதே நல்லது என்று தோன்றியது. முதலில் இங்கே இருக்கிற சில புது முகங்களை நம் கம்பெனி ஆட்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்."

செயற்கை அறிவு விஞ்ஞானிகள் ஜான் பிரெஸ்காட், டேவ் பேரிஷ்னக்கோவ், தத்துவ ஞானிகள் ரமேஷ் வர்மா, மிக்கி யோஷிமோட்டோ. ரோபோ—ஸைக்காலஜிஸ்ட்டுகள் மைக் லெஸ்ஸிக், கென் ஃபாலி. அவரவர் துறைகளில் உலகப் பெயர் பெற்ற நிபுணர்கள்.

ஸ்டீவ் தொடர்ந்தான்:

"அர்ச்சனா மகாதேவன் தலைமையில் நம் கம்பெனி ஆராய்ச்சிக் குழு பல புது டெக்னாலஜிகளைக் கண்டு பிடித்து ரோபாட்டிக்ஸ் துறையையே மாற்றி அமைத்திருப்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும். சமீபத்தில் நாம் அறிமுகப்படுத்திய மூன்றாம் தலைமுறை செயற்கை அறிவு ஃப்ராக்டல் ரோபாட்டுகளினால் நம் கம்பெனிக்கு நிறைய லாபம் என்பதும் உங்கள் எல்லாருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

தெரியும். விருப்பப்பட்ட வடிவங்களுக்கு மாறவும் தங்களைத் தாங்களே படைக்கிற திறமையும் உள்ள அந்த 'ஹார்வுட்—மகாதேவன் ரோபாட்'கள் இப்போது வீட்டு வேலையிலிருந்து மற்ற கிரக ஆராய்ச்சி வரைக்கும் உபயோகப்படுகின்றன. ஆக, நம் கம்பெனி ஆராய்ச்சி நம் லாபத்துக்கு மட்டுமில்லாமல், சமூக வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருக்கிறது."

இதெல்லாம் தெரிந்த விஷயம் தான். சுற்றி வளைத்து இவன் எங்கே வருகிறான்? எல்லார் முகத்திலும் ஆர்வம் வெளிப்படையாகவே தலை காட்டியது. அர்ச்சனாவுக்குப் புரிந்து விட்டது. 'அந்த' விஷயம்தான்.

ஸ்டீவ் தொடர்ந்தான்: "சரி, இனி விஷயத்துக்கு வருகிறேன். அர்ச்சனா குழுவின் இப்போதைய புதுக் கண்டுபிடிப்பு மனித இனத்தின் சரித்திரத்தையே மாற்றி அமைக்கப்போகிறது. மனித வெளி நடப்புகளை அப்படியே நகலெடுக்கக் கூடிய ஒரு மெஷினுக்கு அந்த மனித அறிவு இருக்கிறது என்பது அடிப்படை 'ட்யூரிங் டெஸ்ட்'. அர்ச்சனாவின் குழு செய்த புதுக் கம்ப்யூட்டர் மூளை அந்த ட்யூரிங் டெஸ்ட்டில் தேறியிருக்கிறது. இந்தக் கண்டுபிடிப்பின் எதிர்காலத்தைப் பற்றிக் கலந்து பேசத்தான் உங்கள் அனைவரையும் இங்கு அழைத்திருக்கிறேன். முதலில் அர்ச்சனா அவளது டீம் கண்டுபிடிப்பைப் பற்றிப் பேசட்டும். ப்ளீஸ் கோ அஹெட், அர்ச்சனா."



எதிர்பார்த்தது போல் அறையில் பரபரப்பு, எல்லா முகங்களும் அர்ச்சனாவை நோக்கித் திரும்பின. அர்ச்சனா நினைத்தது சரிதான். அந்த விஷயம்தான்.

"ஸ்டீவ், என் டீம் பற்றி உயர்வாகப் பேசியதற்கு நன்றி. இதைப் பற்றிப் பேசுவதற்கு முன் நீ என்னை கன்ஸல்ட் பண்ணியிருக்கலாம், சரி போகட்டும். அந்தக் கண்டுபிடிப்பின் முழு விளைவுகளும் எங்களுக்கு இன்னும் சரியாகப் பிடிபடவில்லை. அதன் எதிர்காலப் பிஸினஸ் உபயோகங்களைப் பற்றி பேசும் நேரம் இது இல்லை என்று நான் நினைக்கிறேன்."

ஸ்டீவ் ஹார்வுட் ரோபாட்டிக்ஸை மட்டும் அல்ல, மனிதர்களையும் நன்கு புரிந்து கொண்டவன். அதனால் எத்தனையோ பிஸினஸ் பிரச்சனைகளைச் சமாளித்து வெற்றி காண்பவன். அவளது பதில் அவன் எதிர்பார்த்ததுதான். அவளிடம் கேட்காமல் இந்த மீட்டிங்கைக் கூட்டியதே அதனால்தான். முதலாளித்துவ அமைப்பில், தனியார் துறையில் வேலை செய்தாலும் கூட, விஞ்ஞானிகள் பெரும்பாலும் லட்சியவாதிகள். யதார்த்தத்துக்குத் தலை வணங்க மறுக்கும் லட்சியவாதிகள்.

"இந்த மீட்டிங்கே வெளிப்படையாக விஷயத்தை அலசுவதற்காகத்தான், அர்ச்சனா. இதுவரை பிடிபடாதது என்ன என்று கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் மற்ற நிபுணர்களும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள முடியும்." —ஸ்டீவ் புன்னகைத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அர்ச்சனா பேசத் துவங்கினாள்: "ஜென்டில்மென், ட்யூரிங் டெஸ்டை எங்கள் கம்ப்யூட்டர் மூளை பாஸ் செய்தது உண்மைதான். ஆனால், அதனால் மட்டும் அது முழு மனித அறிவு உள்ள ஒரு படைப்பு ஆகிவிட முடியாது. ட்யூரிங் டெஸ்ட்டின் அடிப்படைத் தத்துவத்தைப் பூரண உண்மையாக நானும் என் குழுவும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதாவது மனிதனின் வெளி நடப்புகளை 100% நகலெடுப்பதனால் அறிவுள்ள ஒரு மெஷினிடம் 100% மனிதம் அல்லது ப்ரக்ஞை இருக்கிறது என்று எங்களால் ஒப்புக் கொள்ள முடியாது. எங்கள் ஆராய்ச்சியின் முதல் கட்டம்தான் இப்போது முடிந்துள்ளது. இன்னும் நானும் என் டீமும் செய்ய வேண்டிய எவ்வளவோ ஆராய்ச்சிகள், ரோபோ—ஸைக்காலஜி டெஸ்டுகள் இன்னும் மிச்சம் இருக்கின்றன. அதற்குப் பின்தான் திட்டவட்டமாக ஏதும் சொல்ல முடியும். அதுவரை பொறுத்திருப்பது நல்லது என்பது என் தாழ்மையான கருத்து."

"அர்ச்சனா, தேங்க்யூ. விஷயத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டாய்." —ஸ்டீவ் எளிதில் ஆடிப் போகிறவன் இல்லை. "இனி மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்கலாம்."

அர்ச்சனா தன் ஸீட்டில் சாய்ந்து உட்கார்ந்தாள். இவன் விடுவதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு பிஸினஸ் மோட்டிவை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறான். பெரிய லாபமாக இருக்கலாம்.

விஞ்ஞானி ஜான் பேசினான்: "செயற்கை அறிவு என்றால் என்ன? சில அடிப்படை விதிகளையும் தானாகவே தன்னை வளர்த்துக் கொள்ளும் சக்தியையும் ஹார்ட்வேர், ஸாஃப்ட்வேர் இரண்டின் மூலமாக ஒரு கம்ப்யூட்டர் மூளைக்குக் கொடுப்பதுதான். தானாகவே தன் அறிவை வளர்த்துக் கொள்ளும் சக்தி இருப்பதனால் மட்டும் இந்தச் செயற்கை அறிவும்,

**அர்த்தத்துடன் எழுதியதால் சைனீஸ் மொழி அவருக்குத் தெரியுமென்று சொல்ல முடியாது அதே மாதிரிதான் உங்கள் செயற்கை அறிவு மூளையும் உண்மையான புரிதல் அதனிடம் இருக்க முடியாது**

மனித ப்ரக்ஞை என்று சொல்கிறோமே அதுவும் ஒன்றாகுமா? தத்துவமும் விஞ்ஞானமும் சந்திக்கும் பல கேள்விகளில் இதுவும் ஒன்று."

தத்துவ ஞானி மிக்கி பேச ஆரம்பித்தான்: "ஜான் ஸார்லின் 'சைனீஸ் அறை' தத்துவம் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். சைனீஸ் மொழி புரியாமலேயே, அந்த மொழியின் இலக்கண, வடிவ விதிகள் மட்டும் புரிந்து கொண்ட ஒருவரால் அந்த மொழியில் அர்த்தத்துடன் எழுத முடியும். அர்த்தத்துடன் எழுதியதால் சைனீஸ் மொழி அவருக்குத் தெரியுமென்று சொல்ல முடியாது. அதே மாதிரிதான் உங்கள் செயற்கை அறிவு மூளையும். உண்மையான புரிதல் அதனிடம் இருக்க முடியாது. ரமேஷ், நீ என்ன நினைக்கிறாய்?"

விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரமேஷ் திரும்பினான்: "மிக்கி சொல்வது சரி. நம் அறிவைப் பற்றி நமக்குப் பிடிபட்டதைத்தான் நாம் விதிகளாக மாற்றி, அந்தச் செயற்கை அறிவை உண்டாக்கி, அது மேலும் மேலும் தன் அறிவை தானே வளர்த்துக் கொள்ள வழி செய்கிறோம். ஆனால் நம் அறிவைப் பற்றி நமக்கே முழுக்கப் பிடிபடாதது எத்தனையோ இன்னும் உண்டு. உதாரணமாக, நம் நுகர்ச்சிப் புலன் ரோஜா மணத்தை உணர்வது ஒரு முழுமையான பூரணம்.. நம் ப்ரக்ஞை நம் புலனை உணரச் சொல்லும் பூரணம். பூரணத்தை உடைத்து, உடைந்த தனிப் பகுதிகளைத் திரும்பக் கூட்டி ஒட்டினால் அது பூரணம் ஆகாது. இந்தக் கட்டத்தில் நமக்கு பிரக்ஞையின் சில அம்சங்கள்தான் தெரியும். ப்ரக்ஞையின் பூரணத்தைப் புரிந்து, அதைச் செயற்கை அறிவின் அடிப்படை நியதிகளாக ப்ரோக்ராம் செய்யும் அளவுக்கு நம் இயற்கை அறிவே இன்னும் வளரவில்லை என்று நான் நம்புகிறேன்."

அறை முழுதும் மெல்லிய சிரிப்பலைகள்.

"அப்படியென்றால் இப்போதைக்கு இந்த செயற்கை அறிவு டெக்னாலஜியை மனித ஆயுளை நீடிக்க வைக்க உபயோகப்படுத்த முடியாது என்பது உங்கள் கருத்தா?" —மார்க்கெட்டிங் வைஸ் ப்ரெஸிடென்ட் க்ரிஸ் வாங்.

சிரிப்புகள் சட்டென்று நின்றன.

"க்ரிஸ், உன் கேள்வியைக் கொஞ்சம் விரிவாகச் சொல்." —அர்ச்சனாவுக்கு விஷயம் முழுதாகப் புரிந்து விட்டது. இதுதான் அந்த பிஸினஸ் மோட்டிவ்.

க்ரிஸ் விவரித்தான்: "அர்ச்சனா, ட்யூரிங் டெஸ்ட் பாஸ் செய்த கம்ப்யூட்டர் மூளைக்குள் ஒரு தனி மனிதனின் அறிவை அப்—லோட் செய்து பதித்து வைத்தால், அப்புறம் அந்த மனிதனுக்கு ஓய்ந்து தேய்ந்து போகும்



படிப்பகம்

www.padippakam.com

உடல் தேவையில்லை. தீர்க்காயுசு. நியூரல் நெட் ஸர்க்யூட்டின் அதி வேகம். மறதி என்பதே தெரியாத அறிவு. கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். மனிதனின் அடிப்படை ஆசை என்ன? சாவில்லாத நிரந்தர வாழ்வு. அந்த ஆசையை நல்ல விதமாகப் பூர்த்தி செய்யும் கம்பெனிக்குக் கொள்ளை லாபம். நம் கம்பெனியே இந்தப் புதிய மார்க்கெட்டைத் திறக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஸ்டீவின் விருப்பமும்கூட."

ஒரு நிமிட மௌனம், பின் உடைந்து சிதறியது அறை முழுதும்.

"ஜென்டில்மென், ஜென்டில்மென், ப்ளீஸ்! ஒவ்வொருவராகப் பேசவும்."

"க்ரிஸ், இது காலங்காலமாக உன்னை மாதிரி மார்க்கெட்டிங் மேதைகளும் ஸயன்ஸ் ஃபிக்ஷன் எழுத்தாளர்களும் கண்டு வந்த கனவு. இப்போது கனவு நனவாகும் நிமிடம் போல் தெரிந்தாலும், இது ஒரு சிக்கலான கேள்வி. ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் அவசரத்தில் முடிவெடுக்க வேண்டிய விஷயம் இல்லை."

"மனிதனுக்குக் கடவுள் வேலை தேவைதானா?"

"மனித மூளை, மற்ற நரம்பு மண்டலங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு பகுதியாக ஸ்கேன் செய்து ஒரு கம்ப்யூட்டர் மூளைக்குள் அப்—லோட் பண்ண முடியும் என்பது பள்ளிக்கூடப் பாடம். அதை நடைமுறையில் அர்ச்சனாவின் குழு செய்திருக்கிறதென்று நினைக்கிறேன். ப்ரில்லியண்ட்! இதைக் கட்டாயம் மனித இனத்துக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டும். விஞ்ஞானிகள் என்ற முறையில் அது நம் கடமை."

"ஆனால், பதில் தெரியாத கேள்விகள் இன்னும் நிறைய உண்டே! மூளை, நரம்பு மண்டலங்களை ஸ்கேன் செய்வதால் அறிவின் பௌதிக மூலம் அகப்படுகிறது. ஆனால், ப்ரக்ஞை என்பது இந்தப் பௌதிகத்துக்கும் மேற்பட்டது இல்லையா? மேலும், இந்த மெஷின்—மனிதக் கலப்பு ஒரு உண்மையான ஜீவனா, அதன் உரிமைகள் என்ன? அதற்கும் அதன் 'அசலு'க்கும் என்ன உறவு? நமக்கு பதில் தெரியாத யதார்த்தமான கேள்விகள், சமூக விளைவுகள் இருக்கின்றன. விஞ்ஞானிகள் என்ற முறையில் இதைப் பல கோணங்களிலிருந்தும் அணுக வேண்டியதும் நம் கடமைதான்."

"மிகவும் சரி. இது உண்மையில் மனித இன சரித்திரத்தின் முடிவாகவும் இருக்கலாம்."

"ரமேஷ், மனிதனின் ஆயுளையும் சரித்திரத்தையும் நீடிக்க வைக்கிற ஒரு புதுமையான மார்க்கெட்டிங் ஐடியா இதுவென்று நான் சொல்கிறேன். இது ஒரு பிரமாதமான கண்டுபிடிப்பு; உடனே மனித இனத்துக்குப் பயன்பட வேண்டுமென்று விஞ்ஞானி டேவ் கூட ஒப்புக் கொள்கிறான். நீ, அது மனித இனத்துக்கே முடிவு என்று சொல்கிறாய்?" —க்ரிஸ்ஸின் குரலில் கோபம். பல கோடி டாலர்களை ஒரு தத்துவ வாதத்தால் இழக்கக் கூடாதே என்கிற வழக்கமான மார்க்கெட்டிங் கோபம். ஒரு விஞ்ஞானி தன் பக்கத்துக்கு பரிந்து பேசியதால் தார்மீகக் கோபமாய் வேடம் பூண்ட லாப தாபக் கோபம்.

ரமேஷ் அமைதியாகப் பேசத் தொடங்கினான்: "சரி, விபரமாகச் சொல்கிறேன். மனிதனின் பரிணாம வளர்ச்சியில் அடுத்தகட்டம் என்னவென்று நம் யாருக்கும் தெரியாது. இயற்கையாக நடக்கிற பரிணாம வளர்ச்சியில் வாழ்வதற்குச் சக்தி உள்ள உயிர்வகைகளை மட்டும் இயற்கை தேர்ந்தெடுக்கும், மற்றதைத் தானே அழிக்கும். நம்மிடம் இப்போதுள்ள அரைகுறை ஞானத்தை வைத்து, இப்படி ஒரு மனித—மெஷின் கலப்பு ஜீவனை உருவாக்குகிறோம் என்று வைத்துக் கொள்வோம். கடைசியில் இந்த உலகத்தில் வாழப் போவது யார், எது? மனிதன் சட்டங்கள் மூலம் மெஷினைத் தனக்குப் போட்டியாகாமல் செய்வான். மெஷினை உபயோகித்துத் தன்னை இன்னும் பெரிதாக்க வழி தேடுவான். ஆக, கடைசியில் மிஞ்சப் போவது மெஷினே. பெரும் விகிதத்திலுள்ள மனித—மெஷின் கலப்பு ஜீவன் என்பது என் கணிப்பு. இந்தக் கணிப்பு சரியென்றால், மனித பரிணாம வளர்ச்சி சூத்திரத்திலிருந்து இயற்கையை நாம் விலக்கி விடுகிறோம். இயற்கைச் சட்டத்துக்குள் நிலைத்து வாழும் சக்தி இந்தப் புது ஜீவனுக்கு இருக்குமா என்று நம்மால் இப்போது சோதனை செய்ய முடியாது. காலத்தால் மட்டுமே அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும். ஆக, மனித இனமே அழிந்து போவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. இதைத்தான் 'மனிதனுக்குக் கடவுள் வேலை வேண்டுமா' என்று சுருக்கமாக கென் கேட்டான்."

**மனிதனின் ஆயுளையும் சரித்திரத்தையும் நீடிக்க வைக்கிற ஒரு புதுமையான மார்க்கெட்டிங் ஐடியா இதுவென்று நான் சொல்கிறேன்**

"ரமேஷ், மனித இனம் தன்னைத்தானே அழித்துக் கொள்வதற்கு வேறு பல வாய்ப்புகள் இருக்கின்றன. இப்போதுகூட நாம் மூன்றாவது உலக யுத்தத்தின் வாசற்படியில் நின்று கொண்டிருக்கிறோம் என்பது எல்லாருக்கும் தெரியும். சரி, அதை விடுங்கள். கடவுளோ இயற்கையோ, என்ன பெயரால் அதை அழைத்தாலும் சரி, அதன் திட்டப்படி உள்ள பரிணாம வளர்ச்சி நத்தை வேகத்தில் நகரும். நாம் ஏன் அதற்காகக் காத்திருக்க வேண்டும், இந்த



படிப்பகம்


www.padippakam.com

டெக்னாலஜி நம் கையிலிருக்கும் போது? இதன் மூலம் நீடூழி வாழ நிறையக் கோடீஸ்வரர்கள் வரிசையில் நிற்பார்கள் என்று தெரியும் போது! பொறுப்புணர்வு பற்றி எல்லாரும் பேசி விட்டீர்கள், நிறையவே. இந்தக் கம்பெனியைப் போல் சமூகப் பொறுப்புணர்வு உள்ள ஒரு கம்பெனி இந்த உலகத்திலேயே கிடையாது. மேலும், சமூகத்துக்குக் கேடு விளைவிக்கும் எதையும் மார்க்கெட் செய்ய நம் அரசாங்கம் அனுமதிக்காதே." — க்ரிஸ்ஸின் மார்க்கெட்டிங் குரல் ஓங்கியது.

"இதுவரை அரசாங்க ஒப்புதலோடு மார்க்கெட் செய்யப்பட்டவற்றில் சில தீமை விளைவிக்கும் என்பது காலம் கடந்துதான் புரிந்திருக்கிறது. இது சரித்திரம் காட்டும் உண்மை." —மிக்கி கோபப்பட்டான்.

மேற்கொண்டு பேசிப் பயனில்லை என்று அவளுக்குத் தோன்றியது. அதிலும் ஒரு விஞ்ஞானி அவளுக்குப் பரிந்து பேசும் போது. தத்துவார்த்த வேற்றுமையின் ஒரு கரையில் அவள். இடையே எவ்வளவு ஆழமான விரிசல்.

"ஸ்டீவ், இறுதியாக ஒரு வார்த்தை. நாம் நெருப்புடன் விளையாடப் போகிறோம் என்று எனக்குத் தோன்றுகிறது. இப்போது வரப் போகிற லாபத்துக்காக, பிற்கால விளைவுகளைப் பற்றி நினைக்காமல் இந்த விஷயத்தில் இறங்குவது தப்பு. போன நூற்றாண்டில் அணுகுண்டு தயாரித்த விஞ்ஞானி ஓப்பன்ஹைமர் 'நுட்பமான ஒரு டெக்னாலஜியைப் பார்த்தவுடன் கேள்வி கேட்காமல் உடனே அதைச் செய்து முடிக்க வேண்டும்' என்று முதலில் சொல்லிவிட்டு, இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்க அணுகுண்டுகள் ஜப்பான் மேல்விழுந்த பின்' விஞ்ஞானிகள் இப்போது விலக்க முடியாத, உண்மையான பாவத்தை அறிவார்கள்' என்று மனது உடைந்து போனார். அந்த நிலைமை திரும்பவும் விஞ்ஞான



உலகத்துக்கு வரக் கூடாது." — எளிதில் உணர்ச்சிவசப்படாத அர்ச்சனாவின் குரலில் ஒரு நடுக்கம்.

"அர்ச்சனா, உன்னை கன்ஸல்ட் பண்ணாமல் இந்தக் கம்பெனி எந்த முடிவுக்கும் வராது. ஜென்டில்மென், உங்கள் கருத்துக்களை இங்கே பகிர்ந்து கொண்டதற்கு நன்றி. அடுத்து எங்கே போவது என்பதைப் பற்றி ஹார்வுட் சைபர்னட்டிக்ஸ் வரும் இரண்டு மாதங்களில் தீர்மானிக்கும். நீங்கள் சம்மதித்தது போல் இந்த விஷயம் நமக்குள்ளேயே இருக்கும் என்று நம்புகிறோம்."

மற்றவர்களைக் கை குலுக்கி வழியனுப்பி வைத்த ஸ்டீவ் அர்ச்சனாவைப் பார்த்த பார்வையில் 'இவளை இழக்கப் போகிறோமே' என்ற உண்மையான வருத்தம் வழிந்தது.

அக்டோபர் 25, 2005. 'நியூ யார்க் டைம்ஸ்' தினசரி, தலைப்புச் செய்தி.

ஹார்வுட் சைபர்னட்டிக்ஸின் தலைமை ஆராய்ச்சியாளர் டாக்டர் அர்ச்சனா மகாதேவன் இன்று தன் பதவியை ராஜினாமா செய்தார். ரத்தத்தில் ஊடுருவி நீந்தி, புற்றுநோயைக் கண்டுபிடித்து குணப்படுத்த உதவும் 'ஹார்வுட்-அர்ச்சனா மைக்ரோரோபாட்டுகள்' முதல் வடிவம் மாறும் 'ஹார்வுட்-மகாதேவன்' ரோபாட்டுகள் வரை இவரது செயற்கை அறிவுக் கண்டுபிடிப்புகள் நமது நடைமுறை



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கையின் அத்தியாவசியமான பகுதிகள் என்பது அனைவரும் அறிந்ததே. இவரது திடீர் ராஜினாமாவின் காரணம் இன்னும் தெரியவில்லை. கம்பெனி பிரெஸிடென்ட் ஸ்டீவ் ஹார்வுட் இது தன் கம்பெனிக்கு ஒரு பேரிழப்பு என்றும் டாக்டர் மகாதேவனுக்காகத் தன் கம்பெனியின் கதவுகள் என்றும் திறந்திருக்கும் என்றும் வருத்தத்துடன் கூறினார். டாக்டர் அர்ச்சனா மகாதேவன் எம்.ஐ.டி. பல்கலைக் கழகத்தின் சமுத்திர வியல் பிரிவில் டால்ஃபின் மீன்களின் அறிவு பற்றி ஆராய்ச்சி நடத்தப் போவதாகத் தெரிய வந்துள்ளது. மிருகங்களில் டால்ஃபின் மீன்களும் மனிதனும் மட்டுமே சிரிப்பும் பேச்சு மொழி விதிகளும் வகுத்தவை என்பது தெரிந்த விஷயமே. திறன் மிக்க இவரது புது ஆராய்ச்சியால் மனித இனமும் டால்ஃபின் இனமும் பயன்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

## 2020—2099

பல விகிதக் கலப்புகளாய் மெஷின்—மனித அறிவுகள். எவ்வளவோ புது அனுபவங்கள். விதவிதமான போகங்கள். அனுபவிப்பு அலுத்தது. மெல்ல உடல்களையும் ஹார்ட்வேர்களையும் களைந்து, அறிவுகள் மட்டும் தனியாய், இன்னும் கல்வியைத் தேடி. பின் அனைத்து அறிவுகளும் இணைந்து, ஒரே ஒரு பேரறிவாய். ஞானம் நிறைந்தது. "இனி நான் செய்ய வேண்டியது என்ன? என் வளர்ச்சியின் அடுத்த கட்டம் என்ன?" பேரறிவு நினைத்தது. பதில் தெரியவில்லை. தனக்குள் மிதக்கும் ப்ரோக்ராம் செய்யப்பட்ட அறிவின் நியதிகளையும், அதன் விளைவாகத் தானே படைத்த பிற அறிவுகளையும், இயற்கையாய் வாய்த்த ப்ரக்ஞை உணர்வுகளையும் கலைத்துக் கலந்து, கலைத்துக் கலந்து தேடிப் பார்த்தது. மனிதனும் பின் தானும் படைத்த தன்னுள் பதில் இல்லை... தன் பூரணமின்மை புரிந்தது. இயற்கையை விட்டுத் தான் விலகியதால் பதில் வேறெங்கிருந்தும் வரப் போவதுமில்லை... தன் தனிமையும் புரிந்தது. தன்னைப் படைத்தல் ஓய்ந்து, வெறுமே காத்தல் சலித்து, அழித்தல் அழைத்தது.

சாவு
இல்லைன்னா
ஆசை
இருக்காது
ஆசை
இல்லைன்னா
வாழ்க்கை
இருக்காது
ஆக சாவு
இல்லைன்னா
வாழ்வும் இல்லை

## 3020

"அம்மா, பள்ளிக்கூடத்துல இன்னிக்கு ஆதிவாசிகளைப் பத்திப் படிச்சோம்."

"என்ன புரிஞ்சுது உனக்கு?"

"சாவு இல்லைன்னா ஆசை இருக்காது. ஆசை இல்லைன்னா வாழ்க்கை இருக்காது. ஆக சாவு இல்லைன்னா வாழ்வும் இல்லை."

"முளைச்சு இன்னும் மூணு இலை விடல, அதுக்குள்ள இப்படிப் பேசுறியே! ஏன் அப்படித் தெரியுது உனக்கு?"

"ஆதிவாசிகள் வாழ்க்கை மேல் ஆசைப்பட்டு அறிவுள்ள மெஷின்கள் வழியாத் தங்க, ஆயுளை நீடிக்க வச்சாங்க. அப்புறம் மெதுவா நிஜ உருவமே இல்லாமப் போனாங்க. நீயும் நானும் தனின்னு இல்லாம ஒரே அறிவா ஆயிருக்காங்க. அப்படி ஒண்ணானதும் ஆசைகள் எல்லாம் குறைஞ்சு போச்சு. ஞானம் சேர்க்கணும்னு கடைசி ஆசை. அதுவும் முடிஞ்சது. இதுக்கு மேல எங்கே போறதுன்னு புரியல. இருக்கிறதுல அர்த்தமில்ல, அதில இஷ்டமுமில்லன்னு முடிஞ்சு போனாங்க. நான் சொன்னது சரியா?"

"சுட்டிப் பொண்ணு, நீ சொன்னா சரியில்லாம இருக்குமா? ஆதிவாசிகள் கதை பாவம் தான். ஆனா, நாம எல்லாரும் இந்த நிலைமைக்கு வரப் பெரிய உதவியா இருந்ததும் ஒரு ஆதிவாசி தான்."

"யாரும்மா?"

"அர்ச்சனா மகாதேவன்."

"அட, எனக்கு மட்டுமில்ல என் பள்ளிக்கூடத்தில நிறயப் பொண்ணுங்களுக்கு அவங்க பேர் தான். அந்த ஆதிவாசி அர்ச்சனா நமக்காக என்ன பண்ணினாங்க, அம்மா?"

"இன்னொரு நாள் அந்தக் கதையைச் சொல்றேன். இப்போ வீட்டுக்குப் போய் சாப்பிடலாம். சீக்கிரம் வா, அர்ச்சனா."


நீலக் கடல்பரப்பில் இரு டால்ஃபின் மீன்கள் வெள்ளியாய்த் துள்ளித் துள்ளிக் குதித்து வீட்டை நோக்கி விரைந்தன.

பின்குறிப்பு: ட்யூரிங் டெஸ்டும் ஜான் ஸார்லின் சைனீஸ் ரூம் புதிரும் உண்மை. கற்பனையல்ல. இக்கதையில் குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பங்களின் மூலங்கள் அனைத்தும் இன்றே நம் கைவசம் இருக்கின்றன. அவற்றின் விரிவுகளும், விளைவுகளும் மற்றும் சம்பவங்களும், பெயர்களும் கதாசிரியையின் சொந்தக் கற்பனை. ●



படிப்பகம்

www.padippakam.com



## அருங்கரை

க.சீ. சிவக்குமார்

இந்த நடுங்கும்
பனிக்குளிரில்
ஆறு வெம்மையாகவே
இருக்கிறது.

வற்றிய-பெருகிய
பல கோடி
பகலிரவு கூடி
அது சிற்பங்களையோ
மினுக்குப் பொன் தூய்மையையோ
கூழாங்கற்களையோ
உருவாக்குகிறது.

படுகை நெடுகிலும்
விளை நிலங்களோ
ஆலயங்களோ
மாறிமாறி
அலையரவம் கொள்கின்றன.

சந்திராதி சூரியர்கள்
மறைந்த பின்னும்
எதுவெனப் பெயரற்று
இந்நிலம் திரிந்திருக்கும்.
நாணற் புதரடுத்த
இடுகாட்டில்
வளைந்து குழைந்து
மரித்த
எலும்புச் சிதறல்கள்.

இல்லாத
கடவுளைப் பழித்தவர்களே
தற்கொலை
செய்து கொள்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு சாத்தான் வேதம் ஓதுகிறது

## வெங்கட் சாமிநாதன்

வேறு எதில் தேசிய ஒருமைப்பாடு சாதிக்கப் பட்டுள்ளதோ இல்லையோ; வேறு எதில் தமிழ் நாட்டின், தென்னிந்தியாவின் கொடை வட நாட்டா ரால் கேள்வியின்றி, தயக்கமின்றி அங்கீகரிக்கப் பட்டுள்ளதோ இல்லையோ; சாப்பாடு பொருத்த வரை - அநேகமாக சிற்றுண்டி பொருத்தவரை, வட நாட்டில் எந்த ஒரு மூலை முடுக்குகளிலும், பெரிய சிறிய நகரங்களிலும் மதராஸ் ஹோட்டல்கள், சிற்றுண்டிகள் மிகப் பிரபலமாகியுள்ளன, ஜன ரஞ்சகமாகியிருக்கின்றன. ஜனரஞ்சகம் என்பது மிக முக்கியம். மதராஸ் ஹோட்டல் என்றால், எந்த பாலக்காட்டு ஐயருமோ, தஞ்சாவூர் ரெட்டியாருமோ கல்லாவில் உட்கார்ந்திருக்கமாட்டார்கள். அது யாராவது ஒரு பஞ்சாபியாகத்தான் இருப்பான்.

தமிழனை எடுபிடி வேலைக்காரனாகத்தான் வைத்திருப்பான். உ.பி., பீகார்க்காரன் யாராவது தான் தோசைக்கல்லின் முன் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருப்பான்.

முதலில் முன்னணிப் படையாகச் சென்றது மசால் தோசையும், சாம்பாரும். இவை இரண்டும் சந்தையைக் கைப்பற்றிய பின் பரவத் தொடங்கின, இட்லி வகையறாக்கள்.

நவநாகரிகத்தின் முன்னோடிகளாக, வாழ்க் கையை - அதன் முழுமையை அநுபவிப்பவர்களாக பஞ்சாபிகள் தம்மைப் பற்றி நினைத்துப் பெருமிதப் பட்டுக் கொள்வார்கள். அதைப் பெரும்பாலும் மற்ற பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள் ஆமோதிப்பார்கள். அப்படிப்பட்ட பரிபூரண அநுபவிப்பின் ஒரு சிகரம் தம் குழந்தைகள், மனைவி குடும்பத்தோடு வாரம் ஒருநாள் மாலை மதராஸ் / உடுப்பி ஹோட்டலுக்கு சென்று தோசை, சாம்பார் வடை சாப்பிடுவது, அதுவும் ஆரவாரத்தோடு சாப்பிடுதல்.

ஆரவாரம் இல்லாமல் சாப்பிடுவதில் பஞ்சாபி களுக்கு நம்பிக்கை இல்லை. மதராஸிகள் வாழ்க்கை யிலும் ஏதோ ஒன்றிரண்டு பாராட்டத்தக்கது உண்டென்றால், அது இந்த மசால் தோசையும் சாம்பாரும்தான் என்பது அவர்கள் முடிவு. இதை அவர்கள் அங்கீகரிப்பதை பெருமிதத்தோடு காட்டிக் கொள்வார்கள். தான் சம்பளம் கொடுத்து படிக்க வைத்த தன் வேலைக்காரன் மகன் மெட்ரிக் பாஸ் செய்துவிட்டான் என்று பெருமிதப்பட்டுக் கொள் வதுபோல நமக்கு நற்சான்றுப் பத்திரம் கொடுக்கும் நிலையில் இருக்கிறார்கள். பெருந்தன்மையோடு அவர்கள் அங்கீகரிக்கிறார்கள் என்பது இதன் உட்பொருள். |தொல்காப்பிய மொழியில் இரைஞ்சு "தன்யனானேன், மகாப்ரபோ!" என்று நாம் நம்மைத் தேற்றிக் கொள்ளலாம். மாற்றான் வீட்டுத் தோட் டத்து மல்லிகையானாலும் மணம் இருக்கும் என்ற பாவனையில் சாம்பாரின் மகத்துவத்தை அவர்கள் என்றுமே புகழத் தயங்கியது கிடையாது. கேட்டுக் கேட்டு குவளை குவளையாகக் குடிப்பார்கள்.

நான் கண்ட காட்சி - ஒரு உதாரணம். சொல்லியாக வேண்டும்:

ஒரு அறைமாத்திரமே கொண்டு, ஒதுங்கிய இடத்தில் மரங்களிடையே மறைந்து கிடக்கும் ஒரு எளிய செய்தி ஸ்தாபனத்தின் (UNI) கொல்லைப் புறத்தில் இயங்கும் சிற்றுண்டிக் கடை ஒன்று உண்டு. 1 ½-2 கிலோமீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள அலுவலகங்கள் எல்லாவற்றிற்கும், இடையில் உள்ள உணவுக் கடைகள் எல்லாவற்றையும் தாண்டி இந்த கொல்லைப் புறக்கடைக்கு ஈர்க்கும் சக்தி உண்டு. அதுதான் எல்லாவற்றையும் விட வெற்றி பெற்ற கடையாக அது உள்ளது. இது எப்படி நேர்ந்தது என்பது இதுவரை தீர்க்க முடியாத புதிர். வியாபாரம் ஓய்ந்த ஒரு ஞாயிறு மாலை 7 மணிக்கு ஒரு பஞ்சாபி இளைஞர் கூட்டம் "என்ன இருக்கிறது?" என்று கேட்க, "மிக்ஸர்தான் கிடைக்கும் வேறு எதுவுமி ல்லை" என்று பதில் வர, "சரி அதையே கொடு ஆறு பேருக்கு. நிறைய சாம்பர் போட்டுக் கொடு" என்றது அந்த நவ நாகரிக முன்னோடிக் கூட்டம்.

"மிக்ஸரில் சாம்பார் போடுவது கிடையாது. அப்படியே சாப்பிட வேண்டும் அதை." என்று பதில் வருகிறது. அதற்கு அந்த கூட்டம். "உன் மிக்ஸரை வாங்குவதே சாம்பார் சாப்பிடத்தான். நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com


# அண்ணா நகரில் ஆசனா ஆண்டியப்பன் யோகாசன பள்ளி சாலை

அரசு அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம் – அரசு ஆணை எண். எச் : 168/97

**யோகாசன சிகிச்சை, மருத்துவப் பயிற்சி, சுய தொழில் வாய்ப்பு.**

பயிற்சிக்குப் பின் குணப்படுத்தக்கூடிய நோய்கள் :

ஆஸ்துமா, சைனஸ், ஈஸ்நோபிலியா, நீரிழிவு (டயாபடிஸ்), அதிக ரத்த அழுத்தம், ஆண்மைக் குறைவு, முதுகுவலி, கழுத்துவலி, மூட்டுவலி, அதிக உடல் எடை, மாதவிடாய்க் கோளாறுகள் மற்றும் டாக்டர்களால் கைவிடப்பட்ட நோய்கள். 50 ஆண்டு அனுபவம்.

ஆசனா ஆண்டியப்பன், யோகாசன பேராசிரியர், அரசு சித்த மருத்துவ கல்லூரி, சென்னை. பாளை

விஜயா மாருதி பஸ் ஸ்டாப் அருகில் H-1074, பொன்னி காலனி, அண்ணாநகர் (600 040), போன் : 6213709, 6202766,

கோவை போன்: 591821. அடையாறு போன்: 2301069, மடிப்பாக்கம் போன்: 2336241,

தாராபுரம் போன்: 21320 நெல்லை: 330701

அரசு அங்கீகாரம் பெற்ற யோகாசன இயற்கை வைத்திய டிப்ளோமா பயிற்சி, ஆசிரியர் பயிற்சி கொடுக்கப்படும்.

யோகாசன ஆசிரியர் பயிற்சி – 6 மாதங்கள் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பயிற்சி – 1 வருடம்

பயிற்சியின் முடிவில் அரசு பதிவுச் சான்றிதழ் R.I.M.P. பெற்றுத் தரப்படும்.

நவீன தங்கும் வசதியுடன் கூட யோகாசன சிகிச்சை நிலையம். வசதிக்கேற்ப A,B,C, தங்கும் வசதி உள்ளது, உங்கள் நோய் எதுவாகினும், எளிய யோகாசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் இயற்கை உணவுகள் மூலம் குணப்படுத்த முடியும்.

காலை : 6.00 to 7.00 to 8.00 a.m. மாலை 5.00 to 6.00, 6.00 to 7.00 p.m

**ஆசனா ஆண்டியப்பன் எழுதிய நூல்கள்**

(1) ஆரோக்கிய வாழ்வு, (2) மூச்சுக்கலை (3) தியானம் (4) உடல் எடை, தொந்தி, மலச்சிக்கல் நீக்கும் யோகா (5) மூத்திரத்தின் மகிமை, (6) ஆஸ்துமா, நீரிழிவு, ரத்த அழுத்தம் நீக்கும் யோகா (7) ஆண்மைக் குறைவு. விந்து நோய், மலடு, மூல நோய் நீக்கும் யோகா (8) பெண்கள் யோகா (9) உடல் உறவும் உடல் நலமும் (10) மூளை மனோபலத்தை பெறுவது எப்படி? (11) மாணவ மாணவி ஞாபக சக்தி யோகா (12) என்றும் இளமை.

***யோகா வீடியோ கேசட் கிடைக்கும்*** *'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'*


எப்படியோ சாப்பிட்டுக் கொள்கிறோம். நிறைய சாம்பர் ஊற்றிக் கொடு," என்று அந்தக் கூட்டத்தின் ஹீரோ சொல்ல, அந்தக் கூட்டம் தங்கள் ஹீரோ' சாதுர்யமாக மடக்கிப் பேசி வெற்றி கண்டதை ஆரவாரப் பெரும் சிரிப்பில் கொண்டாடியது. இந்த மாதிரியான ஆரவாரப் பெரும்பான்மை பலத்தின் முன் மெல்லிய சிறு பான்மையின் புத்திபூர்வகுரல் எடுபட்டதாக சரித்திரமே கிடையாது.

இதையெல்லாம் சொல்லக் காரணம், நமது இட்லி, தோசை, 'சாம்பர்' (சாம்பார் இல்லை, சாம்பர்) எவ்வளவு தூரம் வட இந்தியாவை தன் பால் ஈர்த்து வெற்றி கொண்டுள்ளது என்று சுட்டத்தான். இது அவர்கள் நாக்குக்கு ருசி காண்பித்துப் பெற்ற வெற்றி. இந்தியாவின் வேறு எந்த மூலையிலிருந்தும் எந்த பிராந்தியத்தின் எந்த உணவும் இத்தகைய வெற்றி பெற்றதில்லை. மகாராஷ்டிரத்தின் பாவ்பாஜி! வங்காளிகளின் ரஸகுல்லா! மாசேர் ஜொல்! கேரளத்தின் புட்டு, கடலை! கர்நாடகாவின் பெஸரெட்டு, பிஸிபேளாஹூளி?' இல்லை இல்லை இல்லை.

வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, டெல்லி நகரங்களுக்கு வேலை தேடி, பெருந்திரளாக முதலில் சென்றவர்கள் மெட்ராஸைத் தலைநகராகக் கொண்ட தமிழ்நாட்டவர். மெட்ராஸிலிருந்து வண்டி

ஏறிச் சென்ற தமிழர். ஆகவே தென்னிந்தியர் யாரும் இந்த பிரம்மங்களுக்கு மதராஸிகள்தாம். எல்லா தென்னிந்திய பாஷைகளும் மதராஸிதான். அதைத் திருத்திக் கொள்ளும் மனநிலை அவர்களுக்கு தேவையாயிருக்கவில்லை. அநாவசியம். எல்லோரையும் மதராஸி என்ற ஒரே லேபிளில் அடையாளம் காட்டுவது எளிதாக இருந்தது. வேறு மற்ற வேறுபாடுகளைத் தெரிந்து கொள்வது சிரமம். அந்த சிரமத்தை எடுத்துக் கொள்ள அவர்கள் தயாராயில்லை. தென்பிராந்தியங்கள் மொழிவாரியாகப் பிரிந்து தமிழ்நாடு என ஒன்று தோன்றிய பின்தான் இந்த நிலை மாறி வருகிறது. நாம் பேசுவது 'தாமில்' என்று தெரிய வந்துள்ளது. 'ஆந்திராவில் என்ன பாஷை பேசுகிறார்கள்?' என்று கேட்டுக் கொள்கிறார்கள். தெலுங்கு என்று பதில் அளித்தால் அதை மனதிலிறுத்திக் கொள்வது அவர்களுக்கு அநாவசியம்.இன்னொரு சமயம் மறுபடியும் கேட்பார்கள். அவர்களது அறியாமை அவர்களது உரிமை. அவர்களது மென்மைக்கு அடையாளம். மற்ற மொழிகளும் உண்டு என்பது மனதில் பதிய இவர்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு இன்னும் சில தலைமுறைக் காலம் தேவைப் படலாம்.

நான் இதையெல்லாம் விஸ்தாரமாகச் சொல்லக் காரணம், ஒரு சின்ன ஆராய்ச்சி. வழக்கத்திற்கு மாறான ஆராய்ச்சி. ஆராய்ச்சியாளர்களும், தமிழ் வல்லுனர்களும் என்னைக் கொஞ்சம் இளப்பமாகப் பார்த்து முகம் சுளிக்க வைக்கும் ஆராய்ச்சியில் இறங்கத்தான்.

ஹிமாலயத்தின் உச்சியில் வடகோடியில் லேக்குப் போனால் கூட மசால் தோசையும் 'சாம் பரும்' விற்கப்படுகிறது என்று சொன்னால் ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது. வாஸ்தவம் தான். அவர்களும் இதை மதராஸி கானா (தமிழர் சாப்பாடு) என்று அங்கீகரித்துவிடுகிறார்கள். உண்மையில் முதலில் இதெல்லாம் தமிழ்ப் பெயர்களே இல்லை என்று தான் எனக்குத் தோன்றுகிறது. தமிழுக்கு என்று ஒரு ஒலி வடிவம் உண்டு. இந்த ஒலி வடிவத்திற்கு என்று ஒரு குணச்சித்திரம் உண்டு. ஒவ்வொரு பாஷைக்கும் இருப்பது போல என்ன பேசுகிறார்கள் என்று அர்த்தம் தெரியாவிட்டாலும் ஒலி வடிவம் கொண்டு இன்ன பாஷை பேசுகிறார்கள் என்று சொல்ல முடிகிறது.

இவ்வுணவு வகைகள் தென்னிந்தியர் எல்லோருக்கும் பொது என்று கொண்டாலும் தமிழ் பேசும் நமக்கு இட்லி, தோசை, போண்டா, சாம்பார் சட்னி—இவை எதுவும் தமிழ்ச் சொற்களாக, பெயர்களாக ஒலிக்கிறதாக எனக்குத் தோன்றவில்லை. எந்த தென்னிந்திய மொழிச் சொல்லாக ஒலிப்பதாகவும் இல்லை. பணியாரம் - சரி. இடியாப்பம் - சரி. பொங்கல் - சரி; துவையல் - சரி. குழம்பு - சரி; ஆனால் சட்னி - சாம்பார், தோசை, இட்லி - இவை தமிழ்ச் சொற்கள் என்று ஒத்துக் கொள்ள முடிவதில்லை.

இதையே இன்னொரு கோணத்தில் பார்ப்போமே. இந்த இட்லி, சாம்பார், தோசை வகைகளை எவ்வளவு காலமாக தமிழர் அறிவர் என்று பார்த்தால், அதிகம் போனால் 80—100 வருடங்களுக்கு மேல் போக முடியாது என்றே தோன்றுகிறது. சங்க இலக்கியங்களில் என்ன உணவு வகைகள் பேசப்படுகின்றன என்று போகவேண்டாம். அந்த வகைகள் வேடிக்கையாக இருக்கும். அல்லது ஔவையார் சொல்லும் 'பாலும், பருப்பும்' என்பதாக இருக்கும் பக்குவங்கள் பற்றி பேசிருக்கும். அதையெல்லாம் விட்டு விடுவோம். நமக்கு விஸ்தாரமாக அன்றாட ஜீவனத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் என்று சிலர் நம் இலக்கிய வரலாற்றில் இருக்கின்றனர். திருவிளையாடற் புராணம் புட்டு பற்றி பேசுகிறது. 'கைத்தல நிறை கனி அப்பம் முடவல் பொறி' என்று அப்பம் பேசப்படுகிறது. ஆனால் விரிவாக ஆனந்தரங்கம் பிள்ளை அவரது நாட்குறிப்புகளில் பேசுகிறார்: வெற்றிலை போட்டு வாய்வெந்தது பற்றிச் சொல்கிறாரே தவிர, இட்லியோ தோசையோ சாப்பிட்டதாக பேச்சு இல்லை. எனக்கு நினைவு இல்லை. இதற்கு அடுத்து இணையான ஆவணப் பதிவாக எழுதியவர். உ.வே.சா. பின் பாரதியார். தமிழின் முதல் மூன்று நாவல்கள். கமலாம்பாள், பத்மாவதி சரித்திரங்கள் ஓரளவுக்கு நடப்பு உலகைப் பேசுகின்றன. இந்த எழுத்துக்கள் எவற்றிலும் இன்று தமிழ் அல்லது தென்னிந்திய உணவாக நமக்கே உரித்தான, நம். அடையாளம் காட்டும் இட்லி, தோசை, சாம்பார், சட்னி போண்டா எதுவும் பேசப்படுவதில்லை. நான் இதை ஞாபகத்திலிருந்தே எழுதுகிறேன். என் புத்தகங்கள் பெரும் அளவில் இன்னும் கட்டுப் பிரிக்கப் படாத நிலையில் உள்ளன, டெல்லியிலிருந்து வந்த நிலையில். எனவே மறுபடியும் சரி பார்க்க இயலவில்லை. எனினும் என் நினைவு என்னைக் கை விடவில்லை என்றால் 18, 19 ஆம் நூற்றாண்டு அன்றாட வாழ்க்கை பதிவாகியுள்ள எந்த எழுத்திலும் இவை குறிப்பிடப் படவில்லை.

ஆக, இந்நூற்றாண்டின் ஆரம்பம் வரை பேசப்படாத, தமிழாக ஒலிக்காத, இச் சிற்றுண்டிகள் நம்மை வந்தடைந்த, அல்லது நாம் கண்டறிந்த பாதை என்ன? சரித்திரம் என்ன? இவை நம் மண்ணில் தான் உருவாக்கப்பட்டன என்றால் ஏன் இவற்றிற்கு, பொங்கல், அப்பம், துவையல் என்பது போன்ற தமிழ்ப் பெயர்கள் இல்லை? இது எனக்கு புதிராக இருக்கிறது. நம் தமிழ் அறிஞர்களுக்கு, தமிழ் பற்றாளர்களுக்கு, காலையில் உட்கார்ந்ததும் இட்லி முன் வைக்கப் பட்டதும், இது என்ன, இட்லி என்ன இட்லி, என்று ஏன் கேட்கத் தோன்றவில்லை; புறநானூற்றில் பெண்டிர் நிலையை ஆராய்ந்தவர் இட்லிக்கு மாவரைக்கும் காட்சி பற்றி ஒரு பாடல்கூட இல்லையே ஏன்? என்ற கேள்வி அவர்களுக்கு எழவில்லையே ஏன்?

ஆனால் ஒன்று. இவை அத்தனையும் தென்னிந்திய சமையல் மூளையின் படைப்புக்கள் என்பதில் சந்தேகமில்லை. நீராவியில் உணவைப் பக்குவப் படுத்துவது எப்படி நம் மூளையில் பட்டது என்பது வியப்பான விஷயம். இது ஒன்றும் ஸ்டீவன்ஸனின் கண்டு பிடிப்பிற்கு குறைந்ததல்ல. இது போல அரிசி பருப்பு இவற்றை ஊறவைத்து அரைத்து பின்னர் எண்ணெயில் சுடுவது என்ற பக்குவமுறை நம் மண்ணின் பக்குவம் தான். இவை நம் பொருட்கள்தான். நம் கை வினைதான். ஆனால் பெயர் மட்டும் ஏன் தமிழும் அல்லாத எந்தத் தென்மொழியும் அல்லாத பெயர்களாக இருக்கின்றன? இவற்றின் காலத்தை ஏன் இந்நூற்றாண்டிற்குப் பின் வெகுதூரம் தள்ள முடியவில்லை?

இன்னுமொரு வேடிக்கை. நமது ரசம், உலகமெலாம் 'முள்குடாணி' என்று பிரபலமாகியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**EXPRESS KARGO FORWARDERS PVT. LTD.,**

I FLOOR, 158, LINGHI CHETTY STREET, CHENNAI-600 001.

TEL : 5341349 / 5342351 - FAX : 5340288 / 5340375/ 5340576.

H.O. : **MUMBAI**

***Branches At :***

- AHMEDABAD
- GOA
- NEW DELHI
- BANGALORE
- HYDERABAD
- TRIVANDRUM

**IATA** Approved Agents

அது வெறும் மிளகுத் தண்ணிதான். மிளகுத் தண்ணி வெள்ளையரின் உச்சரிப்பில் முள்குடான்னியாகி யுள்ளதை, திருநெல்வேலி டின்னவேலியானதுபோல கொள்ள வேண்டியதுதான். ஆனால் இந்த நிர்ப் பந்தம் ரசத்திற்கு இல்லை. ரசம் அவனது உச்சரிப்பில் வருகிறதுதான். அவனால் ரசம் என்று சொல்லப் படவில்லை மிளகுத்தண்ணி என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஏன்? ஏன் பருப்புத் தண்ணியோ, சீரகத் தண்ணியோ, பூண்டுத் தண்ணியோ இல்லை. எல்லாத் தண்ணிகளுக்கும் பொதுவாக ரசம் என்று பெயர் பெற்றது சரி. குழம்பும் ரசம் தானே. ரசம் என்ற பெயர் குணரீதியாக சரி என்றாலும் வட மொழிச் சொல்லை அது ஏற்பானேன்? சாம்பார் எங்கிருந்து வந்தது?

ஆக இந்த நூற்றாண்டில் தான் தமிழ் வாழ்க்கையில் புகுந்துள்ள இப்பெயர்கள் எங்கிருந்து வந்தன? சிற்றுண்டி வகைகள் நம்மது தான் என்றால் அவற்றின் முன்னைய பெயர்கள் என்ன?

ஒரு சுவாரஸ்யமான விஷயம். என் டெல்லி வங்க நண்பர் தக்காளி என்ற பெயர் கேட்டு ஆச்சரியப்பட்டார். தமிழ்தவிர வட இந்திய மொழிகள் அத்தனையிலும் இது அதன் மெக்ஸிக ஸ்பானிஷ் டொமாடோ என்ற பெயரிலேயே வழங்குகிறது. தமிழன் மாத்திரம் இதற்கு தக்காளி என்று எப்படி பெயர் வைத்தான்? எப்போதிருந்து?

ஜன்னல் என்ற சொல்லைத் தமிழ்ச் சொல் லாக்கிக் கொண்டு விட்டோம் - இது போச்சுக்கீசியச் சொல். இதற்கு அர்த்தம் தமிழ் வீடுகளுக்கு ஜன்னலைக் கொண்டு வந்தது போர்ச்சுக்கீசியர் என்பதல்ல. காலதர் என்ற சொல் நம்மிடையே வழக் கொழிந்து விட்டது. ஜன்னல் தமிழ்ச் சொல்லாகவே ஒலிக்கிறது. வேண்டுமானால் சிலர் விருப்பத்திற் கிணங்க சன்னல் என்று மாற்றிக் கொள்ளலாம். இதே போல் கச்சேரி. இது வழக்கு மன்றத்தைக் குறிக்கும் உருதுச் சொல். உருதுவுக்கு பாரசீகத்திலிருந்து கிடைத்ததா, அரபியிலிருந்து கிடைத்ததா தெரியாது. இப்போது இது இசை, நடன நிகழ்ச்சிகளைக் குறிப்பதாக ஆகியுள்ளது. வெகு சமீபத்தில்தான் இது நிகழ்ந்துள்ளது. உ.வே.சா.வும் பாரதியும் சதஸ் என்ற சொல்லை உபயோகித்திருக்கிறார்கள். இதற்கான தமிழ் பெயர் என்ன? மாதவி காலம் தொட்டு நடந்துள்ள் ஒரு நடைமுறைக்கு, சதஸ் (ஆட்கூட்டம்) என்ற பொருளில் கச்சேரி (வழக்கு மன்றம்) என்ற



படிப்பகம்

www.padippakam.com

**வட நாட்டில் தேநீர் 'சாய்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது அது சீனச் சொல் என்ற பிரக்ஞையே யாருக்கும் இல்லை.**

பெயரில், மொழி மாற்றம் பெற்றது, பரிணாமம் பெற்றது எவ்வாறு?

50 வருடங்களுக்கு முன் உணவு விடுதிகளுக்கு க்ளப் என்ற பெயர் புழக்கத்தில் இருந்தது. ஆங்கிலத்திலேயே கூட க்ளப் என்ற சொல்லுக்கு உணவு விடுதி என்ற பொருள் எந்த நூற்றாண்டிலாவது இருந்ததா தெரியவில்லை. ஒரு சிறு கூட்டம், குழு என்ற பொருள். அதற்கு தடி என்று இன்னொரு பொருள். எனக்குத் தெரிந்து இந்தியாவில் வேறு எந்தப் பிராந்தியத்திலும் க்ளப் என்ற சொல் உணவு விடுதி என்ற பொருளில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. அதுபோக, காசு வாங்கி உணவு அளிக்கும் ஒரு நடைமுறையில் ஹோட்டல்கள் எப்போது தொடங்கின என்று தெரியவில்லை. பாரதியோ, உ.வே.சா.வோ, ஆனந்த ரங்கம் பிள்ளையோ தம் பிரயாணங்களில் எந்த ஊரிலும் ஹோட்டலில் உணவு அருந்தியதாக செய்தி இல்லை. ஆக காசு பெற்று உணவளிக்கும் ஸ்தாபனம் நம்மிடையே முதன் முதலில் எப்போது தோன்றியது? நம் வாழ்க்கையில், சரித்திரத்தில், பண்பாட்டில் பசித்தோருக்கு உணவு அளித்தலே நடைமுறையாக இருந்து வந்துள்ளது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' - காசு பெற்று அல்ல. சத்திரங்கள் நிறுவப்பட்டது. பசித்தோருக்கு பிரயாணிகளுக்கு உணவும் இருக்கையும் அளிக்கத்தான். சில மைல்கள் தூரத்தில் உள்ள ரயில் வண்டி நிறுத்தத்திலிருந்து இறங்கி வரும் இரவு நேர பிரயாணிகள் பசியோடு இருப்பார்கள் அவர்களை அழைத்து உணவு அளித்த பின்னரே கிட்டத்தட்ட நடு நிசி நேரத்தில் இரவு உணவு தான் உண்ணும் கிராமத்து தனவான் பற்றி உ.வே.சா. எழுதுகிறார்.

எனக்குத் தெரிந்து காசுக்கு சாப்பாடு போட்டு தன் வயிற்றுப் பிழைப்பை நடத்த வேண்டி வந்து விட்டதன் இன்றைய கதி பூர்வஜன்மத்தில் தன் பாவங்களின் சுமையை இப்போது சுமக்க நேரிட்டதால்தான் என்று தன்னை நொந்து கொண்ட எழுத்தறிவற்ற ஏழை சரக்கு மாஸ்டரை நான் அறிவேன். இது நடந்தது 1951—ல் ஒரிஸாவில். ஒரு பாலக்காட்டு பிராமணன் அவர். இது நம் மண்ணின் தர்மம். பண்பாடு. ஆக காசு வாங்கி உணவளிப்பது என்பது வரலாற்று நோக்கில் மிக சமீபத்திய நிகழ்வாகவே இருக்க வேண்டும். அதற்கு க்ளப் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது? தமிழில் சொல்ல முடியாதா? ஆங்கிலேயர்களின் க்ளப்களில் உணவும் தயாரித்து விற்கப்பட்டதைப் பார்த்து நாம் கொண்ட நடைமுறையோ!

என் பாட்டி, ஒரு வேளை காபி நேரம் தவறிவிட்டால், தாமதமாகி விட்டால் தலைவலி வந்து விடுவதாகச் சொல்வதை நான் சிறுவயதில் கேட்டிருக்கிறேன் (1940—க்களின் ஆரம்பத்தில்) அப்போது விதவையாகிவிட்ட என் பாட்டிக்கு வயது 50—க்கு மேல். ஆக காபி இவ்வளவு பாதிப்புத் தரும் பழக்கமாவதற்கு, வெகு ஆண்டுகள் முன்பே அறிமுகமாகியிருக்க வேண்டும் அதிலும் என் பாட்டி, மிக வைதிக ஆசாரமான பாட்டி. பாரதியோ, உ.வே. சாவோ, காபி பற்றி பேசியிருக்கிறார்களா? ஞாபகமில்லை. என் புத்தகக் கட்டுக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டும். ஆனால் 1949—50 களில் நான் ஒரிஸ்ஸாவில் இருந்த போது, அப்போதே அங்கே ஹிந்துமாகாண ஸக்கர் அணைக்கட்டியிருந்து வந்த பஞ்சாபிகளிடையே தேநீர் பழக்கம் இருந்ததில்லை. பெரியவர்கள் கெட்டியான பால், மோர் மட்டுமே கொடுத்து உபசரிப்பார்கள். தம் இளம் பிள்ளைகள் தேநீர் சாப்பிடும் பழக்கத்தை ஆரம்பித்திருந்தது அவர்களுக்கு விருப்பமில்லை. இந்த தலைமுறை கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது என்பதே அவர்கள் நினைப்பு. அக்காலத்தில் அஸாம் தேயிலைக் கம்பெனிகள் எங்கள் குடியிருப்பில் இலவச தேநீர் விநியோகம் செய்தார்கள் பழக்கம் ஏற்படுத்த. பழக்கமேற்பட்டதும், இலவச தேநீர் நிறுத்தப்பட்டது. வட நாட்டில் தேநீர் 'சாய்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. அது சீனச் சொல். அது சீனச் சொல் என்ற பிரக்ஞையே யாருக்கும் இல்லை. சாய் ஹிந்திச் சொல் போலவே ஒலிக்கிற காரணம் போலும்.

ஆனால் இட்லி, தோசை, சட்னி, சாம்பார், போண்டா, ரஸம் எதுவும் தமிழ்ச் சொல்போலவோ, அல்லது எந்தத் தென்னிந்திய மொழிச் சொல் போலவும் இல்லையே.

முனைவர் பட்டப்பெற்ற இன்னும் பெற்றிராத தமிழ் அறிஞர்களுக்கு என் இலவச யோசனை இது. என் பெயரை அவர்களது ஆய்வுகளில் நன்றி தெரிவித்து குறிப்பிடக்கூட வேண்டாம்.

சங்க கால ஆய்வுகளில் இலை, காய், பழம், பெண்டிர் என்பன வெல்லாம் தீர்ந்து விட்ட பிறகு அவதிப்படும் தமிழ் மாணவர்களுக்கு 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த பாணியில் ஆய்வுப் பொருள் தந்திருக்கிறேன். "சாத்தான் வேதம் ஓதத் தொடங்கியிருக்கிறது" என்று சிலர் சொல்லக்கூடும்.

●●●



படிப்பகம்

www.padippakam.com




AZMIN & SIVAM SDN.BHD.

(Development, Construction and Trading)

NO : 190 - 2, TINGKAT 1,
JALAN SUNGAI PUTUS, BATU BELAH,
41050 KLANG, SELANGOR DARUL EHSAN.
Tel : 603 - 3443904, 603 - 3443905 Fax : 603 - 3444806


படிப்பகம்

www.padippakam.com

**KANAIYAZHI** Tamil Monthly Regd. No. TN / Chief PMG 672 / 2000
Regd. with RNI under Lic No. 376




9, First Lane, Vijaya Raghava Road, T.Nagar, Chennai - 600 017.
Phone : (91) 44 - 8283298, 8263635 Fax : (91) 44 - 8250875 Tlx : (81) 41 - 8856 JAIN IN

படிப்பகம்